
சுவடி : 40
ஏடு : 6
திசம்பர் 2016
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# வயிறு வளர்க்கவும், அதிகாரம் பண்ணவும் ஆங்கில மொழிவழிக்கல்வி எதற்காக? ஏன்? திராவிட மொழி மக்கள் - தமிழ்மொழி மக்கள் இந்தோ ஆரிய மொழி மக்கள் தன்னுரிமை - அறிவு வளர்ச்சி பெற வேண்டாமா?



உலகத்திலுள்ள மூன்றில் ஒரு பங்கு நாடுகளை ஆங்கிலேய வெள்ளைக்காரன், 1700க்குப் பிறகு 250 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

"இந்தியா" என்கிற ஆப்கானிஸ்தான், பர்மா உள்ளிட்ட பிரிட்டிஷ் இந்தியா, சுதேச இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா கண்டம், ஆப்பிரிக்கா கண்டம் இவற்றை முப்படைகளைக் கொண்டும் ஆங்கிலேயன் அடக்கி ஆண்டான். எல்லா நாடுகளிலும் மக்கள் பேசிய அவரவர் மொழியில் 5ஆம் வகுப்பு வரை கல்வி கற்க அவனே வழி செய்தான்.

ஆனால், எல்லா உயர் அதிகாரப் பதவிகளிலும் ஆங்கிலேயனையே அமர்த்தினான். அந்த உயர் அதிகாரிகளுக்கு உதவி செய்திட - ஏவல் வேலை செய்திட அந்தந்த நாட்டு மேல்தட்டு - பணக்கார - மேல்சாதி மக்கள் ஆங்கிலம் கற்றிட வழி செய்தான். 6ஆம் வகுப்புமுதல் எல்லாத்துறை - எல்லா நிலை உயர்நிலைக் கல்வியையும் 1836க்குப் பிறகும், 1857க்குப் பிறகும் ஆங்கில மொழி வழியில் படிக்க ஏற்பாடு செய்தான்.

மேலே சொல்லப்பட்ட எல்லா நாடுகளிலிருந்தும் ஆங்கிலேய வெள்ளையன் 1947 - 1949இல் வெளியேறிவிட்டான்.

ஆனால் ஆங்கில மொழியை மட்டும் - இந்தியாவிலிருந்தும், பாக்கிஸ்தானிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும், ஆப்பிரிக்காவிலிருந்தும் அகற்றப்பட, அந்தந்த நாட்டில் 1947இல் - 1949இல் உயர் பதவிகளில் இருந்த மேல்தட்டு - பணக்கார - பெருநில உடைமை - பெருந்தொழில்காரர்கள் வேண்டுமென்றே வழிகோலவில்லை.

**விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட அந்தந்த நாட்டு வெகுமக்கள் - பாட்டாளிகள் - கீழ்ச்சாதி - கீழ்த்தட்டு மக்களுக்கு "விடுதலை" என்பதன் அருமையை - "சுதந்தரம்" என்பதன் பெருமையை எந்த நாட்டிலும் அதிகாரத்திலிருந்த மேல்தட்டுக்காரர்கள் கற்றுத்தரவில்லை.**

விடுதலை வந்து 70 ஆண்டுகளுக்குப் பிறகும் - தமிழன், மலையாளி, தெலுங்கன், கன்னடக்காரன், மராட்டியன், குசராத்தி, பஞ்சாபி, அசாமி, காஷ்மீரி என்கிற எந்த இந்திய மொழிக்கார மக்களுக்கும் அவரவர் தாய்மொழி வழியில் எந்தத் துறைக் கல்வியையும் அங்கங்கே ஆட்சி செய்தவர்கள் தரவில்லை. இது உண்மை.

இந்தியாவில் 765 பல்கலைக்கழகங்களும், 39,000 கல்லூரிகளும் உள்ளன. தமிழ்நாட்டில் 460 பொறியியல் கல்லூரிகளும், 30 மருத்துவக் கல்லூரிகளும், 400க்கும் மேற்பட்ட கலை-அறிவியல் கல்லூரிகளும் உள்ளன.

இந்தியா முழுவதிலும் ஓர் ஆண்டில் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறுகிற மாணவர்-மாணவிகள் ஒரு கோடிப் பேர். இவர்கள் 1986க்குப் பிறகு ஆங்கில மொழி வழியிலும், இந்தி மொழி வழியிலும், அவரவர் தாய்மொழிகள் வழியிலும் படித்தவர்கள்.

இந்தியா முழுவதிலும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் 52000 பேர்கள் தான் சேரமுடியும்; பொறியியல் கல்லூரிகளில் 6 இலட்சம் பேர் தான் சேர முடியும்.

கலை-அறிவியல் கல்லூரிகளில் 25 இலட்சம் மாணவர்கள்தான் சேரமுடியும்.

பட்ட மேற்படிப்பில் சேருவதற்கு 20 இலட்சம் மாணவர்களுக்கு - மொத்தம் 6 இலட்சம் மாணவர்களே சேர இடம் இருக்கிறது.

எனவே, ஒரு மாணவன் எந்தத் தொழிற் படிப்பில் சேரவேண்டும் என்றாலும் கைநிறைய கைக்கூலி தந்துதான் சேரமுடியும். இது முதலாவது தடை.

மருத்துவப் படிப்பில் சேர்ந்திட 50 இலட்ச ரூபா முதல் ஒரு கோடி ரூபா வரை கைக்கூலி தரவேண்டும். இது இரண்டாவது தடை.

**எந்தப் பட்டப்படிப்பு, மேற்பட்டப்படிப்புப் படித்தாலும், தொழில் படிப்பும், தொழில்நுட்பப் படிப்பும் படித்தாலும், எந்த ஆராய்ச்சிப் படிப்புப் படித்தாலும் ஆங்கில மொழி வழியில்தான் படிக்க முடியும்.**

இது மூன்றாவது தடை. அத்துடன் இது மானங்கெட்ட - தரங்கெட்ட நிலை என்பதை இந்தக் கல்விகளைத் தருகிற கல்வி நிறுவனத்தாரும், கல்வியாளர்களும், பேராசிரியர்களும், மாணவர்களின் பெற்றோர்களும் - ஏன், மாணவர்களும் உணர மறுக்கிறார்கள்.

அவரவர் தாய்மொழி வழியில்தான், பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகப் படிப்பு வரையில் ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வி தருவது அரசின் - ஆட்சியாளரின் கடமை என்பதை கடந்த 70 ஆண்டுகளில் எந்த ஆட்சிக்காரரும் குறிக்கோளாகக் கொள்ளவில்லை.

**பொதுமக்களும், இளைஞர்களும், மாணவர்களும் -நாம் சுதந்தரம் பெற்றவர்கள் என்பதற்கு முதலாவது அடையாளம்-இன்றியமையாத அடையாளம் தம்தம் தாய்மொழி வழியில் கல்வி பெறுவதுதான் என்பதை உணர்ந்திட - உணர்த்திட எவரும் ஏற்ற முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.**

தமிழ்நாடு தனிஉரிமை பெற்ற ஒரு நாடு அல்ல; ஓர் அடிமை நாடு. உரிமை என்கிற - பன்னாட்டு ஏகாதிபத்தியத்துக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்புத் தரும் இந்திய அரசு என்கிற காட்டு விலங்காண்டி அரசுக்குப் பச்சை அடிமை, நாம்.

இதற்கான எல்லாக் கூறுகளையும் கொண்டிருக்கிற "இந்திய அரசமைப்புச் சட்டம்" என்கிற - மதப்பாதுகாப்பு, வருணப் பாதுகாப்பு, கோயில் கருவறையில் தீண்டாமை பாதுகாப்பு-முதலாளித்துவப் பாதுகாப்பு, பழமைப் பாதுகாப்பு என்கிற கெட்டியான கோட்டைக்குள் சிக்கிக் கொண்டிருக்கிற, பச்சை அடிமைகள் - சிந்திக்க மறுக்கிற - "விடுதலை"யின் அருமை தெரியாத பத்தாம் நூற்றாண்டைய மனப்பான்மையில் ஊறியவர்கள், நாம்.

விடுதலை பெற்ற ஒரு நாட்டுக் குடிமகனின் முதலாவது உரிமை மானிட சமத்துவ உரிமை. அது இங்கே இல்லை.

அடுத்து குறிப்பிட்ட காலத்துக்குள் - எல்லாக் குடிமக்களுக்கும் குடிக்க நல்ல தண்ணீர்; எதையும் எளிதில் அறிந்திட ஏற்ற தாய்மொழி வழியிலான கல்வி; 18 அகவை நிரம்பிய ஆணும் பெண்ணும் மற்றும் குழந்தையும் குறைந்த அளவு நுகர்வு வசதிகள் அளிக்கப்படுவதற்கு வழி; எல்லா மக்களும் இலவசமாக எல்லா மருத்துவமும் பெற்றிட வசதி, இடம் விட்டு இடம் பெயரப் போதுமான பொதுப் போக்குவரவு வசதி; வேளாண்மைக்கான நீர்நிலைகள் பாதுகாப்பு; எல்லாப் பயன்பாட்டுக்கும் மின்வசதி ஆகிய இவற்றை அடைந்திடப் போராடுவதுதான் மக்களின் கடமை.

இதற்குத் தடைகள் உண்டா? உண்டு.

முதலாவது தடை, எல்லா மட்டத்திலும் தோய்ந்துவிட்ட சாதியப் பண்பாடு.

இரண்டாவது தடை, அரசியல் உரிமை பற்றிய அறியாமை.

மூன்றாவது தடை குடும்பம் - அல்லது தனிமனிதப் பெருமை பேசுதல்.

இது தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது. ஏன்?

இங்கே தான், தந்தை பெரியார் 1922 முதல் 1973 வரை - 51 ஆண்டுக்காலம் பட்டிதொட்டியெல்லாம் சென்று படித்தறிந்தவர், படிப்பில்லாதவர் எல்லார் மட்டத்திலும் மேலேகண்ட உண்மைகளை எடுத்துரைத்தார்.


**முதலில் பெரியார் தொண்டர்கள் இவை பற்றி நன்கு ஆய்வு செய்ய வேண்டும். அதே தன்மையில், எல்லாத் தமிழர்களும் இவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்; பேச வேண்டும்; புதிய செயல் களம் அமைக்க வேண்டும்.**

**இவை மா.பெ.பொ.க.வின் உண்மையான நிலைபாடுகள்.**

**01.12.2016** **வே. ஆனைமுத்து**

# 21ஆம் நூற்றாண்டு வரையில் புரட்சியின் சின்னமாக விளங்கிய ஃபிடல் காஸ்ட்ரோ

- க. முகிலன்



இருபதாம் நூற்றாண்டு புரட்சியின் நூற்றாண்டு எனப்படுகிறது. அதனால் அந்த நூற்றாண்டில் உலக அளவில் மதிக்கப்பட்ட பல தவைர்கள்-புரட்சியாளர்கள் தோன்றினர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஃபிடல் காஸ்ட்ரோ, நெல்சன் மண்டேலா, யாசர் அராபத் ஆகிய மூவரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளாக உலக அளவில் பரந்துபட்ட மக்களால் போற்றப்பட்டனர். யாசர் அராபத்தின் போராட்டம் துன்பியல் நாடகம் போல் முடிந்துவிட்டது. நெல்சன் மண்டேலா 26 ஆண்டுகள் சிறைக்குள் இருந்தவாறே வெள்ளை இனவெறி ஆட்சி யிலிருந்து தென்னாம் பிரிக்காவுக்கு விடுதலை பெற்றுத் தந்தார். ஆப்ரிக்கக் கண்டத்து நாடுகளின் மக்களிடையே சுயமரியாதை உணர்வை-தன்னம்பிக்கையை ஊட்டினார். ஆனால் ஃபிடல் காஸ்ட்ரோ சிங்கத்தை அதன் குகை யில் சந்தித்து அதன் பிடரியைப் பிடித்து ஆட்டுவது போன்று அமெரிக்க ஏகாதிபத்திற்கு விளங்கினார். தன் இளமைக்காலம் முதலே ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் எரிதழலை ஏந்தியவாறு செம்மாப்புடன்உலவி வந்த ஃபிடல் காஸ்ட்ரோ 26.11.2016 அன்று வரலாறாகி விட்டார்.

கியூபா, கரீபியன் கடல் பகுதியில் உள்ள ஒரு தீவு நாடு. அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலிருந்து 140 கி.மீ. தொலைவில் உள்ள குட்டி நாடு. கியூபாவின் மக்கள் தொகை 110 இலட்சம். அமெரிக்காவில் ஐசனோவர் ஆட்சிக்காலம் (1953-1961) முதல் ஜார்ஜ் டபிள்யு. புஷ் ஆட்சிக்காலம் (2001-2009) வரையிலான பத்துக் குடியரசுத் தலைவர்களும் ஃபிடல் காஸ்ட்ரோ தலைமை யிலான கியூபாவைப் பெருங்கடலுள் அமிழ்த்தி அழித்து விட முயன்றனர். உலக ஏகாதிபத்தியமான அமெரிக்க வல்லரசின் வஞ்சகத்தைக் கியூப மக்களின் பேராதர வுடன் எதிர்த்து நின்று வென்ற பெருவீரன் ஃபிடல் காஸ்ட்ரோ. தன் நாட்டு மக்களுக்காக மட்டுமின்றி, தென்அமெரிக்க, ஆசிய, ஆப்பிரிக்கக் கண்ட நாடுகளில் முதலாளியச் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் இலக்கான மக்களுக்காக உலக அரங்கில் வாழ்நாள் முழுவதும் போராடிய மனிதநேய மானுடக் காவலர். எனவேதான் “மனிதகுலம் தான் தாய்நாடு” என்ற ஹொரசே மாத்தியின் புகழ்பெற்ற வரியை ஃபிடல் காஸ்ட்ரோ தன் உரைகளில் அடிக்கடி மேற்கோளாகக் கூறிவந்தார்.

இராணுவத் தளபதி பல்ஜெனிசியோ பாடிஸ்டா 1952இல் கியூபாவின் ஆட்சியைக் கைப்பற்றி சர்வாதி கார ஆட்சியை நடத்தினார். அமெரிக்க அரசுக்கும் பெரும் முதலாளிய நிறுவனங்களுக்கும் ஆதரவாகச் செயல்பட்டு உழைக்கும் மக்களைக் கொடுமையாக ஒடுக்கினார். பட்டப் படிப்பை முடித்திருந்த ஃபிடல் காஸ்ட்ரோ இளைஞர்களைத் திரட்டி 1953இல் சாண்டியாகோ எனும் இடத்தில் அரசுக்கு எதிராகக் கொரில்லா தாக்குதல் நடத்தினார். இத்தாக்குதல் தோல்வியில் முடிந்தது. ஃபிடல் காஸ்ட்ரோவும், அவரது தம்பி ரவுல் காஸ்ட்ரோவும் மற்றவர்களும் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் தன் தரப்பு நியாயத்தை நீண்ட எழுச்சியின் மூலம் முன்வைத்தார். அப்போதுதான் “நான் குற்றவாளி அல்ல வரலாறு என்னை விடுதலை செய்யும்” என்ற வைர வரிகளைப் பதிவு செய்தார். நீதிமன்றம் பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்தது.

ஃபிடல் காஸ்ட்ரோ இளைஞனாக இருந்த காலம் முதல் வாழ்வின் இறுதிவரையில் நீண்டநேரம் கலந்

துரையாடல் நிகழ்த்துவதில் சொற்பொழிவாற்றுவதில் பெருவிருப்பம் கொண்டவர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. 1960 செப்டம்பர் 26 அன்று அய்க்கிய நாடுகள் அவையில் 4 மணி 26 மணித்துளிகள் தொடர்ந்து உரையாற்றினார். 1998ஆம் 2 ஆண்டு கியூபாவின் தேசிய பேரவையில் அடுத்த அய்ந்து ஆண்டுகளுக்கு அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, 7 மணி 30 மணித்துளிகள் பேசினார். பிரேசில் நாட்டின் பாதிரியார் ஃப்ரே பெட்டோ 1985 ஆம் ஆண்டில் ஃபிடல் காஸ்ட்ரோவை இரண்டு தடவை நேர்காணல் செய்தார். முதல் தடவை 9 மணிநேரமும், இரண்டா வது தடவை 23 மணிநேரமும் தொடர்ந்து இக்கலந்துரை யாடல் நிகழ்ந்தது. இக்கலந்துரையாடல் ஆங்கிலத் தில் Fidel and the Religion என்ற தலைப்பில் பெரிய நூலாக வெளிவந்தது. தமிழில் அலைகள் வெளியீட்டகம் ''மதம்-மக்கள்-புரட்சி'' என்ற தலைப்பில் இந்நூலை அ.குமரேசனின் சிறந்த மொழி பெயர்ப்பில் வெளி யிட்டுள்ளது. கட்டாயம் படிக்க வேண்டிய நூல் இது.

சிறையிலிருந்து வெளிவந்தபின் ஃபிடல் காஸ்ட்ரோ மெக்சிகோ நாட்டுக்குச் சென்றார். அங்கு புரட்சியாளர் சே குவேராவின் தோழமை கிடைத்தது. அதுவரை ஃபிடல் காஸ்ட்ரோ ஒரு தேசியவாதியாகவே இருந்தார். சேகுவேராவும் தம்பி ரவுல் காஸ்ட்ரோவும் தான் ஃபிடல் காஸ்ட்ரோவை கம்யூனிசத்தின்பால் ஈர்ப்பு கொள்ளச் செய்தனர்.

1956 திசம்பர் 2 அன்று ஃபிடல் காஸ்ட்ரோவும் சேகுவேராவும் 81 போராளிகளுடன் மெக்சிகோவிலிருந்து கிரான்மா எனும் பாய்மரக் கப்பலில் தென்கிழக்குக் கியூபாவுக்கு வந்தனர். கரடுமுரடான சியாரா மெஸ்டிரா மலைகளை தங்கள் புரட்சியை முன்னெடுப்பதற்கான தளமாகக் கொண்டனர். உழவர்களையும் தொழிலாளர் களையும் திரட்டி பாடிஸ்டா சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகக் கொரில்லா தாக்குதல்களை 25 மாதங்கள் நடத்தினர். 1959 சனவரி 1 அன்று பாடிஸ்டா அமெரிக்காவுக்குத் தப்பி ஓடினார். 1959 சனவரி 8 அன்று ஃபிடல் காஸ்ட்ரோ தலைநகர் ஹவானாவில் வெற்றி வீரராகத் தன் தோழர் களுடன் நுழைந்தார். 1959 பிப்ரவரியில் கியூபாவின் பிரதமரானார்.

கியூபாவின் புரட்சியை நசுக்கிட, அமெரிக்கா தன் நாட்டில் அடைக்கலம் புகுந்த கியூப நாட்டவரில் 1400 பேருக்குப் போர்ப் பயிற்சியும் ஆயுதங்களும் அளித்து 1961 ஏப்பிரல் மாதம் பன்றி வளைகுடாப் பகுதியில் கியூபாவைத் தாக்கியது. காஸ்ட்ரோவின் புரட்சிப் படைகள் இத்தாக்குதலை முறியடித்தன. அப்போதுதான் கஸ்ட்ரோ, சோசலிசத்தை உயர்த்திப் பிடிப்பதன் மூலமே அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கமுடியும் என்பதைத் திட்டவட்டமமாக உணர்ந்தார். 1961 ஏப்பிரல் 16 அன்று ஆற்றிய உரையில், ''நாம் இருக்கிறோம், அதனா லேயே ஏகாதிபத்தியவாதிகளால் நம்மைப் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை... தொழிலாளர் தோழர்களே, குடியானத் தோழர்களே, எளியவர்களுக்காக எளியவர் களைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட எளியவர்களின் சோசலிச, சனநாயகப் புரட்சி இது... சோசலிசப் புரட்சி என்றென்றும் வாழ்க! சுதந்தர கியூபா என்றென்றும் வாழ்க! தாய்நாடு அல்லது மரணம்'' என்று முழங்கினார்.

1961இல் அமெரிக்கத் தூண்டுதலின் தாக்குதலுக்குப் பின் சோவியத் நாட்டுடனான உறவை மேம்படுத்தினார். அப்போது குருச்சேவ் சோவியத் நாட்டின் அதிபராக இருந்தார். அமெரிக்காவுக்கும் சோவியத் நாட்டுக்கும் இடையில் பனிப்போர் நடந்து கொண்டிருந்தது. 1962இல் சோவியத் நாடு அணுகுண்டு ஏவுகணை தளத்தைக் கியூபா நாட்டில் அமைத்து அமெரிக்காவை அச்சுறுத்தியது. அதற்கு எதிராக மறுமுனையில் அமெரிக்காவும் அணு ஆயுதத்தைக் குவித்தது. அணு ஆயுதப் போர் மூளுமோ என்று உலகமே அஞ்சியது. உலக நாடுகளின் தலை யீட்டால், இனி அமெரிக்கா கியூபா மீது படையை ஏவித் தாக்காது என்கிற அமெரிக்காவின் உறுதிமொழியின் பேரில், சோவியத் நாடு கியூபாவின் அணு ஏவுகணைத் தளத்தைக் கலைத்தது.

காஸ்ட்ரோ 1965இல் கியூபாவில் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவினார். காஸ்ட்ரோ சோவியத் நாட்டின் கம்யூனிச மாதிரியையோ சீன நாட்டின் கம்யூனிச மாதிரியையோ பின்பற்றவில்லை. கியூபா நாட்டுக்கே உரிய தனித்தன்மையான சூழலுக்கு ஏற்றதான சோசலிசத் திட்டங்களைச் செயல்படுத்தினார். காஸ்ட்ரோ மார்க்சிய-லெனினிய தத்துவத்தில் வல்லவர் அல்லர் என்று சிலர் குறை கூறினர். காஸ்ட்ரோ அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. மயிர் பிளக்கும் தத்துவ விவாதங் களை அவர் எப்போதும் தவிர்த்து வந்தார். நடைமுறை சார்ந்த செயல்பாடுகளிலேயே தன் முழு முனைப்பையும் ஆற்றலையும் செலுத்தினார்.

அதனால்தான் செல்வ வளம்மிக்க அமெரிக்காவை விட மனிதவள மேம்பாட்டு அளவீடுகளில் கியூபா முன்னிலையில் நிற்கிறது. கியூபா நாட்டு மக்கள் அனை வருக்கும் இலவயக் கல்வி, மருத்துவம் கிடைக்கச் செய்தார். நெடுந்தொலைவில் சிற்றூரில் படிக்காத ஒருவர் இருப்பினும் அவருக்காக ஒரு ஆசிரியரை அவருடைய வீட்டுக்கு அனுப்பி கல்வி கற்பித்தார். உலகிற்கே இது ஒரு முன்னோடித் திட்டம் என்று பாராட்டப் பெற்றது. நோயாளியின் வீட்டைத் தேடி மருத்துவர் செல்லும் அதிசயத்தையும் கியூபாவில்தான் பார்க்கமுடியும்.

உலகத்தரம் வாய்ந்த மருத்துவக் கல்வியும் மருத்துவர்களும் கியூபா நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி உலகில் பல நாடுகளின் மக்களுக்கும் பயன்பட்டு வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் பாக்கிஸ்தானில் கொடிய நிலநடுக்கம் ஏற்பட்டது. கியூபா நாட்டின் மருத்துவக் குழுவினர்தான் முதலில் அங்கு சென்றனர். பாக்கிஸ்தானால் கியூபாவுக்கு எவ்வகையிலும் அரசியல் ஆதாயம் இல்லை. ‘‘பகைவர்க்கு அருள்வாய் நன்னெஞ்சே’’ என்பது போல அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் நகரத்தைச் சூறாவளி கடுமையாகத் தாக்கியபோது கியூபா ஆயிரக்கணக்கான மருத்துவர்களை அங்கு அனுப்பியது. சோசலிசம் என்பது உலகளாவிய மனிதநேயத்தை முன்னெடுப்பது-செயலில் காட்டுவது என்கிற கோட்பாட்டையும் செயல்முறையையும் ஃபிடல் காஸ்ட்ரோ கொண்டிருந்ததே இதற்குக் காரணமாகும். கியூபா உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மருத்துவத்துக்காக 11.1 விழுக்காடு நிதியை ஒதுக்குகிறது. இந்தியாவிலோ 1.8 விழுக்காடுதான் ஒதுக்கப்படுகிறது.

இந்தியாவில் சமாதானப் புறா என்று போற்றப்பட்ட அமெரிக்காவின் அதிபர் ஜான் எப்.கென்னடிதான் கியூபா மீது 1961 ஏப்பிரலில் பன்றி வளைகுடாத் தாக்குதலுக்கு ஆணையிட்டர். 1962 பிப்ரவரியில் கியூபா மீது பொருளாதாரத் தடையை விதித்தார். லிண்டன் ஜான்சன் (1963-1969) மற்ற நாடுகளும் கியூபாவுடன் பொருளாதாரத் தொடர்பு கொள்ளக்கூடாது என்பதை முடுக்கிவிட்டார். லிண்டன் ஜான்சன்தான் உளவுத்துறையான சி.ஐ.ஏ.விடம் காஸ்ட்ரோவைக் கொல்லுமாறு ஆணையிட்டார். அது முதல் காஸ்ட்ரோவைக் கொல்ல 638 தடவைகள் பல்வேறு வஞ்சக வழிகளில் அமெரிக்கா முயன்று தோற்றது.

அமெரிக்கா 1963இல் கியூபா மீது பொருளாதாரத் தடைவிதித்த பிறகு சோவியத் நாடு கியூபாவுக்கு மானியமாகவும், கடனாகவும் பெருமளவில் நிதி உதவி செய்து வந்தது. 1990இல் சோவியத் நாடு 15 நாடுகளாகச் சிதறுண்ட பிறகு-அங்கு சோசலிச ஆட்சிமுறை தகர்ந்த பிறகு-அந்நாட்டின் உதவி கிடைக்காமல் கியூபா பெரும் பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது. அந்நிலையிலும் தலைதாழாச் சிங்கமென காஸ்ட்ரோ தன்னுடைய அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பில் கிஞ்சிற்றும் பின்வாங்கவில்லை. பல்வேறு வழிகளில் அந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து கியூபாவை மீட்டெடுத்தது பிடல் காஸ்ட்ரோவின் மாபெரும் சாதனையாகும். அந்த நெருக்கடியான காலத்தில் கியூபாவின் மக்கள் தங்கள் வாழ்க்கைத் தேவைகளைத் தாமே முன்வந்து சுருக்கிக் கொண்டு, காஸ்ட்ரோவுக்குத் துணையாக நின்றனர் என்பது காஸ்ட்ரோ மாபெரும் மக்கள் தலைவர் என்பதை உலகுக்கு உணர்த்தியது.



*தென் ஆப்ரிக்க விடுதலைக்கு படையனுப்பி உதவியமைக்கு காஸ்ட்ரோவுக்கு நன்றி கூறிய நெல்சன் மண்டேலா*

அமெரிக்க ஏகாதிபத்தியம் நீண்ட நெடுங்காலமாக தென்அமெரிக்க நாடுகளைத் தன் வேட்டைக்காடகவே பயன்படுத்தி வந்தது. அமெரிக்க முதலாளிய நிறுவனங்கள் தென்அமெரிக்க நாடுகளின் கனிம வளங்களை, எண்ணெய் வளத்தை எத்தகைய தடையுமின்றிக் கொள்ளையடிப்பதற்கு ஏற்ற வகையில் அந்நாடுகளில் தன்னுடைய கைப்பாவைகளை ஆட்சியாளர்களாக அமர்த்தியது. அந்நாடுகளின் இராணுவத்தைத் தன் கட்டுப்பாட்டில் இருக்குமாறு செய்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தன் முதலாளியச் சுரண்டலுக்காக தென்அமெரிக்க நாடுகளை வஞ்சிப்பது குறித்து ஃபிடல் காஸ்ட்ரோ தொடர்ந்து தோலுரித்துக் காட்டி வந்தார். தென்அமெரிக்க மக்கள் சுயமரியாதை உணர்வு பெற்று, அந்நிய முதலாளிகள் தங்கள் நாடுகளின் வளங்களைக் கொள்ளையடிப்பதை எதிர்த்துப் போராட வேண்டாம் என்று அறைகூவல் விடுத்து வந்தார். இதன் விளைவாக தென் அமெரிக்காவின் பல நாடுகளில் குறிப்பாக பொலிவியா, வெனிசுலா, நிகராகுவா, ஈக்குவடார், சிலி, அர்ஜன்டைனா, பிரேசில் முதலான நாடுகளில் இடதுசாரி இயக்கங்கள் எழுச்சி பெற்றன. இந்நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தில் ஆதரவு பெற்ற சர்வாதிகார ஆட்சிகள் அகற்றப்பட்டன. அனைவருக்கும் வாக்குரிமை எனும் அடிப்படையிலான சனநாயகத் தேர்தல் மூலமான ஆட்சிகள் ஏற்பட்டன. அமெரிக்க முதலாளிகளின் சுரங்கங்கள், எண்ணெய் வயல்கள் நாட்டுடமையாகக்கப்பட்டன. இவற்றின் வருவாயைக் கொண்டு மக்கள் நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. வெனிசுலாவின் ஹீயுகோ சாவேஸ், பொலியாவின் ஏவோ மொராலிஸ் போன்ற இடதுசாரி ஆட்சியாளர்கள் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். தென்அமெரிக்க நாடுகள் சிலவற்றில் இடதுசாரி இயக்கத்திற்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ள போதிலும் தென் அமெரிக்க நாடுகள் அனைத்திலிருந்தும் அமெரிக்க

எடுபிடிகளின் ஆட்சியையும் ஏகாதிபத்தியமும் விரட்டி யடிக்கப்பட்டதற்கு பிடல் காஸ்ட்ரோ முன்வைத்த "சோசலிசம் அல்லது மரணம்" என்கிற எழுச்சிமிகு முழக்கமே மூல காரணமாகும்.


தென்அமெரிக்க நாடுகள் மட்டுமின்றி, ஆப்பிரிக்க நாடுகளில் அமெரிக்க-அய்ரோப்பிய ஏகாதிபத்தியங் களின் ஆதரவு பெற்ற ஆட்சியாளர்களுக்கு எதிரான ஆயுதமேந்திய புரட்சிக் குழுக்களுக்கும் காஸ்ட்ரோ தன்நாட்டின் படைகளை அனுப்பி அவர்களின் விடுதலைப் போராட்டத்துக்குத் துணை நின்றார். கியூபா நாட்டுப் படைகளின் துணையால்தான் நமீபியா விடுதலை பெற்றது. தென்னாப்பிரிக்காவின் வெள்ளை நிறவெறி ஆட்சி அங்கோலாவிற்குத் தன் படைகளை அனுப்பித் தாக்கியது. 4 இலட்சம் கியூபாவின் படைகள் வெள்ளை இனவெறி ஆட்சியின் படைகளைத் தோற்கடித்தன. இத்தோல்விதான் தென்னாப்பிரிக்காவின் வெள்ளை இனவெறி ஆட்சியின் வீழ்ச்சிக்கும், நெல்சன் மண்டே லாவின் விடுதலைக்கும் வித்திட்டது. எனவே நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து வெளிவந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் கியூபாவுக்குச் சென்று அங்கோலா வுக்குப் படைகள் அனுப்பி உதவியதற்கு பிடல் காஸ்ட் ரோவுக்கு நன்றி தெரிவித்தார். அங்கோலா போரில் வெற்றி பெற்றபின் கியூபாவின் 4 இலட்சம் படையினர் 1991இல் தாய்நாடு திரும்பினர். ஆப்பிரிக்க நாடுகளில் நடந்த போர்களில் 4300 கியூபா நாட்டு வீரர்கள் மாண்டனர்.

ஜவகர்லால் நேரு, மார்ஷல் டிட்டோ ஆகியோரின் மறைவுக்குப்பின் காஸ்ட்ரோ அணிசேரா நாடுகளின் ஒப்பற்ற தலைவராகப் திகழ்ந்தார். அய்க்கிய நாடுகளின் மன்றக் கூட்டங்களாயினும், உலக அளவிலான எந்தவொரு அரங்கிலும் மூன்றாம் உலக நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களின் துன்பங்களுக்கும் கொடுமை களுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் முதலாளித்துவச் சுரண்டல் அமைப்புமே காரணம் என்று முழங்கி வந்தார். உலகில் பத்து விழுக்காட்டினராக உள்ள பணக் காரர்கள் உலகின் செல்வவளத்தில் 89 விழுக்காட்டைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கும் நிலையை ஒழிக்காத வரையில் மானுட சமத்தும் ஏற்படாது என்றார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பின் குறியீடாக-புரட்சியின் சின்னமாக அறுபது ஆண்டுகளுக்குமேல் திகழ்ந்த ஃபிடல் காஸ்ட்ரோ மறைந்துவிட்டார். மக்கள் மீது நம்பிக்கை வைத்து, அவர்களை அணிதிரட்டிப் போராடு வதே புரட்சியாளனின் கடமை என்னும் காஸ்ட்ரோவின் படிப்பினையை ஏற்று இந்த உலகை மாற்றியமைப் போம்.

# தின்று தீர்க்க....!

கிழக்கைத் தின்று
வளர்கிறது மேற்கு!
செம்பு, பித்தளை, மண் பாண்டங்களை
தின்று தீர்த்தது
அலுமினியமும் எவர்சில்வ(



பருத்தியைத் தின்று தீர்த்தது
டெர்லினும் பாலிஸ்டரும்

களி கூழ் கஞ்சி வகைகளை
தின்று தீர்த்தது
பரோட்டா சப்பாத்தி

அமுதம் கறந்த பசுக்களைத்
தின்று தீர்த்தது
'ஜெர்ஸி'

பழங்களின் கொட்டைகளை
தின்று தீர்த்தது
'சீட்லெஸ்'

வேளாண்மையையும் கால்நடைகளையும்
தின்று தீர்த்தன
பசுமை வெண்மை புரட்சிகள்

சாணம் மெழுகிய தரைகளை
தின்று தீர்த்தது
டைல்ஸ்சும் மொசைக்கும்

வாழ்க்கைக் கல்வியை
தின்று தீர்த்தது
மெக்காலே கல்வி

எண்ணையும் எழுத்தையும்
தின்று தீர்த்தது
கைப்பேசியும் கணினியும்

'கூலிக்கு மாரடிக்கும்'
கூட்டமாயினர்
கலைஞர்கள்

மொழி, இனம், தேசம், மானம்
எல்லாவற்றையும் தின்று தீர்த்தது
இந்திய மயம், உலக மயம்

எல்லாம் போனபின்பும்
எதற்கு வாழ்ந்துகொண்டிருக்கிறோம்?
தின்ன...பேண.....!

- பாவலர் வையவன்

# அமெரிக்காவின் 45ஆம் அதிபராக டொனால்டு டிரம்ப் வெள்ளை நிறவெறி, பண ஆதிக்கம் வென்றது! ஆண் ஆதிக்கமும், அமெரிக்க ஆதிக்கமும் ஏகாதிபத்தியச் சுரண்டலை எளிதாக்கிவிடும்!

அமெரிக்காவின் இன்றைய மக்கள் தொகை 32.4 கோடி.

அந்நாட்டின் முதலாவது அதிபராக (President) ஜார்ஜ் வாஷிங்டன் 30.04.1789இல் தேர்ந்தெடுக்கப் பட்டார். அப்போது 10 மாகாணங்கள் மட்டுமே தேர் தலில் பங்கேற்றன.

8.11.2016 செவ்வாயன்று நடைபெற்ற தேர்தலில் 50 மாகாணங்கள் பங்கேற்றன. இந்த ஒவ்வொரு மாகாணத்துக்கும் - மக்கள் தொகை அடிப்படையில் "வாக்காளர்கள் தொகுதிகள்" - "Electoral Colleges" இத்தனை என்று சட்டப்படி பிரித்திருக்கிறார்கள்.

மொத்தம் உள்ள 50 மாகாணங்களையும் 538 வாக்காளர் தொகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

மிகப்பெரிய மாகாணமான கலிஃபோர்னியா - 55 வாக்காளர் தொகுதிகளைக் கொண்டுள்ளது. மிகச் சிறிய மாகாணங்களான வயாமிங், அலாஸ்கா இவை தலைக்கு 3 வாக்காளர் தொகுதிகளைப் பெற்றுள்ளன.

இந்த 538 தொகுதிகளிலும் தேர்ந்தெடுப்போர் - "தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள்" - ("Members of Electoral College") என்று அழைக்கப்படுவர். இவர்கள் பெற்றிருப்பது - அதிபரைத் தேர்வு செய்வதற் கான வாக்குரிமை மட்டுமே. அதிபர் தேர்தல் முடிந்த வுடனே இந்த அவை சட்டப்படி கலைக்கப்பட்டுவிடும்.

இவர்களுக்குப் பதவிக்காலமும் கிடையாது; இவர் கள் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும் அல்லர்; ஊதியம் ஏதும் இல்லை.

இந்தத் தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் 538 பேர்களுள், 310 பேர் அமெரிக்கக் குடிஅரசுக் கட்சியின் (Republican Party) வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் (Donald Trump)புக்கு வாக்களித்தனர்; 228 பேர் மக்கள் நாயகக் கட்சியின் (Democratic Party) வேட்பாளர் ஹில்லாரி கிளிண்டனுக்கு (Hillary Clinton) வாக்களித்தனர்.

வெற்றி பெறத் தேவையான 270க்குமேல் 40 வாக்குகள் அதிகமாகப் பெற்ற டொனால்டு டிரம்ப் 20.1.2017இல் அமெரிக்காவின் 45ஆம் அதிபராகப் பதவி ஏற்பார்.

டிரம்பும், ஹில்லாரியும் - போட்டி போட்டுக் கொண்டு 512 நாள்கள் பரப்புரை செய்தனர்.



உலக அளவிலான ஊடகங்களும் இந்திய ஊடகங் களும் ஹில்லாரி என்கிற பெண்மணி வெற்றி பெறப் போகிறார் என ஆரவாரமாகச் செய்தி பரப்பினர்.

அவை எல்லாமே தவறானவை ஆகிவிட்டன. ஏன்?

(1) டிரம்புக்கு வாக்களித்தோரில்

| | |
|---|---|
| வெள்ளையரில் வாக்களித்தோர் | 58% |
| வெள்ளையர் அல்லாதாரில் | 24% |

ஆண்களில் அதிகம் பேர், பட்டம் பெறாதோரில் அதிகம் பேர், அரசு அலுவலில் உள்ள ஆடவர், மகளிரில் அதிகம் பேர்.

வழக்கமாக 1996 முதல் மக்கள் நாயகக் கட்சிக்கே வாக்களித்த மிச்சிகன், விஸ்கன்சின், பெனிசில் வேனியா மாகாணங்களின் "தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்களுள்" அதிகம் பேர்.

மற்றும் அமெரிக்கப் பெரும் பணக்காரர்கள் 400 பேர்களின் பேராதரவு மற்றும் பணச்செலவு - 5 அமெரிக்க இந்தியப் பணக்காரர்களின் பணச் செலவு இவ்வளவும் டிரம்பின் வெற்றிக்கு முகாமை யான காரணங்கள் ஆகும்.

(2) ஹில்லாரிக்கு வாக்களித்தோர்

| | |
|---|---|
| வெள்ளையரில் | 37% |
| வெள்ளையர் அல்லாதோரில் | 74% |

மக்கள் நலத் திட்டங்களை அமெரிக்க அரசு மேற் கொள்ளக்கூடாது என்போரில் அதிகம் பேர்.

மக்கள் நாயகக் கட்சியின் வாக்கு வங்கியாக 1996 முதல் இருந்த-மிச்சிகன், விஸ்கன்சின், பெனிசில்

வேனியா மாகாணங்களின் ''தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்களில்'' அதிகம் பேரின் பிறழ்ச்சி. இவற்றால் ஹில்லாரி கிளிண்டன் தோல்வியுற்றார்.

இவ்வளவு விவரங்களையும் நாம் ஒவ்வொரு வரும் ஏன் தெரிந்துகொள்ள வேண்டும்?

நேற்றும், இன்றும் உலகத்தை ஆட்டிப்படைக்கும் நாடு அமெரிக்கா.

உலக நாடுகளில் உள்ள எண்ணெய் வளநாடு களை ஆக்கிரமிப்பது, ஏழை நாடுகளில் உள்ள மலிவான கூலி அறிவு உழைப்பைச் சுரண்டுவது, எந்த மூலை யிலும் இனவழி, மொழிவழித் தேசிய விடுதலை எழுச்சி பீறிட்டு எழாமல் பார்த்துக் கொள்வது - இவ்வ ளவையும் செய்வது, 1945க்குப் பிறகு அமெரிக்கா தான்.

இதற்கு பலியானவர்களுள் ஆண்டன் பாலசிங்கம் ஒருவர். இது தனிவரலாறு. நிற்க.

அமெரிக்கா பரந்த நிலப்பரப்பையும், குறைந்த மக்கள் தொகையையும் கொண்ட நாடு.

அந்நாட்டில் வளமான எண்ணெய் ஓட்டங்கள், நிலக்கரித் தேக்கப் படிவங்கள் உள்ளன. அவற்றை இப்போது பயன்படுத்த அமெரிக்கா விரும்பவில்லை.

முதலாவது உலகப்போர் (1914-18), இரண்டாவது உலகப் போரில் (1939-45) பல கோடி இந்தியர்களும், 2 கோடி சோவியத் மக்களும், 60 இலட்சம் யூதர்களும் மாண்டனர்.

அப்படிப்பட்ட கொடிய நிகழ்ச்சிகளால் அமெரிக்கா வுக்கு எந்த இயற்கை வள அழிவுகளும், மக்கள் சாவும் நேரவில்லை.

அமெரிக்கா செல்வம் கொழிக்கும் நாடாக இருந்தா லும், பெரிய கடன்கார நாடுதான். ஒவ்வொரு அமெரிக் கக் குடும்பத்தின் மீதும் இன்று 8 இலட்சம் டாலர்கள் (ரூபா 5 கோடி) கடன் இருக்கிறது. பட்டம் பெறாதவர் களை அதிகம் கொண்ட நாடுதான்; வெள்ளை நிற வெறி நாடுதான்; ஆண் ஆதிக்கவெறி நாடுதான்.

இவை இப்படி இருப்பது ஏன்?

32.4 கோடி உள்ள அமெரிக்க மக்கள் தொகையில், 30 கோடி அமெரிக்க மக்களிடம் உள்ள சொத்து மதிப்பு எவ்வளவோ அவ்வளவு சொத்து - 2 கோடி அமெரிக் கரிடம் குவிந்து கிடக்கிறது.

உலகத்தில், 115 ஆண்டுகளில், எவ்வளவு பேர் நோபிள் பரிசு பெற்றார்களோ - அதில் 363 பேர் அமெரிக்கர்கள்.

**எந்த அமெரிக்க அறிவாளியும் இவ்வளவு பெரிய மூலதனக் குவியல் 2 கோடி அமெரிக்கரிடம் ஏன் இருக்க வேண்டும் என்று கேட்டதில்லை; கொதித்தெழுந்ததில்லை.**

2016 அக்டோபரில் அமெரிக்க இதழான ''FORBES'' - போர்ப்ஸ், அமெரிக்காவின் 400 முன்னணிப் பணக்காரர்களின் பட்டியலை வெளியிட்டிருந்தது. 23ஆவது ஆண்டாக, அமெரிக்க மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் நிறுவனர் பில்கேட்ஸ் இதில் முதலிடத் தில் உள்ளார்.

இந்தப் பணக்காரர் பட்டியலில் இந்திய வம்சாவளி யைச் சார்ந்த 5 பேர் உள்ளனர்.

அப்படிப்பட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு பணக்காரரான ஷலப் ஷாலி குமார் (Shalabh Shali Kumar) பத்து இலட்சம் டாலர் தொகையை டொனால்ட் டிரம்ப்பின் தேர்தல் நிதிக்கு அளித்துள்ளார்.

அமெரிக்காவில் அவரால் நிறுவப்பட்டுள்ள ''ரிபப்ளி கன் இந்து கூட்டணி'' (Republican Hindu Coalition - RHC) ''டொனால்ட் டிரம்பின் வெற்றி, இந்துக்களுக்கு இரண்டாவது தீபாவளிப் பண்டிகை'' என்று பெரிய பூரிப்போடு அறிவித்துள்ளார்.

**உலகத்தில் அதிகமாக இராணுவச் செலவு செய்யும் நாடுகளான சீனா, இந்தியா, பிரிட்டன், பிரான்சு, இரஷ்யா, ஜப்பான், சவுதி அரேபியா இவற்றின் மொத்த இராணுவச் செலவு எவ்வளவோ, அதைவிட, அமெரிக்க அரசின் இராணுவச் செலவு அதிகம். இது, ஏறக்குறைய 600 இலட்சம் கோடி டாலர். அம்மவோ!**

**இவையெல்லாம் இப்படி இருக்கிற வரையில் வறுமை எப்படி ஒழியும்? நோய் பெருகுவது எப்போது குறையும்? ''எல்லாருக்கும் எல்லாம்'' என்கிற மாபெரும் மக்கள் நல உலகம் எப்படி அமையும்?**

அமெரிக்க நாடு மனிதகுல எதிரி நாடு.

அங்கு இயங்கும் மக்கள் அவை - என்கிற அமெரிக்க காங்கிரஸ் (American Congress) 435 உறுப்பினர் களைக் கொண்டது.

மேலவை என்கிற செனட் (Senate) 100 உறுப்பி னர்களைக் கொண்டது. சிறிய, நடுத்தர, பெரிய மாகாணம் என்கிற வேறுபாடு இல்லாமல் - ஒவ்வொரு மாகாணத் துக்கும் 2 பிரதிநிதிகள் இந்த அவையில் உண்டு.

**இவற்றுக்கும் குடிஅரசு அதிபர் தேர்தலுக் கும் ஒரு தொடர்பும் இல்லை.**

இவ்வகையில் அமெரிக்க அரசமைப்புச் சட்டம் ஒரு மோசடியான அமைப்பு!

**வீழ்க அமெரிக்கரின் நிறவெறி! ஒழிக அமெரிக்க ஏகாதிபத்தியம்!**

**1-12-2016** **- வே. ஆனைமுத்து**

# மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வு

# அ.தி.மு.க. ஆட்சிக்கு ஓர் எச்சரிக்கை

**க. முகிலன்**

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு பனிரெண்டாம் வகுப்புப் படிக்கும் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் அடுத்த கல்வி ஆண்டில் (2017-2018) மருத்துவப் படிப்பில் சேருவதற்கான நெறிமுறை என்னவாக இருக்கும் என்ற வினாவுக்கு விடைதெரியாமல் பெரும் குழப்பத்திலும் மனக்கவலையிலும் இருக்கின்றனர். மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் பயிலும் மாணவர்களுக்கே இது பெரும் சிக்கலாக இருக்கிறது.

2016ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நடந்த 12ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வில் மாநிலப் பாடத்திட்டத்தின்கீழ் 8,33,682 பேர் தேர்வு எழுதினர். மத்திய கல்வி வாரியப் பாடத் திட்டத்தின் (CBSE) கீழ் தமிழ்நாட்டில் தேர்வு எழுதியவர் எண்ணிக்கை 13,625 ஆகும். தமிழ்நாட்டு மாணவர்களும் மருத்துவப் படிப்பில் சேருவதற்குத் தேசிய தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்வை (National Eligibility - cum - Entrance Test - NEET - நீட்) அடுத்த கல்வி ஆண்டில் எழுத வேண்டிய சூழ்நிலையே இருக்கிறது.

மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வின் வினாக்கள் மத்திய இடை நிலைக் கல்வி வாரியத்தின் பாடத் திட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்படுவதால் அப்பாடத் திட்டத்தின் கீழ் பயிலும் மாணவர்கள் இந்திய அளவில் அதிக அளவில் தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே தமிழ்நாட்டு அரசின் பாடத்திட்டத்தின்கீழ் பனிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வை எதிர்கொண்டு எழுதுவதில் இயலாமைகள் இருக்கின்றன. மேலும் நுழைவுத் தேர்வின் வினாத்தாள் ஆங்கிலம், இந்தியில் மட்டுமே இருக்கும் என்பதால் தமிழ்வழியில் படித்த மாணவர்களுக்கு மேலும் சிக்கலான நிலை ஏற்படுகிறது.

மத்தியப் பாடத் திட்டமும் மாநிலப் பாடத் திட்டமும் 65 விழுக்காடு அளவுக்கு ஒன்றாகவே இருக்கின்றன. இருப்பினும் மத்தியப் பாடத்திட்டத்தில் தேர்வுகளில், மாணவர்கள் பாடங்களை எந்த அளவுக்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்ற திறனை அளவிடும் தன்மையில் வினாக்கள் அமைக்கப்படுகின்றன. குறிப்பாக ஒரு வினாவுக்கு ஒத்த தன்மையில் இருப்பது போன்ற நான்கு விடைகள் தரப்பட்டு, அதில் சரியான விடையை மாணவர் தேர்வு செய்ய வேண்டும் என்கிற நுண்ணிய வகையில் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இதே தன்மையில்தான் மருத்துவப் படிப்புக்கான பொது



*மருத்துவ நுழைவுத் தேர்வை அடுத்தக் கல்வி ஆண்டில் தமிழக மாணவர்களும் எழுதவேண்டிவரும் என்று கூறித் தமிழக அரசின் பொறுப்பைத் தட்டிக் கழித்துவரும் கல்வி அமைச்சர் ம.பா.பாண்டியராஜன்*

நுழைவுத் தேர்விலும் வினாக்கள் அமைக்கப்படுவதால், மனப்பாடக் கல்வியின் அடிப்படையில் தேர்வுகளை எழுதிப் பழகிய மாநிலப் பாடத் திட்ட மாணவர்களால் புதிய தேர்வு முறைக்கு ஈடுகொடுக்க இயலாது என்பதைத் தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் உணரவில்லை.

நவம்பர் மாதம் தில்லிக்குச் சென்ற தமிழ்நாட்டு அரசின் பள்ளிக் கல்வித் துறைக்கான அமைச்சர் ம.பா. பாண்டியராசன் தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய போது, “அடுத்த கல்வி ஆண்டில் தமிழ்நாட்டு மாணவர்களும் மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வை எழுத வேண்டியிருக்கும். பொது நுழைவுத் தேர்வு எழுதும் நிலை ஏற்படாமல் தடுத்திட அரசு முயலும். ஆயினும் மாணவர் நலன் கருதி மாநிலப் பாடத்திட்டத்தின்கீழ் அரசுப் பள்ளிகளில் பயிலும் பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு எழுதுவதற்கான பயிற்சியை அரசு அளிக்கும்” என்று கூறினார்.

அமைச்சரின் இக்கூற்று பொது நுழைவுத் தேர்வுக்கான தமிழ்நாட்டு அரசின் எதிர்ப்பைக் கைகழுவி விட்டதையே காட்டுகிறது. அமைச்சர் குறிப்பிட்டுள்ளது போல் அரசு, பொது நுழைவுத் தேர்வுக்கான பயிற்சியை அளித்தாலும் அது எந்த அளவுக்குத் தரமானதாகவும் மாணவர்களுக்குப் பயனுள்ளதாகவும் இருக்கும் என்பது பெரிய கேள்விக்குறியாகும். தனியார் நடத்தும் பொது நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி மய்யங்

களில் அதிக பணம் செலுத்தி மாணவர்கள் பயிற்சி பெறும் நிலை இப்போதே தொடங்கிவிட்டது. பொது நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி பெறல் என்பதே பெரிய நகரங்களில் உள்ள மேல்சாதி-பணக்கார வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே பயன்பெற முடியும் என்பதைக் கடந்த கால அனுபவங்கள் உணர்த்துகின்றன. இதனால் நகரங்களிலும் ஊரகப் பகுதிகளிலும் வாழும் பிற்படுத் தப்பட்ட-தாழ்த்தப்பட்ட-பழங்குடி வகுப்புகளின் ஏழை மாணவர்கள் தரமான பயிற்சி பெற வாய்ப்பில்லாமல், அவர்களின் மருத்துவப் படிப்புக் கனவு கானல் நீராகி விடும்.

தமிழ்நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி உட்பட அரசு மருத்துவக் கல்லூரி கள் எண்ணிக்கை 24 ஆகும். அரசு மருத்துவக் கல் லூரிகள் அதிகம் உள்ள சில மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்றாகும். அரசு மருத்துவக் கல்லூரிகளில் 3,450 இடங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில் 15 விழுக்காடு இடங்களை 1985 முதல் நடுவண் அரசுக்கு அளிக்க வேண்டும் என்ற கேடான நிலை இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரி களும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் சேர்ந்து 24 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 3,060 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் இருக் கின்றன. ஆகமொத்தம் தமிழ்நாட்டில் 6,510 மருத்து வப் படிப்புக்கான இடங்கள் உள்ளன.

இந்தியாவில் மொத்தம் 412 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. 190 அரசுக் கல்லூரிகளில் 25,880 இடங்கள்; 222 தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 26,835 இடங்கள் என மொத்தம் 52,715 இடங்கள் உள்ளன.

2010இல் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரசு ஆட்சியில் இந்தியா முழுவதும் மருத்துவப் படிப்பில் சேருவதற்கு இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வு எழுத வேண்டும் என ஆணைப் பிறப்பிக்கப் பட்டது. அதனைப் பல்வேறு மாநில அரசுகளும் தனி யார் மருத்துவக் கல்லூரிகளும் எதிர்த்தன. உச்சநீதி மன்றத்தில் பலர் வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக் கில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, பொது நுழைவுத் தேர்வு அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று 2013 சூலையில் தீர்ப்பு அளித்தது.

மருத்துவக் கல்வி வேகமாக வணிகமயமாகி வரு வதைத் தடுக்கவும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் ஒளிவுமறைவு அற்ற மாணவர் சேர்க்கை நடக்கவும், மாணவர்கள் பல நுழைவுத்தேர்வுகள் எழுதும் நிலைமை ஒழிக்கவும் பொதுநுழைவுத் தேர்வு இன்றியமை யாதது என்று 2010இல் சொல்லப்பட்டது. இப்போதும் சொல்லப்படுகிறது. ஆனால் நடுவண் அரசின் உண் மையான நோக்கம் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் அதிகாரம் மாநிலங்களிடம் இருப்பதைப் பறிப்பதே ஆகும்.

2014இல் நரேந்திர மோடி தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்ற பா.ச.க. அரசு நுழைவுத் தேர்வை நடத்திட முடிவு செய்தது. அதற்காக உச்சநீதிமன்றத்தில் 2013 சூலை தீர்ப்பின்மீது சீராய்வு விண்ணப்பம் செய்தது. இந்த வழக்கை விசாரித்த அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு 28.4.2016 அன்று வழங்கிய தீர்ப்பில் இந்தக் கல்வி ஆண்டிலேயே பொது நுழைவுத் தேர்வு மூலம் தான் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைபெறவேண்டும் என்று ஆணையிட்டது.

தமிழ்நாட்டு அரசும் மற்றும் சில மாநில அரசு களும் இதை எதிர்த்தன. எனவே நடுவண் அரசு ஓர் அவசரச் சட்டத்தின்மூலம், இந்தக் கல்வி ஆண்டுக்கு மட்டும் மாநில அரசுக் கல்லூரிகளின் மாணவர் சேர்க் கைக்குப் பொது நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு அளித்தது. அதனால் இந்த ஆண்டு வழக்கம் போல் பனிரெண்டாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் தர வரிசைப் படி, அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங் களுக்கும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் அரசின் தொகுப்பு அளித்த இடங்களுக்கும் ஒற்றைச் சாளர முறையில் மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

இந்திய அளவிலான பொது நுழைவுத் தேர்வு இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. மொத்தம் 7,31,223 பேர் தேர்வு எழுதினர். இவர்களில் 4,09,477 பேர் தேர்ச்சி பெற்று, மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கான தகுதியைப் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. மொத்தம் உள்ள 52,715 மருத்துவ இடங்களில் சேருவதற்கு 4,09,477 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்பதே இதன் பொருள். எனவேதான் மருத்துவ நுழைவுத் தேர்வு என்பது தகுதிகாண் தேர்வு எனப்படுகிறது.

ஆனால் தேசிய தகுதிகாண் மற்றும் பொது நுழைவுத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களைத் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ப்பதற்குப் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளை நடுவண் அரசின் மக்கள் நலவாழ்வு அமைச்சகமோ, இந்திய மருத்துவக் கல்விக் கழகமோ (MCI), மத்திய இடைநிலைக் கல்வி வாரிய மோ அறிவிக்கவில்லை.

பொதுநுழைவுத் தேர்வின் முடிவுகள் வெளியிடப் பட்டதற்கு ஒரு கிழமைக்குமுன் நடுவண் அரசின் மக்கள் நலவாழ்வு அமைச்சர் பிரகாஷ் நட்டா மாநில அரசுகளுக்கு அனுப்பிய மடலில், மாநில அரசுகள் விரும்பினால் பொது கலந்தாய்வின் மூலம் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை நடத்தலாம் என்று ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதன் அடிப்படையில் மத்தியப்பிரதேச மாநில அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, மத்தியப் பிரதேசத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி களில் உள்ள இடங்களுக்குத் தேசிய தகுதிகாண் பட்டியலின் அடிப்படையில் ஒற்றைச் சாளர முறையில் மாணவர் சேர்க்கையை நடத்தும் உரிமையைப் பெற்றது.

தமிழ்நாட்டு அரசும் தனியார், மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒற்றைச் சாளர முறையில் மாணவர் சேர்க்கையை நடத்தும் என்று பெற்றோர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் தமிழ்நாட்டு அரசு அத்திசை நோக்கிச் சிந்திக்கவும் இல்லை.

மருத்துவத் துறை உயர் அதிகாரிகள், ''அவை தனியார் மருத்துவக் கல்லூரிகள்; அவற்றில் அரசு தலையிட முடியாது'' என்று கூறினர். மேலும் ஒரு உயர் அதிகாரி, மாணவர் சேர்க்கைக்கான நெறிமுறைகளை வகுத்தளிக்க வேண்டியது மத்திய இடைநிலைக் கல்வி வாரியமாகும் என்று பிதற்றி உள்ளார். பொது நுழைவுத் தேர்வை நடத்துவது மட்டுமே தன் பொறுப்பு என்றும் மாணவர் சேர்க்கைக்கான நெறிமுறைகளை வகுப்பது தன் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டது என்றும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் முன்பே அறிவித்து விட்டது. எனவே நடுவண் அரசின் மக்கள் நலவாழ்வு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி விதிகளை வகுக்க வேண்டியது இந்திய மருத்துவக் கல்விக் கழகத்தின் கடமையாகும். இவ்விரண்டுமே தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட்டன.

அதனால் தமிழ்நாடு உள்ளிட்ட பெரும்பாலான மாநிலங்களில் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும், எந்த நோக்கங்களுக்காக தேசிய தகுதிகாண் மற்றும் பொதுநுழைவுத் தேர்வு கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதோ, அவற்றுக்கு நேர் எதிரான வகையில் - கடந்த ஆண்டுகளில் இருந்ததைவிட இன்னும் கேடான முறையில் இந்நிறுவனங்களில் இந்த ஆண்டு மாணவர் சேர்க்கை நடந்து முடிந்திருக்கிறது. மருத்துவக் கல்வி வணிகமயமாவதைத் தடுத்தல், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் ஒளிமறைவு அற்ற வகையிலான மாணவர் சேர்க்கை என்கிற நோக்கங்கள் தவிடுபொடியாக்கப் பட்டுவிட்டன. நடைமுறைக்குவந்த முதலாண்டிலேயே தேசிய தகுதிகாண் மற்றும் பொதுநுழைவுத் தேர்வு என்பது படுதோல்வி அடைந்துவிட்டது.

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் ஒருங்கிணைந்த ஒற்றைச் சாளர முறையில் மாணவர் சேர்க்கை நடக்கவில்லை. மாறாக ஒவ்வொரு கல்லூரிக்கும் தனித் தனியாக மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டது. எந்தவொரு தனியார் கல்லூரியிலும் விண்ணப்பித்த மாணவர்களில் தகுதிகாண் தர வரிசைப் பின்பற்றப்படவில்லை. விண்ணப்பித்த மாணவர்களில் கல்லூரி நிர்வாகம் நிர்ணயித்த கல்விக் கட்டணத்தை வெள்ளையிலும் நன்கொடையைக் கறுப்பிலும் செலுத்தத் தயாராக இருந்தோர் மட்டுமே தகுதியுள்ளவர்களாகக் கருதப் பட்டுச் சேர்க்கப்பட்டனர். தனியார் மருத்துவக் கல்லூரிகளில் தகுதி திறமையை நிலைநாட்டுவதே பொது நுழைவுத் தேர்வின் நோக்கம் என்கிற கூப்பாடு காற்றில் கரைந்து போய்விட்டது.

தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவப் படிப்புக் கட்டணத்தைத் தமிழக அரசு நிர்ணயம் செய்கிறது. அதைப் போலவே நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களின் மருத்துவப் படிப்புக் கட்டணத்தையும் தமிழக அரசே நிர்ணயிக்க வகை செய்யப்பட வேண்டும். இந்திய மருத்துவக் கல்விக் கழகத்திடம் 'நிகர்நிலை' எனும் தகுதியைப் பெற்றுவிடுவதாலேயே, இவை தமிழ்நாட்டு அரசின் தொகுப்புக்கு மருத்துவ இடங்களை அளிக்காமல் நடுவண் தொகுப்புக்கு 15 விழுக்காடு இடங்கள் அளித்தது போக 85 விழுக்காடு இடங்களையும் ஏலத்தில் விட்டுக் கொள்ளையடித்து வருகின்றன. எஸ்.ஆர்.எம். நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்புச் சேர்க்கைக்குத் தரகராக இருந்துவந்த மதன் என்பவர் 123 பேரிடம் 50 இலட்சம் முதல் 80 இலட்சம் வரை கடந்த ஏப்ரல் மாதம் என ரூ.84.27 கோடி பணத்தை வாங்கிக் கொண்டு தலைமறைவாகி விட்டார். அவர் 21.11.2016 அன்றுதான் கைது செய்யப் பட்டார். இராமச் சந்திரா மருத்துவக் கல்லூரி, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவக் கல்லூரி போன்ற நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களில் மாணவர் சேர்க்கைக்கு ஒரு கோடி உருவா வரை பணம் வாங்கப்படுவது ஊரறிந்த உண்மையாகும்.

இந்த ஆண்டு தேசிய தகுதிகாண் மற்றும் பொது நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் பட்டியலிலிருந்து கேரள அரசும் கர்நாடக அரசும் தங்கள் மாநிலத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கான மாணவர் பட்டியலைத் தயாரித்தன. அப்பட்டியலில் தங்கள் மாநிலத்தின் மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்தன. தமிழக அரசு இந்த அளவில் கூட அக்கறை காட்டாமல், தனியார் மருத்துவக் கல்லூரிகளின் முறைகேடுகளுக்கும் கல்விக் கொள்ளைக்கும் துணைபோனது வெட்கக்கேடாகும்.

அடுத்த கல்வி ஆண்டில் தேசிய தகுதிகாண் மற்றும் பொதுநுழைவுத் தேர்வின் அடிப்படையில் தமிழக அரசின் மருத்துவக் கல்லூரிகளுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெறும் நிலையில், தமிழக அரசும் - அ.தி.மு.க. ஆட்சியும் கீழ்க்கண்டுள்ள வினாக்களுக்கு என்ன விடை சொல்லப் போகிறார்கள்?

* பொதுநுழைவுத் தேர்வில் இந்திய அளவில் தர வரிசையில் முதலி டத்தில் உள்ள பிற மாநில - பிற மொழி பேசும் மாணவர்கள் தமிழ்நாட்டு அரசுக் கல்லூரிகளில் சேர்ந்திட விரும்பினால் அதைத் தடுக்க முடியுமா?
* பிற மாநில மாணவர்கள் தமிழ்நாட்டில் அரசுக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்பில் சேரும் நிலையில் தமிழ்நாட்டு மாணவர்கள் தற்போது பெற்று வரும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டின் நிலை என்னவாகும்? பிற மாநில மாணவர்கள் 69 விழுக்

காடு இடஒதுக்கீட்டின் பயனை அனுபவிக்க அனுமதிக்கப்படுவார்களா?

* பிற மாநில மாணவர்களின் மருத்துவப் படிப்புக்காகத் தமிழ்நாட்டு அரசு, தமிழ்மக்களின் வரிப் பணத்தைப் பெருஞ்செலவு செய்து மருத்துவக் கல்லூரிகளை ஏன் நடத்த வேண்டும்?

* தமிழ்நாட்டில் பயிலும் பிறமொழி மாணவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு மருத்துவம் செய்யாமல் அவர்களின் சொந்த மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்க முடியுமா?

எனவே இனியும் அ.தி.மு.க. ஆட்சி தூங்கிக் கொண்டிருக்காமல், தமிழக மக்களுக்குத் துரோகம் இழைக்க நினைக்காமல், தமிழ்நாட்டு அரசின் மருத்துவக் கல்லூரிகளில் இந்த ஆண்டு பனிரெண்டாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கையை நடத்துவது அரசியலமைப்பின் கூட்டாட்சிக் கோட்பாட்டின்படி மாநில அரசின் உரிமையாகும் என்பதை நிலைநாட்டிட சிறந்த வழக்குரைஞரைக் கொண்டு உச்சநீதிமன்றத்தில் வாதிட வேண்டும். இதற்காகத் தமிழக சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, இதுகுறித்து ஒரு தீர்மானத்தை இயற்ற வேண்டும். 2017ஆம் ஆண்டின் பொதுநுழைவுத் தேர்வுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் மேலும் காலம் தாழ்த்தாமல் உறுதியான, திட்டவட்டமான நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுக்க வேண்டும்.

மக்களவையில் 37 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டுள்ள அ.தி.மு.க. நடுவண் அரசுக்கு அழுத்தம் தரவேண்டும். மேலும் பொது நுழைவுத் தேர்வை எதிர்க்கும் மற்ற மாநில அரசுகளுடனும் கட்சிகளுடனும் ஒருங்கிணைந்து, நடைமுறைக்கு வந்த முதலாண்டிலேயே முழுமையாகத் தோல்வியடைந்துவிட்ட பொதுநுழைவுத் தேர்வை அடியோடு ஒழித்திட வழிகாண வேண்டும். குறைந்தது, அரசுக் கல்லூரிகளுக்கு பொது நுழைவுத் தேர்வு கட்டாயம் கூடாது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இது மாநிலங்களின் தலையாய உரிமையாகும். இத்துடன் கல்வியை 1976க்கு முன்ா வரையில் இருந்ததுபோல் மாநில அதிகாரப் பட்டியலில் மீண்டும் கொண்டுவரும் வரை போராட வேண்டும்.

தனியார் மருத்துவக் கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு மட்டும் தேசிய தகுதிகாண் மற்றும் பொதுநுழைவுத் தேர்வு நீடிப்பதாயின், அக் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கை என்பது மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில், ஒற்றைச் சாளர முறையில் நடத்தப்படுவதாக இருக்க வேண்டும்.

அ.தி.மு.க. ஆட்சி இதைச் சாதிக்கத் தவறினால், கல்வியில் இருந்துவரும் 69 விழுக்காடு இடஒதுக்கீடும் காலங்காலமாகத் தமிழகத்தில் இருந்துவரும் சமூக நீதிக்கோட்பாடும் புதைக்கப்பட்டுவிடும்.

தமிழ்நாட்டின் அரசின் மருத்துவக் கல்லூரிகளில் பிறமொழி மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் படிக்கும் நிலை ஏற்பட்டால் தமிழகமே தீப்பற்றி எரியும்! தமிழக அரசுக்கும் அ.தி.மு.க. ஆட்சிக்கும் விடுக்கும் எச்சரிக்கை இது!

## தாய்த்தமிழ்ப் பள்ளியில் மொழிவழி தமிழர் தாயகம் பிறந்த 60ஆம் ஆண்டு விழா



'தமிழ்நாடு' என்னும் பெயரில் ''மொழிவழி தமிழர் தாயகம்'' 01.11.1956இல் பிறந்தது. அதையொட்டி, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூரில் வெங்கடபுரத்தில் நடைபெற்றுவரும் தாய்த்தமிழ்ப் பள்ளியில், ''மொழிவழி தமிழர் தாயகம் பிறந்த 60ஆம் ஆண்டு விழா'' 18.11.2016 பிற்பகல் 2 மணிமுதல் 5 மணி வரை சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு, பள்ளித் தாளாளர் சிவ. காளிதாசன் தலைமை ஏற்றார். செயலாளர் த. மணிசேகரன் வரவேற்புரையாற்றினார். தமிழ்வழிக்கல்வி இயக்கம் அ.சி. சின்னப்பத் தமிழர், சென்னை மாவட்ட மா.பெ. பொ.க. செயலாளர் வாலாசா வல்லவன், பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

ஊர்ப் பெரியவர்கள், பள்ளிக் குழந்தைகளின் பெற்றோர்கள், தமிழ் உணர்வாளர்கள் திரளாக வருகை தந்தனர்.

பள்ளிக் குழந்தைகளின் நாடகம், ஆட்டம், பாடல் நிகழ்ச்சிகளை ஆசிரியைகள் அனைவரும் சிறப்புற அமைத்திருந்தனர். அனைவர்க்கும் இனிப்பு வழங்கப்பட்டது. தோழர் பெரியார்-நாகம்மை அறக்கட்டளையின் சார்பில், தாய்த் தமிழ்ப்பள்ளி வளர்ச்சிக்காக, உருவா 1,000 வழங்கப்பெற்றது. சு. நாச்சியப்பன் நன்றி கூறலுடன் மாலை 5 மணிக்கு விழா முடிவுற்றது.

# முருக்கன்குடி வே. இளங்கோவின் துணைவியார்
# சரசுவதி அம்மாள் மறைந்தார்!

முருக்கன்குடி வே.ஆனைமுத்துவின் தம்பி வே. இளங்கோவின் துணைவியாரும், முருக்கன்குடி க.வெங்கடாசலம்-அலமேலு இணையரின் மகளுமான சரசுவதி அம்மாள் அவர்கள், தம் 65ஆம் வயதில், 16.11.2016 புதன் காலை 9 மணிக்கு மறைவுற்றார் என்பதைத் தாளாத் துயரத்துடன் பதிவு செய்கிறேன்.

க. வெங்கடாசலம் பெற்றோர்களும் அவருடைய உடன்பிறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களும், என் பெற்றோர்மீதும் வே. ஆனைமுத்து, வே. இளங்கோ குடும்பத்தார் மீதும் கொள்ளை அன்பைக் கொட்டினார் கள்; இன்றும் கொட்டுகிறார்கள். ஏன்?

என் தந்தையைப் பெற்ற பாட்டி பச்சையம்மாள் க. வீரமுத்து, க. வெங்கடாசலம் ஆகியோரின் தந்தை வழிப் பாட்டனாரோடு பிறந்தவர். என் பாட்டனார் அயித்தான் என்பவர், 150 ஆண்டுகளுக்கு முன்னர் கும்பகோணம் - தாராசுரம் அடுத்த சோழன்மாளிகை யிலிருந்து, பச்சையம்மாள் என்கிற அவர்கள் வீட்டில் பிறந்த பெண்ணுக்கு ஆளாக முருக்கன்குடிக்கு வந்தவர். அந்தப் பச்சையம்மாளுக்கு அவர்களின் பெற்றோர் அளித்த மகள் மணக்கொடை (சீதனம்) ‘ஆவாரங்காடு’ என்கிற 4 ஏக்கர் நிலம். அந்நிலம் என் பங்காக இன்றும் உள்ளது. என் பாட்டனாரும் பாட்டியும் உழைத்துச் சம்பாதித்த ‘கொளவாக்கொல்லை’ என்கிற 4 ஏக்கர் வே. இளங்கோ-சரசுவதி இணையரின் பங்காக உள்ளது. இது குடும்ப வரலாறு. நிற்க.

க. வெங்கடாசலம் - அலமேலு இணையருடன் அவர்கள் திருமணத்திற்கு முன்னர், கோடை விடுமுறை தோறும், நான் என் வீட்டு மாடுகளை மேய்ப்பேன். அலமேலு, அம்மமுத்து ஆகியோருடன் நான், அஞ்சாங் கல் விளையாடுவேன்.

க. வெங்கடாசலம் - க. அலமேலு இணையரின் அன்பு மகள் சரசுவதியை என் தம்பி வே. இளங்கோ தம் துணைவியாக ஏற்றார். சரசுவதி - இளங்கோ இணையர் கடுமையான உழைப்பாளிகள். அவர்கள் பெற்றெடுத்த மகன்கள் வேம்புதுரை, சரவணன்; மகள்கள் மஞ்சள் அழகி, கண்ணகி ஆகியோரை கண்ணேபோல் காத்தவர்கள் இளங்கோவும், சரசுவதி யும்.

சரசுவதி உழைப்பே உருவானவர்; வாயோடு அடக்கமாகப் பேசுபவர்; எல்லோரிடமும் பாசத்தோடும் அன்போடும் பழகுபவர். என்னிடமும் என் துணைவி யார் சுசீலாவிடமும் என் மக்கள் பேரிலும் தீராத அன்பு கொண்டவர்.



என் தம்பி வே. இளங்கோ 14-10-2006இல் மறைவுற்றார்.

அண்மையில் ஆறு மாதங்களுக்கு முன் தம் வீட்டுக் கழிப்பறையில் கால் சறுக்கி சரசு வதி விழுந்தார். இடுப்பு எலும்பு அடி பட்டுப் படுக்கை யாகிவிட்டார். வேம்பு துரை, சரவணன் குடும்பத்தினர் முடிந்த வரையில் வைத்தியம் செய்தார்கள்.

2016 ஆகத்திலும், 20.10.2016லும் நான் நேரில் சென்று நலன் உசாவி வந்தேன். என் மகன்கள் ஆனை. பன்னீர்செல்வம், ஆ. வெற்றி, ஆ. வீரமணி இவர்கள் இடையே சென்றுவந்தனர். என் துணைவி யார் வெளியில் நடமாட முடியாததால் எங்கும் எதற் கும் போக முடியவில்லை.

சரசுவதி மறைந்துவிட்டார் என்கிற செய்தி கிடைத்த போது, நான் கண் நோய் கண்டு இருந்தேன். என் குடும்பத்தின் சார்பில் ஆனை. பன்னீர்செல்வம், மகள் அரி. தமிழ்ச்செல்வி, மருமகன்கள் சீனு. அரிமாப் பாண்டியன், க. இராமச்சந்திரன், ஆ. வெற்றி, விசய லட்சுமி ஆ.வீரமணி, மலர்க்கொடி ஆகியோர் நேரில் 17.11.2016 மாலை, சரசுவதியின் உடல் எரியூட்டு நிகழ்ச்சியில் பங்கேற்றனர். வரும் 1.12.2016 வியாழன் காலை சரசுவதி அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சியில் நானும் குடும்பத்தாரும் பங்கேற்போம்.

பெற்றோரை இழந்து துயரத்துக்கு ஆளாகியுள்ள மகன்கள் வேம்புதுரை, சரவணன், மகள்கள் மஞ்சள் அழகி, கண்ணகி, இரண்டு மருமகன்கள் க.திருமாவள வன், இரா.தனராசு, இரண்டு மருமகள்கள் தமிழ்ச் செல்வி, செல்வி பெயரக்குழந்தைகள் மற்றும் எங்களின் மைத்துனர்கள் வெ. வீரமுத்து, வீ. பாலுசாமி, வீ. தனராசு குடும்பத்தினர் மற்றும் எல்லா உறவினர் களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், தாளா வருத்தத் தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாழ்க சரசுவதி-இளங்கோ புகழ்!**

**18.11.2016** **- வே. ஆனைமுத்து**

# ரூ.500 ரூ.1000 செல்லாது: அதிரடித் தாக்குதல் யார் மீது?

குட்டுவன்

இந்தியாவில் உள்ள கணக்கில் வராத பணத்தைக் கண்டுபிடிப்பதற்காக அதிரடித் தாக்குதல் என்ற பெயரில், மோடி அரசு நவம்பர் 8ஆம் நாள் ரூ.500 ரூ.1000 ஆகியவற்றைச் செல்லாது என்று இரவோடு இரவாக அறிவித்தது. 13 நாட்கள் ஆகியும் வங்கிகளில் செலுத்திய பணத்தொகையையும் வைத்திருந்த தொகையையும் பெரும்பாலான மக்கள் தங்களின் அன்றாடத் தேவைகளுக்காக எடுக்க முடியாமல் தவித்து வருகின்றனர். வங்கிகளின் முன்பு கூட்டம் இன்றும் குறையவில்லை. கடந்த 13 நாட்களில் இந்தியப் பொருளாதாரமே முடக்கப்பட்டிருக்கிறது. மோடி நடவடிக்கைக்கு உண்மையான காரணம் கருப்புப் பணப் பொருளாதாரத்தை அடித்து நொறுக்குவதாக இருந்தால் இத்திட்டத்தை எல்லோரும் வரவேற்று இருப்பார்கள். ஆனால் ஏழை நடுத்தர மக்களைப் பெரும்பாதிப்புக்கு உட்படுத்திய இத்திட்டம் நடைமுறையில் பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது.

இக்கட்டுரையாசிரியர் சிந்தனையாளன் ஏட்டில் கருப்புப்பணம் தொடர்பாக 2016 பொங்கல் மலரில் எழுதிய கண்ணாமூச்சிக் காட்டும் கருப்புப்பண அரசியல் (அய்யா ஆனைமுத்து தந்த தலைப்பு) என்ற கட்டுரையும், ஷபனாமா ஆவணமும் பயமுறுத்தும் உண்மைகளும் என்ற தலைப்பில் மே 2016இல் மற்றொரு கட்டுரையும் கருப்புப் பண அரசியலின் பல பரிமாணங்களைப் பற்றி விரிவாக விளக்குகின்றன. ரூபாய் நோட்டுகளைச் செல்லாது என்று அறிவிப்பது இந்தியாவிற்குப் புதிதன்று.

1946இல் பிரித்தானியப் பேரரசு இந்தியாவை ஆண்டபோது ரூபாய் நோட்டுகள் செல்லாது என்றும், 1978இல் மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்த போது ரூ.1000 ரூ.5000 ரூ.10000 நோட்டுகள் செல்லாது என்றும் அறிவிப்புகளை நடுவண் அரசு வெளியிட்டது. 1978இல் ஜனதா அரசு வெளியிட்ட உயர் மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பு ஓர் அவசரச் சட்டத்தின் வழியாக முறையாக (Ordinance) அறிவிக்கப்பட்டது. உடனடியாக மத்திய ரிசர்வ் வங்கி உண்மையான முறையில் பணத்தைக் கணக்கு வைத்திருப்பவர்கள் ரிசர்வ் வங்கி மற்றும் வணிகவங்கிகள் வழியாக மாற்றிக்கொள்ளலாம் என்றும் அறிவித்தது. மும்பை, சென்னை, கல்கத்தா போன்ற பெரு நகரகங்களில் பலர் வரிசையில் நின்று பணத்தை மாற்றினர். குறிப்பாக குஜராத் மாநிலத்தில் பல வைர வியாபாரிகளும் பெரும் பணக்காரர்களும் ரூ.1000 ரூ.5000 ரூ.10000 பணத்தாள்களைத் தெருவில் வீசியதை அன்றைய



*ஏ.டி.எம்.இல் பணம் கிடைக்காததால் கொதித்தெழுந்த மக்கள்*

நாளேடுகள் புகைப்படங்களுடன் வெளியிட்டிருந்தன. பெரும் முதலாளிகள் கோயிலிலும் இல்லங்களிலும் வழிபட்டு வந்த லட்சுமியைக் குப்பைத் தொட்டியில் வீசினர். அவற்றை ஏழைகள் எடுத்துச் சுண்டல் சாப்பிடும் தட்டுகளாகப் பயன்படுத்தினர். இந்த நடவடிக்கை நடுத்தர சாமானிய மக்களைச் சிறிதளவும் பாதிக்கவில்லை என்பதே உண்மை.

இக்கட்டுரையாசிரியர் 1978இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த போது ரூ.725 மாத ஊதியமாக வழங்கப்பட்டது. கல்லூரி ஆசிரியர்களுக்கு இதைவிடக் குறைவாகவே இருந்தது. ஆனால் அன்றைய பணத்தின் உண்மை மதிப்பு இன்றைய பணத்தின் மதிப்போடு ஒப்பிடும் போது உயர்ந்தே இருந்தது என்பது உண்மையாகும். எனவே 1978ஆம் ஆண்டு உயர் மதிப்பு நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தபோது, பெரும்பான்மையான அரசு பொதுத்துறை வங்கி ஊழியர்களையும், எழை எளிய மக்களையும் பாதிக்கவில்லை என்பதுதான் உண்மை. காங்கிரசுக் கட்சியும் இந்திரா காந்தி குடும்பத்தினரும் தங்களுடைய கணக்கில் வராத பணத்தை இந்த உயர் மதிப்புள்ள நோட்டுகளில் பதுக்கி வைத்துள்ளார்கள் என்று உளவுத்துறை அளித்த தகவலின் பேரிலேயே உயர் மதிப்புப் பணம் செல்லாது என்று 1978இல் ஜனதா அரசு கொண்டு வந்த நடவடிக்கைக்கும் அரசியல் உள்நோக்கம் இருந்ததாகப் பல அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டனர். மொரார்ஜி கொண்டு வந்த திட்டம் வெற்றியில் முடிந்தது எனப் பல ஆய்வாளர்கள் தற்போது சுட்டுகின்றனர்.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதி பாதிப்பு காரணமாக, உணவு மற்றும் நுகர்வுப் பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. இதன் காரணமாக உணவுப் பொருட்களையும் மற்ற பொருட்களையும் பதுக்கிக் கள்ளச் சந்தை வணிகம் பெருகியதால்

பிரித்தானிய அரசு எவ்வித அரசியல் நோக்கமுமின்றி பொருளாதார நோக்கோடு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாகவே 1946 நிகழ்வு இருந்தது. இங்கிலாந்தின் 10 பவுண்ட் மதிப்புடைய பணம் செல்லாது என்று அறிவிக் கப்பட்டது. அப்போது ஒரு பவுண்ட் பணத்திற்கு 1.25 அமெரிக்க டாலர் இணையாக இருந்தது. எனவே தற்போது எடுக்கப்பட்ட நடவடிக்கையையும் அன்றைய பண நடவடிக்கைகளையும் ஒப்பிடுவது சரியான அணுகுமுறையாக அமையாது. பெரும் தொழில்கள் பிரித்தானிய முதலாளிகளுக்குச் சொந்தமாக இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் பணமதிப்பு, தொடர்ந்து உலக வங்கி, பன்னாட்டு நிதியம், ஆதிக்க நாடுகளின் அழுத்தத்தால் பல முறை குறைக்கப்பட்டுள்ளது. 1966ஆம் ஆண்டில் உலக வங்கிக் கொடுத்த அழுத்தத்தால் இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது இந்தியாவின் பணமதிப்பு 36.5 விழுக்காடு அளவிற்குக் குறைக்கப்பட்டது. 1966-2016 வரை இந்தியாவின் நாணய மதிப்பு பல முறை குறைக்கப் பட்டுள்ளது. இன்று இந்தியாவின் ஆண்டு வளர்ச்சி 7 விழுக்காடாகவும் அமெரிக்காவின் ஆண்டு வளர்ச்சி 1 அல்லது 2 விழுக்காடாகவும் இருக்கும் நிலையிலும் அமெரிக்க டாலரின் மதிப்பே உயர்ந்து வருகிறது. தற்போது ஒரு அமெரிக்க டாலருக்கு இந்தியாவின் பணமதிப்பு ரூ.68 ஆக உள்ளது. 1980க்குப் பிறகு ரூபாயின் மதிப்பு உள்நாட்டிலும் வாங்கும் சக்தியை இழந்து வருகிறது.

சான்றாக. இன்றைய ரூ.500 ரூ.1000 பணத்தாள் களின் மதிப்பை 1978ஆம் ஆண்டின் மதிப்போடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியப் பணத்தின் வாங்கும் சக்தி எவ்வளவு குறைந்துள்ளது என்பதை அறிய முடியும். **விலைவாசி ஏற்றமும் பணமதிப்புக் குறைப்பும் ஏழை எளிய நடுத்தர மக்களைத்தான் தொடர்ந்து பாதித்து வருகிறது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஆனால் பெரும் பணக்காரர்கள் இதைப் பற்றி எள்ளளவும் கவலை கொள்ளவில்லை என்பதை இன்றைய நிகழ்வுகளே எடுத்துக்காட்டு கின்றன.**

அமெரிக்காவின் புகழ்பெற்ற மசாச்சுசட்சு பல்கலைக் கழகத்தின் பொருளாதார ஆய்வாளர் அமித் போஸ்லே (Amit Basole) பெரும் பணக்காரர்களின் வளர்ச்சியைப் பற்றியும் ஏழை-பணக்காரர்களுக்கு இடையே ஏற்றத் தாழ்வு பெருகி வருவதையும் தனது ஆய்வுக்கட்டுரையில் (Economic and Political Weekly (EPW)), 4th Oct. 2014) குறிப்பிட்டுள்ளார். ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கடைப் பிடிக்கப்பட்ட கட்டுப்பாடுகளையுடைய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக (1950-70) பெருமளவில் மக்களிடையே காணப்பட்ட வருமான ஏற்றதாழ்வு குறைந்திருந்தது. பெரும் பணக்காரர்கள் (1 விழுக்காடு), மிகப்பெரும் பணக்காரர்கள் (0.1விழுக்காடு), உச்சநிலை பெரும் பணக்காரர்கள் (0.01 விழுக்காடு) ஆகியோரின் உண்மையான வருமானம் (Real Income) இக்காலக் கட்டத்தில் குறைந்திருந்தது. ஆனால் இந்தியர்களின் சராசரி வருமானம் இன்றைய நிலையோடு ஒப்பிடு கையில் உயர்ந்து காணப்பட்டது. 1980-90 வரை ஏறக்குறைய இந்நிலையே நீடித்தது. 1990க்குப் பிறகு 40 இலட்சம் பெரும் பணக்காரர்கள் (1 விழுக்காடு), 4 இலட்சம் மிகப் பெரும் பணக்காரர்கள் (0.1) உச்சநிலை 40000 பெரும் பணக்காரர்களின் (0.01) வருமானம் பெருமள விற்கு உயர்ந்தது. மக்களிடையே வருமான சொத்து ஏற்றத்தாழ்வு பெருகியது என்று ஆய்வாளர் போஸ்லே குறிப்பிட்டுள்ளார். இந்தக் கள ஆய்வினை 1999ஆம் ஆண்டு வரை நடுவண் அரசால் வெளியிடப்பட்ட இந்திய அளவிலான வருமானவரி செலுத்தும் நபர்கள் பற்றிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மேற்கொண்ட தாகவும் இந்த ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் திட்டமிட்டே 1999 ஆண்டிற்குப் பிறகு இந்தப் புள்ளி விவரம் நடுவண் அரசால் வெளியிடப்படவில்லை என்பதிலிருந்தே நடுவண் அரசு பெரும் பணக்காரர்கள் பக்கம் சாய்ந்துவிட்டது என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

மேலும் 1990-2010 வரை உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக இந்தப் பெரும் பணக்காரர் களுக்கு வரித் தள்ளுபடியும் வரிச் சலுகைகளும் அளித்ததன் வழியாக ஏறக்குறைய 150 இலட்சம் கோடியை நடுவண்அரசு இழந்துள்ளது.

மும்பையிலிருந்து வெளிவரும் அரசியல் பொருளா தார வார இதழின் (EPW) ஆய்வு மையத்தைச் சார்ந்த ஜே.டென்னிஸ் ராஜ்குமார், ஆர்.கிரு'ணசாமி ஆகியோர் எழுதிய ஆய்வுக்கட்டுரையில் (Dec.2015) நடுவண் அரசின் மக்கள் விரோதப் போக்கினைச் சுட்டிக் காட்டி யுள்ளனர்.

மோடி அரசு அமைந்த பிறகு 2015-16 முதல் ஆறு மாதங்களில் மறைமுக வரிகளின் பங்கு பெருகியுள்ளது என்பதைப் புள்ளிவிவரங்களோடு மெய்ப்பித்துள்ளனர். மறைமுக வரியை ஏழை எளிய நடுத்தர மக்கள் என அனைத்துத் தரப்பினரும் செலுத்துகின்றனர். மறைமுக வரிகளின் சுமையால் வருமானம் மற்றும் சொத்து ஏற்றத்தாழ்வுகள் பெருகி வருகின்றன என்பதையும் இந்த ஆய்வாளர்கள் சுட்டியுள்ளனர். 0.01 விழுக்காடு அளவில் உள்ள உச்சநிலை பெரும் பணக்காரர்களுக்கு ஆதரவா கத்தான் நடுவண்அரசு செயல்பட்டு வருகிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இதே ஏட்டில் (ஏப்ரல் 18 2015) கல்வி பொதுச்சுகாதாரத் துறைகளுக்கான பொது நிதி ஒதுக்கீட்டை மோடி அரசு குறைத்துள்ளது என்பதைத்

தனது தலையங்கத்தில் குறிப்பிட்டு தனது கடும் கண்டனத்தையும் இந்த வார ஏடு தெரிவித்துள்ளது. அனைவருக்கும் கல்வி திட்டத்தில் மாநிலங்களுக்கு நடுவண் அரசு 2015-16இல் அளித்து வந்த தொகையில் ஒரே ஆண்டில் 9000 கோடி ரூபாயைக் குறைத்துள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டை ரூ.16316 கோடியில் இருந்து ரூ.8000 கோடியாகக் குறைத்துள்ளது. ஆனால் மோடிக்கு அருகி லேயே உலா வரும் அம்பானி குழுமம் கோதாவரி படுகையில் நடுவண் அரசிற்குச் சொந்தமான எண்ணெய் எரிவாயு நிறுவனத்திற்கு (ONGC) ஒதுக்கப்பட்ட பகுதியில் ரூ.30ஆயிரம் கோடி மதிப்பு எரிவாயுவைத் திருடியதை நீதிமன்றமும் அமெரிக்க நாட்டின் தீர்ப்பாயமும் உறுதி செய்த பின்பு, ஏன் இந்த நிறுவனத்தின் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை இன்று வரை எடுக்கப்பட வில்லை என்பது மோடி அரசின் குஜராத்திய முதலாளிகள் சார்பு நிலையை எடுத்துக்காட்டுகிறது. இது தொடர்பாக (EPW டிசம்பர் 5 2015) இந்திய எரிவாயு பெரும் கொள்ளை (Great Indian Gas Robbery by Paranjoy and Guha Takurta) என்ற தலைப்பில் பரோஞ் ஜாய் குகா தக்குர்தா விளக்கமாக, கட்டுரை ஒன்றை வெளியிட்டுள் ளனர்.

மேலும் உயர் மதிப்புடைய பணம் செல்லாது என்று ஒரு முதன்மையான கொள்கையை அறிவிக்கும் காலத்தில், அம்பானியின் மிக நெருங்கிய உறவினரான உர்ஜித் பட்டேலை இந்தியாவின் மைய வங்கியின் ஆளுநராக நியமித்தது பல ஐயங்களை உருவாக்கி யுள்ளது. பாஜகவின் இராஜஸ்தான் சட்டமன்ற உறுப்பினர், உயர் மதிப்புடைய ரூ.500 ரூ.1000 செல்லாது என்ற திட்டம் ஏற்கெனவே அம்பானி அதானிக்குத் தெரிவிக் கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா தென் ஆப்பிரிக்கா (BRICS) ஆகிய 5 நாடுகளின் கூட்டமைப்பினை உருவாக்கி பொருளாதார வர்த்தக நிதி உறவுகளை மேம்படுத்துவதற்குத் திட்டங்கள் வகுத்து வருகின்றன. இக்கூட்டமைப்பின் சார்பில் சீனாவில் பிரிக்சு வளர்ச்சி வங்கி (BRICS Development Bank) தொடங்கப்பட்டது. இந்த வங்கியின் தலைவராக கே.வி.காமத் என்ற இந்தியர் உள்ளார். இவரும் ஒரு தனியார் பெரு முதலாளித்துவக் குழுமத்தில் இருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த கூட்டமைப்பில் உள்ள பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் கருப்புப் பணம் நடமாட்டம் அதிகம் உள்ளது என்பதை உலக அளவிலான பல ஆய்வறிஞர்கள் சுட்டுகின்றனர். இருப்பினும் மற்ற மூன்று நாடுகள் பொருளாதாரத்தில் குழப்பம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் இந்தக் கருப்புப் பண நடவடிக்கையை வேறு வழிகளில் எடுக்கலாம் என்று ஆலோசித்து வருகின்றன. ஆனால் இந்தியா மட்டும் ஏன் அவசர கோலத்தில் இந்தப் பணமதிப்பு செல்லாது என்ற நடவடிக்கையை எடுத்தது என்று பலர் வினா எழுப்பியுள்ளனர். அது மோடியின் அரசியல் சார்ந்த தன்னிச்சையான தான்தோன்றித் தனமான நடவடிக்கையா? என்று உலகின் புகழ் பெற்ற அமெரிக்க இங்கிலாந்து நாளேடுகள் கேள்வி எழுப்பி வருகின்றன. பிரதமர் அமைச்சகமும் மத்திய ரிசர்வ் வங்கியும் இணைந்து உரிய அறிவார்ந்த செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டன என்று இவ்வேடுகள் குற்றம் சாட்டுகின்றன. இதற்கு முதன்மை யான காரணம் பெரும்பான்மையான பாமர மக்களின் அன்றாடப் பணத் தேவைகளைக் கூடத் துல்லியமாக நடுவண் அரசு கணக்கிடவில்லை என்பதே நாள்தோறும் வங்கிகள் முன்பு நிற்கும் கூட்டம் சான்று பகர்கின்றது.

பெரும் பணக்காரர்களுக்காகவே நடுவண்அரசு இயங்கி வருகிறது என்பதை மேற்குறிப்பிடப்பட்ட ஆதாரங்கள் சுட்டுகின்றன. 2016இல் இந்தியப் பொருளாதாரத்தையும் அதன் அடிப்படைப் பொருளாதார நிதிக் கூறுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இந்த ரூ.500 ரூ.1000 காகிதப் பணம் செல்லாது என்ற



*ரூ.500, 1000 செல்லாது என்கிற மோடியின் அறிவிப்பை கண்டித்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம்.*

அறிவிப்பு இந்தியப் பொருளாதார கருப்புப் பணக் கட்டமைப்பைச் சிறிய அளவில்கூட பாதிப்பிற்கு உட்படுத்த வில்லை என்பதை நாள்தோறும் நிறைவேறி வருகிற நிகழ்வுகள் மெய்ப்பிக்கின்றன.

2011-12 விலை அடிப்படையில் 2016 சனவரி திங்களில் இந்தியாவினுடைய உள்நாட்டு ஒட்டு மொத்த வருமானம் 113 இலட்சம் கோடிகள் ஆகும். 2016இல் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 32 இலட்சத்து 98 ஆயிரம் கோடிகள் ஆகும்.

இந்தக் கடன் ஒவ்வொரு ஆண்டும் 72 ஆயிரம் கோடி அளவில் பெருகி வருகிறது.

இந்தியாவின் உள்நாட்டுக் கடன் 2015-16இல் 52 இலட்சத்து 78 ஆயிரத்து 717 கோடிகள் ஆகும்.

2015-16 இன்படி செலுத்திய கடன் தொகை வட்டித் தொகை அளவு 3 இலட்சத்து 14 ஆயிரம் கோடிகள் ஆகும்.

இந்தியாவினுடைய ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி யில் ஒட்டுமொத்த உள்நாட்டு சேமிப்பின் பங்கில் (2015-16) 23 விழுக்காட்டினர் குடும்பங்கள் சேமிப்பதே ஆகும். தனியார் துறை - 8.5 பொதுத்துறை 3.1 விழுக்காடாகவும் உள்ளன. இந்தப் புள்ளிவிவரப்படி ஒட்டுமொத்த உள் நாட்டு சேமிப்பில் 66 விழுக்காடு சேமிப்பு குடும்பங்கள் வழியாக நடைபெறுகிறது என்பதை உறுதி செய்கிறது. இந்தப் புள்ளிவிவரங்கள் இந்தியாவில் பல ஆண்டு களாகப் பெருகி வருகிற கருப்புப் பணத்தின் அளவு இந்தியாவின் உள்நாட்டு ஒட்டு மொத்த வருமானம் கடன் சேமிப்பு ஆகியவற்றிற்கு இணையாக உள்ளதோ என்று பலர் ஐயம் தெரிவிக்கின்றனர்.

உலக அளவில் தங்கத்தையும் மற்ற நாடுகளின் பணத்தையும் (அந்நியச் செலவாணி) வைத்திருக்கும் பட்டியல், பல நிதியியல் வங்கியியல் சார்ந்த விவரங் களை அளிக்கிறது. அவ்வரிசையில் 1.சீனா 2.ஜப்பான் 3.சவுதி அரேபியா 4.சுவிட்சர்லாந்து 5.தைவான் 6.ரஷ்யா 7.தென் கொரியா 8.பிரேசில் 9.ஹாங்காங் 10.இந்தியா ஆகியன வரிசைப்படுத்தப்பட்டுள்ள முதல் பத்து நாடுகளாகும். இந்தப் புள்ளிவிவரங்கள் இந்தியா புள்ளிவிவரம் (Indiastat 2016, p.46) என்ற நூலில் இடம் பெற்றுள்ளன. இவை பல உண்மைகளைப் பறைச்சாற்று கின்றன. உலக அளவில் ஏற்றுமதி செய்வதில் சீனா முதல் நாடாக இருப்பதாலும் பொருளாதார வளர்ச்சியில் கடந்த பத்தாண்டுகளாக ஆண்டு வளர்ச்சி 8 விழுக் காட்டிற்குக் குறையாமல் இருப்பதாலும் உலகளவில் உள்ள மற்ற நாடுகளின் பணத்தையும் தங்கத்தையும் சீனா பெருமளவில் பெற்றிருக்கிறது. இந்தியா உலக அளவில் அதிகத் தங்கத்தை இறக்குமதி செய்திருந்தாலும் பெரும் பணக்காரார்கள் தங்களின் கருப்புப் பணத்தைத் தங்கத்திலும் அமெரிக்க டாலரிலும் வைத்திருக்கின்றனர். மேலும் கோயில்களின் உண்டியல்களில் குவியும் பணம் பல இலட்சம் கோடி ரூபாய் அளவில் தங்க வைர நகைகள் ஆகியன முடங்கி- இறந்த மூலதனமாக (Dead Capital) இருப்பதால் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படவில்லை. எனவே தான் இந்தியா இப்பட்டியலில் பத்தாவது இடத்தில் உள்ளது. மேலும் இந்தியாவில் கருப்புப் பணம் டாலர் மதிப்பில் சுவிஸ் நாட்டு வங்கிகளிலும், பனாமா போன்ற பல தீவுகளிலும் இருப்பதால் இந்தியப் பொருளாதாரத்தின் தேவைகளுக்கு சிறிதளவும் பயன்படாமல் உள்ளது. இச்சூழலில் வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள கருப்பு பணத்தின் மீதுதான் நடுவண் அரசு துல்லியத் தாக்கு தலைத் தொடங்கியிருக்க வேண்டும். நாட்டின் ஓராண் டிற்கு ஒட்டு மொத்த உள்நாட்டு வருமானமான ஒரு இலட்சத்து 113 கோடிகளை விட, இந்தியாவின் கருப்புப் பணம் பல வடிவங்களில் பல நிலைகளில் பல நாடுகளில் உள்ளன. ஆனால் பெரும்பாலான ஏழை மக்கள் செலுத்தும் வரிப்பணத்திலிருந்துதான் உள்நாட்டு வெளிநாட்டு கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படுகிறது. இந்தியா புள்ளிவிவரம்(Indiastat 2016, p.42) வறுமை யின் பன்முகப் பரிமாணங்களின் அடிப்படையில் இந்தியாவினுடைய வறுமையைக் குறிப்பிட்டுள்ளது. இதில் 2016ஆம் ஆண்டில் இந்தியாவில் வறுமை கோட்டில், 63 கோடி மக்கள் உள்ளனர் என்றும், மக்கள் தொகை யில் இது 51.1 விழுக்காடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேளாண் தொழிலாளர்கள், தொழில் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள், சிறு வணிகர்கள் சிறிய அளவில் கடைகள் வைத்து வணிகம் செய்பவர்கள் அதில் பணியாற்றுவோர், ஆட்டோ ஓட்டுனர் உட்பட அமைப்பு சாரா தொழிலாளர்களும் ஒட்டு மொத்த இந்தியப் பொருளாதார நடவடிக்கைக்குள் வருகின்றனர். அரசு தனியார் அலுவலகங்கள், வங்கி காப்பீடு போக்குவரத்து தொலைத்தொடர்பு போன்ற அனைத்து நிறுவனங்களில் 10 கோடி பேர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் அமைப்பு சார்ந்த தொழில்களின் கீழ் வருகின்றனர். 2016 புள்ளிவிவரங்களின்படி இந்தியாவில் வேளாண் தொழிலாளர்கள் 54.6 விழுக்காடு உள்ளனர். வேளாண் துறை தவிர்த்த முறைசாராத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 68 முதல் 76 விழுக்காடு உள்ளனர். இவர்கள்தான் தங்களின் கடும் உழைப்பால் இந்தியப் பொருளாதாரத்தைத் தாங்கி நிற்கின்றனர்.

பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தில் 2006 பிப்ரவரி திங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தின்படி ஊரகப் பகுதிகளில் வேலையில்லாதவர் களுக்கு 100 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. ரூ. 3 இலட்சத்து 64 ஆயிரம் கோடி அளவு 2015 வரை நடுவண் அரசு செலவிட்டுள்ளது. இன்றும் இவ்வேலைத் திட்டத்தில் 10 கோடி தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இத்திட்டத்தினால் பயன் பெற்ற ஏழை எளிய மக்கள்

தங்களுடைய பண சேமிப்பைத் தங்களின் இல்லங்களி லேயே வைத்திருக்கின்றனர். பிரதமர் மோடி அறிவித்த மக்கள் வங்கித் திட்டத்தின் கீழ் 22 கோடி பேர் இணைந் திருந்தாலும் போதிய அளவில் பணம் இந்த வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படவில்லை என்பதையும் அறிய முடிகிறது. **இந்திய மைய வங்கியின் புள்ளிவிவரப்படி 120 கோடி மக்கள் தொகை உள்ள இந்தியாவில் 45,175 வங்கிக் கிளைகள்தான் உள்ளன. வங்கிக் கிளைகளும் தானியங்கிப் பணம் வழங்கும் மையங் களும் பெரும்பாலும் நகர்ப்புறங்களை ஒட்டியே அமைந்துள்ளன. அதனால் 87 விழுக்காட்டு மக்கள் பயன்படுத்திய ரூ.500 ரூ.1000 தாள்கள் செல்லாது என்று அறிவித்தது மிகப்பெரிய அறிவுக்கேடான செயல் என்பதை இதன் வழியாக நாம் அறிய முடிகிறது. மேலும் இதுவரை 6 இலட்சம் கோடி ரூபாய் வங்கிகளில் செலுத்தப் பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்படுகிறது. இந்தப் பணம் முறையாக வங்கிக் கணக்கை வைத்துள்ள வர்களின் பணமே ஆகும். வங்கிக் கணக்கிற்கு வராத பணமே அதிகமாக உள்ளது என்பதைப் பல ஏடுகள் சுட்டுகின்றன.**

இன்றையப் பொருளாதாரச் சூழலில் சராசரியாக எல்லாவித கூலித் தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் உட்பட நாளொன்றுக்கு 300 முதல் 500 ரூபாய் வரை வருமானம் பெறுகின்றனர். பெரும்பாலான தொழிலாளர்கள் ரூ.500 ரூ.1000 பண மதிப்பில் சேமித்தும் வைத்துள்ளனர். குறிப்பாக காய்கறி விற்பனை தொடங்கி சிறு வணிகம் செய்பவர்கள் பலவித இன்னல்களுக்கு இடையேயும் வருமான ஏற்றத்தாழ்வு களுக்கு உட்பட்டுத் தொழில் புரிகின்றனர். இவர்களும் ரூ.500 ரூ.1000 மதிப்பு பணத்தை அன்றாட வணிகத் திற்குக் கையிருப்பில் வைத்துள்ளனர். ஓய்வூதியம் பெறுவோர், முதியோர்கள் நோய்வாய்ப்பட்டவர்கள் தங்கள் மகன் மகள் கொடுக்கும், பணத்தையும் வெளி நாட்டிலிருந்து அனுப்பும் பணத்தையும் கையிருப்பில் வைத்துள்ளனர். இந்தப் பிரிவினர்தான் இன்று நடுத் தெருவில் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

கருப்புப் பணத்தைப் பெருமளவில் யார் பதுக்கி உள் ளார்கள் என்பதைப் பற்றிய புள்ளிவிவரங்கள் நடுவண் அரசிற்கு நன்றாகவே தெரியும். கருப்புப் பணக்காரர்களின் பட்டியலைக் கேட்ட உச்ச நீதிமன்றத்திற்கோ மக்களுக்கோ அல்லது நாடாளுமன்றத்திற்கோ நிதியமைச்சர்களாக இருந்த பிரணாப் முகர்ஜி, பா.சிதம்பரம், இன்றைய நிதியமைச்சர் அருண் ஜெட்லி உள்ளிட்டோர் ஏன் தெரிவிக்கவில்லை? உலகில் உள்ள நேர்மையான 190 ஊடகங்களின் கூட்டமைப்புதான் கருப்புப்பண மோசடி களைக் கண்டுபிடித்துள்ளது.

இந்திய அரசு 1991க்குப் பிறகு தாராளமயமாக்கல் கொள்கையைப் பின்பற்றிப் பல சலுகைகளை அளித்து பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக ஆக்கி யுள்ளது. குறிப்பாக இந்திய ரிசர்வ் வங்கி வழியாக இந்தியாவிலிருந்து பணம் எடுத்துச் செல்லும் முறையை 2004இல் மன்மோகன் சிங் அறிமுகப்படுத்தினார். வணிகம் தொழில் செய்பவர்கள் ஆண்டிற்குப் பல இலட்சம் ரூபாயை எடுத்துச் செல்லாம் என்று அறிவிக்கப் பட்டது. மோடி அரசு அமைந்தவுடன் கோடி ரூபாய் அளவில் வரை எடுத்துச் செல்லலாம் என்று மாற்றப் பட்டது. இப்படி வெளிப்படையாக எடுத்துச் செல்லலாம் என நடுவண் அரசு அறிவித்த பின்பு பணம் பனாமா தீவில், சுவிட்சர்லாந்து, ஹாங்காங், மலேசியா, மொரிசியஸ் போன்ற நாடுகளிலும் இந்திய பெரு முதலாளிகளும் அரசியல் தலைவர்களும் கருப்புப் பணத்தைப் பதுக்கி வைத்துள்ளனர். இவர்களின் பெயர்ப் பட்டியலை உச்ச நீதிமன்றம் பல முறை கேட்ட பிறகு கமுக்கமான முறையில் ஒட்டிய உறையில் நீதிமன்றப் பார்வைக்கு நடுவண் அரசு அளித்தது. 2016இல் வந்த புள்ளிவிவரங்களின்படி சேனல் தீவுகள் கரிபீயக் கடற்கரையை ஒட்டிய பிரித்தானிய வெர்ஜின் தீவுகள் கேமன் தீவுகள் பஹரைன் நவுரு வனட்டு நாட்டுத் தீவுகளில் பெருமளவு கருப்புப் பணம் பதுக்கப்பட்டுள்ளதாக வருமானவரித் துறையின் முன்னாள் உயர் அலுவலரும் தேசியப் பொது நிதியியில் ஆய்வு நிறுவனத்தில் பணியாற்றி வரும் தீக்'த் சென் குப்தா இந்து நாளிதழில் (ஏப்ரல் 11,2016) ஒரு கட்டுரை யைத் தீட்டியுள்ளார்.

மேலும் 2016 ஏப்ரல் 9மும்பையில் இருந்து வெளி வரும் அரசியல் பொருளாதார (EPW) வார இதழில் பாரிஸ் நகரில் இருந்து இயங்கும் பொருளாதார முன்னேற்றம் ஒத்துழைப்பு மையம் இந்தக் கருப்புப் பணம் குறித்து ஒரு திட்டம் தீட்டி, அதற்கு நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஆதரவினைக் கேட்டது. உலகில் 96 நாடுகள் இதற்கு ஒப்புதல் அளித்தன. ஆனால் இந்தியா உட்பட நான்கு சிறிய நாடுகள் இந்தக் கருப்புப் பண மீட்சித் திட்டத்திற்கு கடுமையான முறையில் மறுப்புத் தெரிவித்தன என்பதைச் சுட்டிக்காட்டி இந்த ஏடு கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் இருந்து வெளியேறும் சட்டவிரோதப் பணத்தை இயக்குபவர் களும் இயங்கும் தன்மையும் 1948-2008 (The Drivers and Dynamics of Illicit Financial Flows from India: 1948-2008) என்ற 88 பக்கங்கள் அடங்கிய ஆய்வறிக்கையில் இந்தியாவினுடைய கருப்புப்பண நடவடிக்கைகள் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வறிக்கையில் மொத்த சட்டவிரோதச் சொத்துக்களில் 72.2 விழுக்காடு 32 இலட்சம் கோடி அளவிற்கு வெளிநாடுகளில் முடக்கப் பட்டுள்ளது. உள்நாட்டில் 27.8 விழுக்காடு 12 இலட்சம் கோடி அளவில் பதுக்கப்பட்டுள்ளது. இதில் அம்பானி, அதானி தொடங்கிப் பல நூறு கருப்புப்பண முதலைகள் அடங்குவர். இந்நாடுகளில் உள்ள கருப்புப் பணத்தைக் கொண்டு வருவதற்கு ஓர் அதிரடித் திட்டத்தை ஏன்





*ஏ.டி.எம். முன் பல மணிநேரம் கால்கடுக்க நிற்கும் மக்கள்*

செயல்படுத்தவில்லை? நீதிபதி வாஞ்சு குழு தனது அறிக்கையில் குறிப்பிட்ட கருப்புப் பணக் கூட்டமைப்பில் அரசியல்வாதிகள், உயர் அரசு அலுவலர்கள், முதலாளிகள் ஒரு கமுக்கமான சமுதாயமாக ஒருங்கிணைந்து செயல்படுகிறார்கள் என்பது இன்றும் உண்மையாகிறது அல்லவா?

இந்திரா காந்தி அம்மையார் 1969இல் இந்திய வணிக வங்கிகளைத் தேசியமயமாக்கிய போது விவசாயிகள் சிறுகுறு நடுத்தர தொழில் முயல்வோர் ஆகியோர்க்குக் கடனளிப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் கடந்த 25 ஆண்டுகளாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பெருமுதலாளிகளுக்குப் பல இலட்சம் கோடி அளவில் கடன் தரப் பட்டுள்ளது. இதில் பாரத ஸ்டேட் வங்கியில் மட்டும் 2016-17 நிதியாண்டின் முதல் ஆறு மாதத்தில் அம்பானி, அதானி, எஸ்.ஆர். வேதாந்தா போன்ற குஜராத்திகளுக்கும் மல்லையா போன்றவர்களுக்கும் ரூ.10,673 கோடியை வராக்கடனாக அறிவித்துத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பெரும் பணக்காரர்கள், மிகப் பெரும் பணக்காரர்கள், உச்சநிலை பெரும் பணக்காரர்கள் அவர்களோடு தொடர்புடைய ரியல் எஸ்டேட் அதிபர்கள்-அரசியல் தரகர்கள், கார்ப்பரேட் போலி சாமியார்கள் மீது நாட்டு விரோத செயல்களில் ஈடுபட்டார்கள் என்று கூறி குற்ற இயல் தண்டனைச் சட்டங்களின் வழி நடவடிக்கை எடுப்போம் என்ற அறிவிப்பை நடுவண் அரசு ஏன் வெளியிடவில்லை? **தற்போது அறிவிக்கப்பட்ட ரூ.500 ரூ.1000 தாள்கள் செல்லாது என்ற அறிவிப்பால் கடந்த இரு வாரங்களாகப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட இழப்பு இந்தத் திட்டத்தால் பெறப்போகிற பொருளாதாரப் பயனைக் கூட அடியோடு சிதைத்துவிட்டது. எனவே மோடி அறிவித்த அதிரடித் தாக்குதல் ஏழை நடுத்தர பெரும்பான்மையான மக்கள் மீது நடத்தப்பட்ட கொடுமையான அதிரடித் தாக்குதலே ஆகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.**

# வீரபோகம் இராசமாணிக்கம் துணைவியார் சந்திரோதயம் அம்மையார் மறைந்தார்!



அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டியை அடுத்த வீரபோகம் இராமசாமியின் மகன் இராசமாணிக்கம். வீரபோகம் துரைசாமியின் மகன் தயாளசாமி. இவர் கள் உடன்பங்காளிகள்.

மயிலாடுதுறையை அடுத்த கழுக்காணி முட்டம் நாகராசன் தங்கைகள் சந்திரோதயம், சாந்தகுமாரி ஆகியோர்.

இவர்களுள் மூத்தவரான சந்திரோதயம் அவர்களை இரா. இராசமாணிக்கம் திருமணம் செய்து கொண்டார்; இளையவரான சாந்தகுமாரியை து. தயாளசாமி வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

இரா. இராசமாணிக்கம் துணைவியார் பிறந்த ஊரான கழுக்காணி முட்டத்தில் குடியேறினார். அங்கு பயிர்த்தொழிலுடன் மளிகைக் கடையும் நடத்தி வந்தார். அன்னார் மிகச் சிறந்த பண்பாளர்; ஊரில் செல்வாக்கோடு திகழ்ந்தவர். அன்னார் 4.11.1980இல் மறைவுற்றார். இராசமாணிக்கம் - சந்திரோதயம் இணையருக்கு மகப்பேறு இல்லை.

திருச்சியில் தமிழாசிரியர் பணியில் சிறப்போடும் பேரோடும் விளங்கிய புலவர் து. தயாளசாமி - சாந்த குமாரி இணையரின் மக்களான நச்சினார்க்கினியன், கலைமதி, இராமமூர்த்தி, செந்தமிழ்ச்செல்வி, புகழேந்தி அய்வரையும் தாம் பெற்றெடுத்த மக்களாக இராச மாணிக்கம்-சந்திரோதயம் இணையர் கருதினர்; புரந்தனர்.

பணிஓய்வுக்குப் பின்னர் புலவர் து. தயாளசாமி - சாந்த குமாரி குடும்பத்தினர் கழுக்காணி முட்டத்தில் குடியேறினர். இராசமாணிக்கம் போலவே பயிர்த் தொழிலை மேற்கொண்டனர். புலவர் து. தயாளசாமி தம் 86ஆம் அகவையில் 1.7.2005 இல் மறைவுற்றார்.

2015 இறுதியில் நோய்வாய்ப்பட்ட சந்திரோதயம் அம்மையாருக்கு, மிகப் பொறுப்போடு குடும்பத்தினர் வைத்தியம் செய்தனர். ஆயினும் 10.11.2016இல் நம்பிக்கை இழந்தனர்.

நோயிலிருந்து மீளாமலேயே, தம் 90ஆம் வயதில், இரா. சந்திரோதயம் அம்மையார் 15.11.2016, பகல் 11.50க்கு உயிர்நீத்தார். அன்னாரின் உடல் 16.11.2016இல் எரியூட்டப் பட்டது.

அன்னாரின் இழப்பால் துயருக்கு ஆளாகியுள்ள அம்மையார் சாந்தகுமாரி-தயாளசாமி, மக்கள் இராமமூர்த்தி, கலைமதி, செந்தமிழ்ச்செல்வி, புகழேந்தி மற்றும் நாகராசனின் மக்கள் செங்குட்டுவன், இளங்கோவன் மற்றும் பெயரக் குழந்தைகள் ஆகியோர்க்கு மனங்கசிந்த இரங்கலை உரித்தாக்குகிறேன்.

**வாழ்க இரா. சந்திரோதயம் அம்மையார் புகழ்!**

**18.11.2016** **- வே. ஆனைமுத்து**

# இந்திய அரசின்
# புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு
## அனைத்திந்தியப் பொது நுழைவுத் தேர்வு எதிர்ப்பு
## இந்தி ஆதிக்க எதிர்ப்பு - சமற்கிருதத் திணிப்பு மாநாடு ஏன்?

இந்தியாவில் காலங்காலமாக மனுஸ்மிருதி போன்ற இந்துமத சாத்திரங்களின் பேரால் கல்வி என்பது பார்ப்பனர்களின் முற்றுரிமையாக இருந்து வந்தது. வெகுமக்களான சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் கல்வி பெறும் உரிமை மறுக்கப்பட்டு வந்தது.

ஆங்கிலேய அரசு 1835இல், மெக்காலே கல்வித்திட்டத்தின் மூலம் அனைத்துப் பிரிவினரும் கல்வி வாய்ப்பைப் பெறுவதற்கான பொதுப்பள்ளி முறையைக் கொண்டுவந்தது. ஆயினும், 1950 வரையில் பார்ப்பனரும் மேல்சாதியினருமே கல்வி - வேலை வாய்ப்புகளை முழுவதுமாகக் கைப்பற்றி வந்தனர்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில், அது நடைமுறைக்கு வந்த 1950ஆம் ஆண்டிலிருந்து பத்தாண்டுகளுக்குள் 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் இலவயக் கட்டாயக் கல்வி வழங்கிட அரசு முயற்சிக்க வேண்டும் என்று எழுதப்பட்டது. அப்போது, கல்வித் துறை அதிகாரம் முழுமையும் 'மாநில அரசு அதிகாரங்கள்' (State List) பட்டியலில் இடம்பெற்றிருந்தது. தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட சில மாநிலங்களைத் தவிர்த்து, பெரும்பாலான மாநிலங்கள் 8ஆம் வகுப்பு வரையிலான தொடக்கக் கல்வியை அளிப்பதில் அக்கறை காட்டவில்லை.

இந்திய அரசு 1966இல் அமைத்த கோத்தாரி கல்விக்குழு, கல்வியைப் பரவலாக்கிட பல சிறந்த பரிந்துரைகளைக் கூறியது. ஆனால், எந்த ஒரு அரசும் அவற்றைச் செயல்படுத்த முனையவில்லை. இன்றும் இந்திய அளவில் 14 அகவைக்கு மேற்பட்டோருள் 30 கோடிப் பேருக்கு மேல் எழுத்தறிவற்றவர்களாக வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திராகாந்தி தலைமை அமைச்சராக இருந்தபோது நெருக்கடிநிலை காலத்தில் 03-01-1976இல் கொண்டுவந்த 42ஆவது அரசமைப்புச்சட்டத் திருத்தத்தின்படி மாநில அரசு அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வித்துறை அதிகாரம் முழுமையும் இந்திய நடுவண் அரசுக்கே முற்றுரிமை வழங்குகின்ற பொது அதிகாரப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்பட்டது.

அதுமுதல், மாநில அரசுகளின் எல்லாக் கல்வித் துறை அதிகாரங்களும் படிப்படியாக இந்திய அரசால் பறிக்கப்பட்டு வருகின்றன.

1986இல் இராசீவ்காந்தி பிரதமராக இருந்தபோது நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கை பிற தேசிய இனங்களின் தாய்மொழிகளைப் புறக்கணித்து இந்தி, ஆங்கில வழியில் கல்வி கற்பதை ஊக்குவித்தது; கல்வி வணிகமயம் ஆவதற்கு வித்தூன்றியது.

1999-2004இல் ஆட்சியிலிருந்த பா.ச.க. தலைமையிலான வாஜ்பேயி அரசு வேதக் கல்வியைப் பள்ளிப்பாடம் முதல் பல்கலைப்படிப்பு வரை அறிமுகப்படுத்தியது. பா.ச.க ஆட்சிக் காலத்தில்தான் 'கல்வி நிறுவனங்களைத் தனியார் நடத்துவது என்பது இந்திய அரசமைப்புச் சட்ட விதி 19(1)(ப)-இன் கீழ் தொழில் செய்யும் அடிப்படை உரிமை போன்றது; எனவே அரசுகள் இதில் தலையிட முடியாது' என்று ஒரு கேடான தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியது. அதுமுதல், தனியார் கல்வி நிறுவனங்கள் உழைக்கும் மக்களை ஒட்டச் சுரண்டி வருகின்றன.

**புதிய கல்விக் கொள்கை - 2016**

இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் 30-06-2016இல் வெளியிட்டுள்ள 'தேசியக் கல்விக் கொள்கை 2016 வரைவிற்கான சில உள்ளீடுகள்' எனும் அறிக்கை, மாநிலங்களின் தேசிய மொழிகள், உரிமைகள், ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களின் கல்வி உரிமைகள் ஆகியவற்றுக்குப் பல வகையிலும் தீங்கு விளைவிப்பதாகவே அமைந்திருக்கிறது.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மாநில மக்களின் தாய்மொழி வழியில் பயிலும் உரிமையைப் பறிக்கிறது.

ஊர்புறங்களிலும் நகரப் பகுதிகளிலும் வாழும் கீழ்ச்சாதி - ஏழை மாணவர்களிடையே அதிக அளவில் இடைநிற்றலை ஏற்படுத்தி, அவர்களை 5ஆம் வகுப்புக்கு மேல் படிக்க முடியாத அவலநிலைக்கு ஆளாக்க முற்படுவதுடன் அவர்களின் குலத்தொழிலுக்குத் தள்ளும் மறைமுகமான குலக்கல்வித் திட்டமாகும்.

இந்தியாவில் நிலவும் பன்முகத்தன்மையைக் குழிதோண்டிப் புதைக்க முயல்வதுடன், இந்துத்துவ நஞ்சை மாணவர் நெஞ்சில் விதைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் 'ஏ', 'பி' என இரண்டு வகையான தேர்வுகளை நடத்தும் வடிகட்டல் முறையின் மூலம், பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட - பழங்குடி வகுப்பு மாணவர்களின் உயர்கல்வி உரிமையை மறுக்கிறது.

தகுதி - திறமை எனும் மோசடியின்பேரால் பார்ப்பன - மேல்சாதியினரின் பிள்ளைகளே உயர்கல்வி பெறவும், உயர் அதிகாரப் பதவிகளைக் கைப்பற்றவும் வழிவகுக்கிறது.

கல்வி தொடர்பான முடிவுகளை எடுக்கும் முற்றுரிமை இந்திய நடுவண் அரசிடமே குவிக்கப்பட்டுள்ளதால், மாநில அரசுகளை எந்த உரிமைகளுமற்ற இந்திய அரசின் எடுபிடிகளாக ஆக்குகிறது.

இடஒதுக்கீடு குறித்த எந்த விளக்கமும் இந்த வரைவில் இல்லாமலிருப்பது, இடஒதுக்கீட்டை ஒழித்துக்கட்ட வேண்டும் என்கிற பா.ச.க.வின் கொள்கையை நிலைநாட்டுகிறது.

பன்னாட்டுப் பல்கலைக் கழகங்களும் கல்வி நிறுவனங்களும் இந்தியாவில் கல்வி - வணிகக் கொள்ளையடிக்க அனுமதிக்கிறது.

இந்தியாவிலுள்ள மொழித் தேசிய இனங்களின் உரிமைகளைப் பறிக்கின்ற, வெவ்வேறுபட்ட பண்பாடுகள், மொழிகள் ஆகியவற்றை அழிக்கின்ற, இந்தியா முழுவதிலுமுள்ள எல்லாக் கல்வி நிலையங்களிலும் சமற்கிருத மொழி, இந்தி மொழி, வேதக் கல்வி ஆகியவற்றைக் கட்டாயப் பாடங்களாக ஆக்கிட முயல்கின்ற தேசியக் கல்விக் கொள்கை - 2016ஐ எதிர்த்துப் போராடுவோம்.

**மருத்துவக் கல்விக்கான அனைத்திந்தியப் பொது நுழைவுத்தேர்வு (NEET)**

2010இல், காங்கிரசுத் தலைமையிலான இந்திய அரசு இந்தியா முழுவதும் மருத்துவப் படிப்பில் சேருவதற்கு அனைத்திந்தியப் பொது நுழைவுத்தேர்வு எழுதவேண்டும் என ஆணை பிறப்பித்தது. அதனைப் பல்வேறு மாநில அரசுகள் எதிர்த்தன; இந்திய உச்ச நீதிமன்றத்தில் பலர் வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கில், 3 நீதிபதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு, பொது நூழைவுத்தேர்வு வேண்டாம்; கூடாது என்று 2013 சூலையில் தீர்ப்பு அளித்தது.

2014இல், ஆட்சிப் பொறுப்பேற்ற பா.ச.க. அரசு மீண்டும் நுழைவுத் தேர்வு நடத்திட முடிவு செய்தது. 2013 சூலையில் வழங்கிய தீர்ப்பை 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு மறுஆய்வு செய்திடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தது. அந்த அமர்வு 28-04-2016இல் வழங்கிய தீர்ப்பில், மருத்துவப் படிப்பில் சேர விரும்புகிற எல்லா மாணவர்களும் பொது நுழைவுத் தேர்வு எழுதவேண்டும்; அதனடிப்படையில் மட்டுமே சேர்க்கை நடைபெற வேண்டும் என்று கூறி பாரதிய சனதா அரசின் முடிவுக்குப் பச்சைக்கொடி காட்டியது.

இந்த ஆண்டில் இரண்டு கட்டமாக நுழைவுத்தேர்வு நடைபெற்றிருந்தாலும் தமிழ்நாட்டுக்கு மட்டும் இந்த ஆண்டுச் சேர்க்கைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டில், 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் ஒற்றைச்சாளர முறையில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களும், அரசின் தொகுப்புக்கு அளிக்கப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரிகளின் இடங்களும் இடஒதுக்கீட்டின்படிப் பிரித்தளிக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

ஆனால், தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளின் நிருவாக ஒதுக்கீட்டு இடங்களும், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் உள்ள இடங்களும் அனைத்திந்தியப் பொது நுழைவுத்தேர்வின் தரவரிசைப்படி நிரப்பப்படவில்லை. இந்த இடங்கள் எல்லாம் அதிக தொகைக்கு ஏலம் கேட்ட மாணவர்களுக்கே அளிக்கப்பட்டன என்பது மாபெரும் வெட்கக்கேடு. இந்திய அரசும் நீதித் துறையும் ஆதிக்க வர்க்கமும் போட்ட தகுதி - திறமை எனும் கூப்பாடு காற்றோடு போயாச்சு!

இந்நிலையில், அடுத்த ஆண்டில் (2017-18) மருத்துவப் பொது நுழைவுத் தேர்வு நடந்தால் தமிழ்நாட்டின் நிலை என்ன?

**தமிழ்நாட்டு அரசின் தொகுப்பில் உள்ள மருத்துவ இடங்களில்,**

அனைத்திந்தியப் பொது நுழைவுத் தேர்வு எழுதிய தமிழ்நாட்டு மாணவர்கள் மட்டும் சேர்க்கப்படுவார்களா? அனைத்திந்தியப் பொது நுழைவுத் தேர்வில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள பிற மாநில - பிற மொழி பேசும் மாணவர்கள் சேர்ந்திட விரும்பினால் அதைத் தடுக்க முடியுமா?

பிற மாநிலங்களின் மாணவர்கள் தமிழ்நாட்டில் மருத்துவப்படிப்பில் சேரும் நிலையில் தமிழ்நாட்டு மாணவர்கள் தற்போது பெற்றுவரும் 69 இடஒதுக்கீடு என்னவாகும்?

பிற மாநில மாணவர்களின் மருத்துவப்படிப்புக்காகத் தமிழ்நாட்டு அரசு தமிழ் மக்களின் வரிப்பணத்தைப் பெருஞ்செலவு செய்து மருத்துவக் கல்லூரிகளை ஏன் நடத்தவேண்டும்?

தமிழ்நாட்டில் பயிலும் பிறமொழி மாணவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு மருத்துவம் செய்யாமல் அவர்களின் சொந்த மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கமுடியுமா?

மருத்துவத் துறையில் சமூக நீதிக்கு எதிரான - மேல்சாதி ஆதிக்கத்தினைத் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ளும் தீய உள்நோக்கத்துடன் பல்வேறு குளறுபடிகளைக்கொண்ட, மாநிலங்களின் உரிமையை மறுக்கின்ற - கீழ்ச்சாதி ஏழை எளிய ஊர்ப்புற மாணவர்களின் நலன்களுக்கு எதிரான மருத்துவப் படிப்புக்கான தேசியத் தகுதிகாண் நுழைவுத் தேர்வை முழுமூச்சில் எதிர்த்து வீழ்த்திடுவோம். கல்வித் துறை அதிகாரம் முற்றுரிமையும் அந்தந்த மாநில அரசின் அதிகாரப் பட்டியலுக்கு மாற்றக் கோரிப் போராடுவோம்.

**இந்தி மொழி ஆதிக்கம்**

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஆட்சி மொழி குறித்த 17ஆம் பகுதியில் "தேவநாகரி வடிவிலான இந்தி, இந்தியாவின் அலுவல் மொழியாக இலங்கும்" என்றும், 26-1-1950இலிருந்து "15 ஆண்டுகளுக்கு ஆங்கிலமும் அலுவல் மொழியாக இருக்கும்" என்றும் தெளிவாக எழுதப் பட்டுள்ளது. 1965 சனவரி 26 முதல் இந்தி மட்டுமே இந்தியாவின் அலுவல் மொழி ஆவதை எதிர்த்து, 1963இல் தமிழ்நாட்டில் மாணவர்கள் பேரெழுச்சியோடு போராடியதன் விளைவாக அப்போதையப் பிரதமர் நேரு, இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலம் இணை அலுவல் மொழியாக நீடிக்கும் என்று வாக்குறுதி அளித்தார்.

ஆனால், 1950க்குப் பிறகு இந்தியாவை ஆண்ட காங்கிரசும், பா.ச.க.வும் இந்தி மொழி இந்தியர் அனைவருக்குமான பொது மொழி - தேசிய மொழி என்பதுபோன்ற ஒரு மாயக் கருத்தை மக்களிடம் திணித்து வருகின்றன. தமிழ்நாடு உள்ளிட்ட இந்தி பேசாத மாநிலங்களின் மத்திய அரசு அலுவலகங்களில் இன்றளவும் இந்தி அல்லது ஆங்கிலம் மட்டுமே அலுவல் மொழியாக இருப்பது தழிழரையும் - தமிழையும், இந்தி பேசாத பிற தேசிய இன மக்களையும் - மொழிகளையும் இழிவுபடுத்துவது ஆகும்.

இதற்கு ஒரே தீர்வாக, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் "இந்தி, இந்தியாவில் அலுவல் மொழியாக இலங்கும்" என்னும் சொற்கோவை எந்தெந்த விதிகளில் இடம்பெற்றுள்ளதோ அந்தச் சொற்கோவைகளை "இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எட்டாம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள எல்லா மொழிகளும் இந்தியாவின் அலுவல் மொழிகளாகும்" என்று இடம்பெறும் தன்மையில் எல்லா விதிகளும் திருத்தப்பட வேண்டும் என இந்திய அரசைக் கோரி இந்தி பேசாத பிற தேசிய இன மொழி மக்களை இணைத்துப் போராடுவோம்.

**சமற்கிருதத் திணிப்பு**

இரண்டாயிரமாண்டுகளாக இந்து மதத்தின் கடவுளர் மொழியாக - தேவபாஷையாக -கோயில்களில் வழிபாட்டு மொழியாக - இந்துக்களின் வீடுகளில் பார்ப்பனர்கள் நடத்தும் சடங்குகளின் மொழியாக - வேத மொழியாக சமற்கிருதம் இருக்கிறது. இந்த இழிநிலையை எல்லா இந்துக்களும் உணர்ந்தோ உணராமலோ ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்நிலையில் இந்த ஆண்டு இந்திய அரசு வெளியிட்டுள்ள புதிய கல்விக் கொள்கை வரைவில் இந்திய மொழிகள் உருவாவதற்கு ஊற்றுக் கண்ணாக இருந்ததுடன் அவற்றின் வளர்ச்சிக்கும் அரிய பங்களிப்பு செய்து வரும் சமற்கிருதத்தின் தனிச் சிறப்பை உணரவும், இந்தியக் காலாச்சார ஒற்றுமைக்கு அது ஆற்றி வரும் அருமையை உணரவும் பள்ளிக்கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையில் சமற்கிருதம் கற்பிக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது ஆர்.எஸ்.எஸ்.-ன் ஒரே நாடு - ஒரே மொழி - ஒரே கலாச்சாரம் எனும் கொள்கையைத் திணிக்கும் செயலாகும். மேலும், பார்ப்பனர்கள் பிறவியால் உயர்ந்தோர் என்பதை நிலை நிறுத்தவும், தேசிய இனங்களின் மொழிவழிப்பட்ட உணர்வுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் மதச் சிறுபான்மையினரின் தனித்த கலாச்சாரத்தையும் ஒடுக்கி இந்துத்துவ மயமாக்கும் முயற்சியாகும்.

வழிபாட்டு மொழி, வாழ்வியல் சடங்கு மொழி என்கிற உச்சாணிக் கொம்பிலிருந்து சமற்கிருதத்தை வீழ்த்துவொம் !

**கல்வி காவிமயமாவதைத் தடுத்து நிறுத்துவோம் !**

**தாய்மொழி - தமிழ்வழிக் கல்வியை நிலைநாட்டுவோம் !**

**இந்தி ஆதிக்கத்தை - சமற்கிருதத் திணிப்பை வேரறுப்போம் !**

**மொழிவழிப்பட்ட தேசிய இன உரிமைகளை வென்றெடுப்போம் !**

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 600 053. கைபேசி : 94448 04980, 72994 41712

**2017, சனவரி 7, சனிக்கிழமை**
காலை 10.00 மணி
**கொடியேற்றல்**

காலை 10.00 முதல் 12.00 மணி வரை

# சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2017 வெளியீட்டு விழா

**வரவேற்புரை :** தோழர் **ந. மதனகவி** வாணியம்பாடி நகரச் செயலாளர், மா.பெ.பொ.க

## முன்னிலை

புலவர் **மு.சு. தங்கவேலன்**
நெறியாளர், தமிழ்ச் சிந்தனையாளர் மன்றம்

தோழர் **லோ.ர. குமார்**
மா.பெ.பொ.க., வேலூர்

வழக்குரைஞர் **உமர்**
வாணியம்பாடி

தோழர் **நீலகண்டன்**
வாணியம்பாடி

தோழர் **மு. சாமிநாதன்**
வேலூர் மாவட்டச் செயலாளர், பு.க.க.இ.ம.

தோழர் **சீனி. பழனி**
மா.பெ.பொ.க., வாணியம்பாடி

புலவர் **சகாதேவன்**
வாணியம்பாடி

தோழர் **ந. ஜெயச்சந்திரன்**
வாணியம்பாடி

## தலைமை

கவிஞர் **தமிழேந்தி**
மாநிலச் செயலாளர், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம்

## மலர் வெளியிட்டுச் சிறப்புரை

பேராசிரியர் **அ. மார்க்ஸ்**
மனித உரிமைகளுக்கான மக்கள் கழகம்

## மலர் பெறுவோர்

தோழர் **கு.ப. நாகரத்தினம்**
தமிழ் மன்றம், குன்னத்தூர்

தோழர் **அரங்க. சானகிராமன்**
வேளாண் அணிச் செயலாளர், மா.பெ.பொ.க

தோழர் **அ. கஜேந்திரன்**
பௌத்த சங்கம், வாணியம்பாடி

தோழர் **அ. பாவேந்தன்**
வணிகர், வாணியம்பாடி

தோழர் **மு. பிரதாபன்**
அம்பேத்கர் தொழிற்சங்க நடுவம், வாணியம்பாடி

தோழர் **க. புருஷோத்தமன்**
திராவிடர் விடுதலைக் கழகம், வாணியம்பாடி

தோழர் **கோ. அன்புச்சேரன்**
தட்டச்சுப் பயிலகம், வாணியம்பாடி

தோழர் **அ. குணசேகரன்**
உரிமையாளர், பத்மாவதி – அண்ணாமலை திருமண மண்டபம்

தோழர் **இரா. கல்யாணசுந்தரம்**
தொழிலாளரணித் துணைச்செயலாளர், மா.பெ.பொ.க

தோழர் **அ. நாசீர்கான்**
ம.தி.மு.க., வாணியம்பாடி

தோழர் **ந. வேலு**
வி.சி.க., வாணியம்பாடி

தோழர் **மு. சுப்பிரமணியம்**
தமிழ்ச் சிந்தனையாளர் மன்றம், வாணியம்பாடி

தோழர் **தேவகுமார்**
வழக்குரைஞர், வாணியம்பாடி

தோழர் **சண்முகம்**
வழக்குரைஞர், குரிசிலாப்பட்டு

## கருத்துரை

புலவர் **கி.த. பச்சையப்பன்**
தமிழ் உரிமைக் கூட்டமைப்பு

தோழர் **மோ.சி. சங்கர்**
மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டச் செயலாளர்

தோழர் **க. பன்னீர்செல்வம்**
புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றம், வேலூர்

மருத்துவர் **சு. ஞானசேகரன்**
வி.சி.க., வாணியம்பாடி

வரகூர் **மா. நாராயணசாமி**
மா.பெ.பொ.க. பெரம்பலூர் மாவட்டச் செயலாளர்

தோழர் **ஆ.கு. ஆறுமுகம்**
மா.பெ.பொ.க. விழுப்புரம் மாவட்டச் செயலாளர்

தோழர் **பொ. சுப்பிரமணியன்**
மா.பெ.பொ.க. திருவண்ணாமலை மாவட்டச்செயலாளர்

தோழர் **ந. கருணாகரன்**
புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றம், திருச்சி

தோழர் **சி. பெரியசாமி**
மா.பெ.பொ.க. துணைப் பொதுச்செயலாளர்

தோழர் **பா. மோகன்**
மா.பெ.பொ.க. கடலூர் மாவட்டச் செயலாளர்

தோழர் **முகமது நயீம்**
இந்திய யூனியன் முஸ்லீம் லீக், வாணியம்பாடி

தோழர் **கோ. கோதண்டராமன்**
மா.பெ.பொ.க. வேளாண் அணித் துணைச்செயலாளர்

புலவர் **இரா. கலியமூர்த்தி**
மா.பெ.பொ.க. அரியலூர் மாவட்டச் செயலாளர்

தோழர் **இரா. கலியபெருமாள்**
மா.பெ.பொ.க. திருச்சி மாவட்டச் செயலாளர்

தோழர் **முத்து. அன்பழகன்**
மா.பெ.பொ.க. நாகை மாவட்டச் செயலாளர்

தோழர் **செ. ஆனையப்பன்**
மா.பெ.பொ.க. சேலம் மாவட்டச் செயலாளர்

**நன்றியுரை :** தோழர் **ப. வடிவேலு** மேலாளர், "சிந்தனையாளன்"

**2017, சனவரி 7, சனிக் கிழமை**
பகல் 12.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை

இந்திய அரசின்

# புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு
# அனைத்திந்தியப் பொது நுழைவுத் தேர்வு எதிர்ப்பு
# இந்தி ஆதிக்கம் – சமற்கிருதத் திணிப்பு எதிர்ப்பு
# மாநாடு

**வரவேற்புரை :** தோழர் **சி. நடராாசன்** மா.பெ.பொ.க. காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்

**தலைமை**

தோழர் **வே. ஆனைமுத்து**
பொதுச் செயலாளர், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

**தொடக்கவுரை**

தோழர் **பொழிலன்**
பொதுச் செயலாளர், தமிழக மக்கள் முன்னணி

# புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு
## அனைத்திந்தியப் பொது நுழைவுத் தேர்வு எதிர்ப்பு
## இந்தி ஆதிக்கம் – சமற்கிருதத் திணிப்பு எதிர்ப்பு

# மாநாடு

**கருத்துரை**

தோழர் **சா. குப்பன்**
மா.பெ.பொ.க. தொழிலாளரணிச் செயலாளர்

தோழர் **வாலாசா வல்லவன்**
மா.பெ.பொ.க. சென்னை மாவட்டச் செயலாளர்

வழக்குரைஞர் **கோவி இராமலிங்கம்**
மா.பெ.பொ.க. மகளிரணிச் செயலாளர்

தோழர் **இரா. திருநாவுக்கரசு**
மா.பெ.பொ.க. புதுச்சேரி மாநிலச் செயலாளர்

தோழர் **ந. செவ்வேள்**
தமிழக மக்கள் முன்னணி, வாணியம்பாடி

தோழர் **காஞ்சி அமுதன்**
பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்கம், காஞ்சிபுரம்

முனைவர் **ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
மா.பெ.பொ.க. மாணவர்–இளைஞரணிச் செயலாளர்

தோழர் **தி. துரை சித்தார்த்தன்**
மாணவர்–இளைஞரணித் துணைச்செயலாளர்

தோழர் **ஏ.சி. வெங்கடேசன்**
பாலாறு பாதுகாப்பு இயக்கம், வாணியம்பாடி

தோழர் **இரா. முல்லை**
இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, வாணியம்பாடி

தோழர் **இரா. பகுத்தறிவாளன்**
மா.பெ.பொ.க. மாணவர்–இளைஞரணி, திருப்பத்தூர்

தோழர் **சோ. அண்ணாதுரை**
மா.பெ.பொ.க. மாணவர்–இளைஞரணி, நாகை மாவட்டம்

**சிறப்புரை**

தோழர்
**க. முகிலன்**
மா.பெ.பொ.க. தலைமைக்குழு உறுப்பினர்

தோழர்
**ஆளூர் ஷாநவாஸ்**
துணைப் பொதுச்செயலாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

நன்றியுரை : தோழர் **மீ. டில்லிபாபு** மா.பெ.பொ.க. வேலூர் நகரச் செயலாளர்

கல்வி
காவி மயமாவதைத்
தடுத்து நிறுத்துவோம் !

இந்தி ஆதிக்கத்தை
சமற்கிருதத் திணிப்பை
வேரறுப்போம் !

போராடிப் பெற்ற
இடஒதுக்கீட்டைப்
பேணிப் பாதுகாப்போம் !

தாய்மொழி – தமிழ்வழிக்
கல்வியை நிலைநாட்டுவோம் !

மொழிவழித் தேசிய இன
உரிமைகளை
வென்றெடுப்போம் !

ஒன்றுபடுவோம்
போராடுவோம்
மாற்றுவோம்

வாரீர் ! வாரீர் !

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை – 600 053. கைபேசி : 94448 04980, 72994 41712

# தில்லியில் மாசும் தூசும் - தீர்வுதான் என்ன?

- இராமியா

இந்தியத் தலைநகர் தில்லியில், காற்றில் மாசும் தூசும் கலந்து இருப்பதால், மக்கள் தெருவுக்கு வர முடியாமல் தவிக்கின்றனர். இது அவசர நிலைமையைப் போல இருக்கிறது என்று அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தைச் (Centre for Science and Environment) சேர்ந்த சந்திரபூஷண் என்பவர் 5.11.2016 அன்று கூறியிருக்கிறார்.

மாசும் தூசும் காற்றில் அளவுக்குமீறி இருப்பதால் மக்கள் வெளியே வரமுடியாத நிலையில், பள்ளிகளுக்கு மூன்று நாட்களுக்கு விடுமுறை அளிப்பதாக தில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால் 6.11.2016 அன்று அறிவித்தார்.

காற்றில் உள்ள மாசும் தூசும் குறைய வேண்டும் என்றால் 15 ஆண்டுகளுக்கும் பழைமையான டீசல் வாகனங்கள் தடைசெய்யப்பட வேண்டும் என ஆளுநர் நஜீப் ஜங்க் (Najeeb Jung) 7.11.2016 அன்று கருத்து தெரிவித்தார்.

இதைப் பற்றிய வழக்கு 8.11.2016 அன்றும் 9.11.2016 அன்றும் உச்சநீதிமன்றத்தில் வந்தது. அப்பொழுது "காற்றில் மாசையும் தூசையும் குறைப்பதற்கான செயல் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா? அல்லது மக்களின் வாழ்வு அழிவின் விளிம்பிற்குச் செல்லும் வரை காத்திருக்கப் போகிறார்களா?" என்று தலைமை நீதிபதி கோபாவேசமாகக் கேட்டார். மேலும் 11.11.2016 அன்று இவ்வழக்கு விசாரணையின் போது தில்லியில் பட்டாசுகளைத் தடைசெய்யும் யோசனையை ஆதரிப்பதாக உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தில்லியில் மாசும் தூசும் உள்ள நிலை படுமோசம் அடைந்த நிலையில் வெளிவந்த செய்திகள் இவை. ஆனால் நிலைமை பல ஆண்டுகளாகவே மோசமாகத்தான் உள்ளது. இதைப்பற்றி ஆய்வு செய்த தொண்டு நிறுவனம் ஒன்று, காற்று மாசின் காரணமாக, தில்லி மக்களின் மருத்துவச் செலவு ஓராண்டில் ரூ.2,450 கோடி அதிகரித்து இருப்பதாக 24.1.2011 அன்றே கூறியது. அப்பொழுதே அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் பெல்ஜியம் நாட்டில் உள்ள ஹாசெல்ட் (Hasselt) நகரில் செயல்படுத்தப்பட்ட ஒரு திட்டத்தைச் சுட்டிக்காட்டி ஒரு யோசனையை கூறியது.

ஹாசெல்ட் நகரில் 1996இல் வாகனப் புகை காரணமாகக் காற்று மாசடைந்த போது, அந்நகரில் வாழ விரும்பாமல் மக்கள் வேறு நகரங்களுக்கு இடம் பெயரத் தொடங்கினர். இதனால் வேலை செய்வதற்குத் தேவையான எண்ணிக்கையில் மக்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதைப்பற்றித் தீவிரமாக யோசித்த



*மூச்சுத் திணறடிக்கும் தில்லியின் வளி மாசு புகை மண்டலம்*

பெல்ஜிய அரசாங்கம் ஹாசெல்ட் நகரில் பேருந்து, தொடர்வண்டி முதலிய பொது போக்குவரத்து (Public Transportation) முறையை 1997ஆம் ஆண்டு முதல் முற்றிலும் இலவசமாக்கியது. அதுமட்டும் அல்ல; பேருந்துகளில் சென்றால், செல்ல வேண்டிய இடங்களுக்கு விரைவில் செல்ல முடியும்படியாகவும், மகிழுந்து போன்ற தனியார் வாகனங்களில் பிரயாணம் செய்தால் தாமதம் நேரும் படியாகவும் போக்குவரத்து விதிகளை (Traffic Rules) வகுத்தது. அத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. முதல் காற்றில் மாசின் அளவு குறையத் தொடங்கி நகரம் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டது.

இந்நிகழ்வை எடுத்துக்காட்டி, இதேபோல் செயல்பட்டால் காற்றில் மாசு குறைந்து இயல்பு நிலைக்குத் திரும்பலாம் என 24.1.2011 அன்று அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தினர் கூறினர். ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தது.

ஏன்? ஹாசெல்ட் நகரின் காற்று மாசுப் பிரச்சினையின் விளைவுக்கும், தில்லி நகரின் காற்று மாசுப் பிரச்சினையின் விளைவுக்கும் அடிப்படையில் வேறுபாடு உள்ளது. ஹாசெல்ட் நகர மக்கள் காற்று மாசைப் (அது நிச்சயமாக தில்லியின் காற்று மாசை விட மிகக் குறைவே) பொறுத்துக் கொள்ள முடியாது என்று எதிர்ப்பு தெரிவித்து, வேறு நகரங்களுக்குக் குடிபெயரத் தொடங்கிவிட்டார்கள். அதனால் அந்நகரில் உள்ள தொழில் நிறுவனங்களில் வேலை செய்வதற்கு மக்கள் கிடைப்பது அருகிவிட்டது. இந்நிலையில் அத்தொழில் நிறுவன முதலாளிகள் தங்கள் முதலீட்டை வேறு இடங்களுக்கு மாற்றுவது பற்றி ஆராய்ந்தனர். ஆனால் அவ்வாறு செய்வது எளிதாக இருக்கவில்லை. நிலம் மற்றும் கட்டடங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் பெருமளவில் இருந்தது. அதுமட்டும் அல்லாமல், முதலீட்டை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்ல முடியாத காரணங்கள் பல இருந்தன. உடனே தீவிரமாக யோசித்த

முதலாளித்துவ அறிஞர்கள் பொது போக்குவரத்து (Public Transportation System) முறையை இலவச மாக்கும் திட்டத்தையும், தனியார் வாகனங்களில் சென்றால் பிரயாண நேரம் அதிகமாகும் படியான போக்குவரத்து விதிகளையும் (Traffic Rules) உருவாக் கிக் கொடுத்தனர். அது வெற்றிகரமாகச் செயல்பட்டு, மக்கள் அந்நகரில் தொடர்ந்து வாழ ஊக்குவிக்கப்பட் டார்கள். முதலாளிகளின் முதலீடு முதலாளித்துவப் பொருளாதாரப் பாதையில் உராய்வின்றி நடைபோட முடிந்தது. இதுபோன்ற நிலைமை தில்லியில் இல்லை. தில்லிவாழ் மக்கள் தில்லியில் காற்று மாசடைந்து இருக்கிறது என்பதால், வேறு நகரங்களுக்குக் குடி பெயரப் போவது இல்லை. முதலாளிகளின் மூலதனப் பயணத்திற்கு ஒரு உராய்வும் ஏற்படப் போவதும் இல்லை. ஆகவே ஹாசெல்ட் நகரத் திட்டம் இங்கு பரிசீலனைக்கும் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஒருவேளை காற்றில் மாசும் தூசும் அதிகரித்து, மக்கள் வேலைக்குச் செல்ல முடியாத அளவிற்கு நோய்வாய்ப்பாட்டால், அதனால் மூலதனப் பயணத் திற்கு உராய்வு ஏற்பட்டால், அப்பொழுது இப்பிரச்சி னையைத் தீர்க்க வேண்டும் என்று அரசாங்கம் அக்கறை கொள்ளும். அந்த அளவிற்கு அழிவின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும் வரையிலும் இந்நாட்டு மக்கள் பொறுமையாக இருப்பதால், முதலாளிகளின் பாடு கொண்டாட்டமாகவே இருக்கிறது.

அப்படி அழிவின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட பின் எடுக்கப்படும் நடவடிக்கைகளினால், காற்றில் மாசும் தூசும் குறைந்துவிட்டால், உடனே உழைக்கும் மக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள்.

எப்படி என்று கேட்கிறீர்களா? பெல்ஜியம் நாட்டில் ஹாசெல்ட் நகரில் 1997ஆம் ஆண்டில் பொது போக்கு வரத்து முறையில் இலவசப் பயணமும், தனியார் வாகனப் பயணத்தினால் தாமதம் ஏற்படுத்தும் போக்கு வரத்து விதிகளும் செயல்படுத்தப்பட்டபின் சுற்றுச்சூழல் மேம்பாடு அடையத் தொடங்கியது. 16 ஆண்டுகளில் முழுவதுமாகச் சீரடைந்தது. உடனே முதலாளித்துவ அறிஞர்கள் இலவசப் பயணம் அரசாங்கத்திற்கு வீண் செலவு ஏற்படுத்துவதாகக் கூக்குரலிடத் தொடங்கி னார்கள். உழைக்கும் மக்களின் கருத்து என்றால் உதாசீனம் செய்துவிடலாம். முதலாளித்துவ அறிஞர் களின் கருத்தை ஒரு முதலாளித்துவ அரசினால் கண்டுகொள்ளாமல் இருக்க முடியுமா? 2014ஆம் ஆண்டில் இலவசப் பயணமுறை பெருமளவில் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது. இப்பொழுது 18 வயது வரை உள்ளவர்களுக்கு மட்டுமே இலவசப் பயணம் பொருந் தும் என்றும், மற்றவர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்ட இலவசப் பயணம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படு வதாகவும் பெல்ஜியம் அரசு அறிவித்துவிட்டது. (கூடிய



*தில்லியில் வளி மாசு அதிகமாவதற்குப் பெருங்காரணமாக இருப்பது தனியார் வாகனங்கள்*

விரைவில் 18 வயது வரை உள்ளவர்களின் இலவசப் பயணமும் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படலாம்).

முதலாளிகளின் மூலதனப் பயணம் உராய் வின்றித் தொடர வேண்டும் என்பதற்காக மட்டுமே செயல்படும் முதலாளித்துவ அரசுகள் இருக்கும் வரையில், வெகுமக்களை வேதனைக்கு உள்ளாக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது. உழைக்கும் மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைப்பது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால், அதன் உண்மை யான காரணம் மூலதனப் பயணத்திற்கு உராய்வு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தில்தான் இருக்கும்.

தில்லியின் மாசும் தூசும் பிரச்சினையும் இப் படியே. இப்பிரச்சினை மட்டும் அல்ல, எந்தப் பிரச்சினை என்றாலும், முதலாளித்துவ அரசின் அணுகுமுறை இப்படித்தான் இருக்கும்.

அப்படி என்றால் உழைக்கும் மக்களின் நலன் களை, மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு தீர்க்கப்பட வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்? மக்களே சிந்தியுங்கள்!

## மா.பெ.பொ.க. தோழர்களுக்கு அன்பார்ந்த வேண்டுகோள்

நம் கட்சியின் சார்பிலும், ஒடுக்கப்பட்டோர் பேரவை யின் சார்பிலும், புதுதில்லியில், 23.3.1979இல், "பெரியார் நூற்றாண்டு விழா - டாக்டர் லோகியா 70ஆம் பிறந்த நாள் விழா"வில் - **"சமூக நீதி" பற்றிய பெரியாரின் கட்டு ரைகளையும் சொற்பொழிவுகளையும் கொண்ட இந்தி நூலை வெளியிட்டோம்.**

என்னிடம் உள்ள அதன் படி சிதைந்து உள்ளது. அதன் முழுமையான படி உடனே தேவை.

அந்நூலின் படி உங்களிடம் இருந்தால், உடனே எனக்கு அம்பத்தூர் முகவரிக்கு விடுத்து வைக்க வேண்டுகிறேன். நன்றி.

**1.12.2016** **வே. ஆனைமுத்து**

# திப்புசுல்தானும் தீன்தயாளும் இந்துத்துவத்தின் இரட்டை நாக்கு

க. முகிலன்

தென்னகத்தில் சிறுபகுதி நீங்கலாக இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் ஆட்சி செய்த கடைசி முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் 1707இல் இறந்தார். அதன்பின் முகலாயப் பேரரசு நிலைகுலைந்தது. அவுரங்க சீப்புக்கு அடங்கிக்கிடந்த சிற்றரசர்கள் முகலாயப் பேரரசி லிருந்து துண்டித்துக் கொண்டு தனித்தனியாகச் சிற்றரசு களை உருவாக்கிக் கொண்டனர்.

அப்போது வங்காளத்தில் பெரும் பரப்பில் அமைந்த நவாப் அரசு வலிமையாக இருந்தது. வங்காள நவாப் சிராஜ் உத்தவுலா 1756இல் கிழக்கிந்திய கம்பெனியிடம் இருந்த கல்கத்தா நகரைக் கைப்பற்றினான். எனவே சென்னையிலிருந்த இராபர்ட் கிளைவ் படையுடன் வங்காளம் சென்றார். சிராஜ் உத்தவுலாவின் தளபதி மீர்ஜாபரை மன்னனாக்குவதாக இராபர்ட் கிளைவ் ஆசைகாட்டித் தன் பக்கம் ஈர்த்தார்.

1757இல் ஹூக்ளி ஆற்றின் கரையில் பிளாசி எனும் இடத்தில் வங்காள நவாபின் படைகளுக்கும் இராபர்ட் கிளைவின் படைகளுக்கும் போர் நடந்தது. தளபதி மீர்ஜாபர் மன்னரின் பக்கம் இருப்பதாக நடித்துக் கொண்டே குழிபறித்ததால் நவாப் தோற்றார். இந்தப் பிளாசிப் போர்தான் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் வலிமையாகத் தன் ஆட்சி அதிகாரத்தை நிறுவிட வழி கோலியது. அதனால்தான் 1910 வரையில் கல்கத்தா ஆங்கிலேயர் ஆட்சியின் தலைநகரமாக இருந்தது.

1757 பிளாசிப் போருக்குப் பின் இந்தியத் துணைக் கண்டத்திலேயே கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தவர்கள் மைசூரை ஆண்ட அய்தர் அலியும் அவருடைய மகன் திப்புசுல் தானும் மட்டுமே ஆவர். அய்தர் அலி சாதாரணப் போர் வீரனாக இருந்தவர். எழுதப் படிக்கத் தெரியாதவர். ஆனால் தன்னுடைய ஒப்பரிய போர்த் திறத்தால் படைத் தளபதி யானார். போர்களில் பல வெற்றிகளைக் குவித்து மைசூர் மன்னராட்சிப் பகுதியை விரிவுபடுத்தினார். இறுதியில் மைசூர் மன்னனானார்.

அய்தர் அலியின் மூத்த மகன் திப்புசுல்தான் (1750-1799) தன்னுடைய 17 அகவை முதல் ஆங்கிலே யரை இந்திய மண்ணிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்கிற வீறார்ந்த குறிக்கோளுடன் 32 ஆண்டுகள் ஆங்கிலேயருடன் தொடர்ந்து போரிட்டு மாண்ட மாவீரன்.

கர்நாடக மாநிலத்தில் சித்தராமய்யா தலைமையில் உள்ள காங்கிரசு ஆட்சி 2015ஆம் ஆண்டு நவம்பர் 10 அன்று திப்புசுல்தான் பிறந்த நாளை அரசு விழாவாக முதல்முறையாகக் கொண்டாடியது. ஆனால் பாரதிய



*இலண்டன் அருங்காட்சியக நூலகத்தில் உள்ள திப்பு சுல்தான் படம்*

சனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிஷத் உள்ளிட்ட இந்துத்துவ அமைப்புகள் கடந்த ஆண்டே திப்புசுல்தானுக்கு அரசு விழா நடத்தக் கூடாது என்று கடுமையாக எதிர்த்தன. திப்புசுல்தான் ஒரு கொடுங் கோலன்; குடகில் ஆயிரக்கணக்கான இந்துக்களைக் கொன்றவன்; எண்ணற்ற இந்துக் கோயில்களை இடித்தவன் என்று இந்துத்துவ அமைப்புகள் குற்றம் சாட்டின. திப்புசுல்தான் விழாவின் போது, 2015 நவம் பரில் குடகு பகுதியில் நடந்த எதிர்ப்புக் கலவரத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். திப்புசுல்தான் ஒரு இசுலாமியர்; அவருக்கு அரசு விழா எடுக்கக்கூடாது என்பதே இந்துத்துவவாதிகளின் உள்நோக்கமாகும்.

இந்த ஆண்டும் நவம்பர் 10 அன்று திப்புசுல்தான் பிறந்தநாள் விழாவை அரசு கொண்டாடும் என்று முதலமைச்சர் சித்தராமய்யா அறிவித்தார். குடகு மாவட் டத்தைச் சேர்ந்த மஞ்சுநாத் என்பவர் இந்த அறிவிப்பை எதிர்த்து பெங்களூரு உயர்நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கைத் தொடுத்தார். அதில், "கடந்த ஆண்டு திப்புசுல்தான் பிறந்தநாளைக் கொண்டாடியதைக் கண்டித்து நடந்த போராட்டத்தில் இரண்டு பேர் கொல் லப்பட்டனர். இந்த ஆண்டும் திப்புசுல்தான் பிறந்த நாளைக் கொண்டாடினால் கர்நாடகத்தில் சட்டம்

ஒழுங்கு பாதிக்கப்படும். எனவே திப்புசுல்தான் பிறந்த நாளை அரசு கொண்டாடுவதற்குத் தடைவிதிக்க வேண்டும்'' என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு 3.11.2016 அன்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில், ''மைசூரை ஆண்ட மன்னன் திப்புசுல்தான் ஆங்கிலேயருக்கு எதிராகத் தீரமுடன் போரிட்டவர். கர்நாடகாவின் வளர்ச்சிக்கும் கன்னட மொழியின் வளர்ச்சிக்கும் எண்ணற்ற பணி களை ஆற்றியுள்ளார். சுதந்தரப் போராட்ட வீரர் என்ப தால் அவரது பிறந்த நாளை அரசு கொண்டாடுகிறது'' என்று தெரிவிக்கப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி எஸ்.கே. முகர்ஜி, ''திப்புசுல்தான் மைசூரை ஆண்ட மன்னன் மட்டுமே. சுதந்தரப் போராட்ட வீரர் அல்ல. எனவே அவரது பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாட ஆர்வம் காட்டுவது ஏன்? இதுதொடர்பாக மனுதாரர் கர்நாடக அரசின் தலைமைச் செயலாளரை அணுகி எதிர்ப்பு தெரிவித்து விண்ணப்பம் அளிக்கலாம்'' என்று கூறி வழக்கை முடித்து வைத்தார்.

தலைமை நீதிபதி வங்காளத்துக்காரர். கன்னட நாட்டின் திப்புசுல்தான் மைசூர் மன்னர் மட்டுமே; சுதந்தரப் போராட்ட வீரர் அல்லர் என்று எப்படி முடிவு எடுத்தார் என்று தெரியவில்லை. திப்புவின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் சாதாரண மனிதர் எவரும் திப்பு சுதந்தரப் போராட்ட வீரர் என்ற முடிவுக்கு வருவர். நீதிபதிகள் என்பவர்கள் சட்டத்தில் எழுதப்பட்டிருப்ப தற்கு அப்பால் உள்ள எதைப் பற்றியும் தீர்ப்பு கூறும் அதிகாரம் தமக்கு இருப்பதாக ஒருவகையான அதிகார போதையில் இருக்கிறார்கள். தமக்குத் தெரியாதது பற்றித் 'தெரியாது' என்று உண்மையைச் சொல்லும் நேர்மையும் நாணயமும் அவர்களிடம் இருப்பதில்லை. ''நான் கண்டறிந்த இந்தியா'' என்ற நூலில் நேரு, ''அய்தர் அலியும் திப்புசுல்தானும் கிழக்கிந்திய கம்பெனி யின் பேரெதிரிகளாய் நின்றனர். படுதோல்விகளைப் பிரிட்டிஷாருக்குப் பரிசளித்து, ஆங்கிலேயரின் ஆளு மைக் கனவுகளைத் தகர்த்து வந்தனர்'' என்று குறிப் பிட்டிருப்பதைத் தலைமை நீதிபதி எஸ்.கே. முகர்ஜி படிக்கவில்லையா? அல்லது அவர் இந்துத்துவச் சிந்த னைக்கு ஆட்பட்டு இவ்வாறு கூறினாரா?

பெங்களூரு உயர்நீதிமன்றம் இவ்வாறு கருத் துரைத்தது பற்றிக் கவலைப்படாமல் முதலமைச்சர் சித்தராமய்யா அரசு திப்புவின் பிறந்தநாளைக் கொண் டாடியது. கர்நாடக மாநில பா.ச.க. தலைவர் எடி யூரப்பா தலைமையில் இதைக் கண்டித்துச் சட்டமன் றத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றவர்கள் கைது செய்யப்பட்டனர். அரசு, திப்புவுக்குப் பிறந்த நாள் விழா எடுப்பதைக் கண்டித்து குடகு, மைசூர், மங்களூர் முதலான பல இடங்களில் இந்துத்துவவாதிகள் ஆர்ப் பாட்டம் நடத்திய போது கைது செய்யப்பட்டனர். 2012 ஆம் ஆண்டு இதே எடியூரப்பா பா.ச.க.விலிருந்து விலகி தனிக்கட்சி தொடங்கிய போது திப்பு அணிந் திருந்தது போன்ற தலைப்பாகையை அணிந்து கொண்டு கையில் வாளுடன் திப்புசுல்தானைப் புகழ்ந்தார். மீண்டும் பா.ச.க.வில் சேர்ந்ததும் எதிர்க்கிறார்.

எந்தவொரு வரலாற்று நாயகரைப் பற்றியோ, வரலாற்று நிகழ்ச்சியைப் பற்றியோ அச்சமயத்தில் நிலவிய அரசியல், சமூக, பொருளியல், பண்பாட்டுப் பின்னணியில் வைத்து ஆராய வேண்டும். இத்தன் மையில் திப்புசுல்தானின் வரலாற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அய்தர் அலி எழுதப் படிக்கத் தெரியாதவர். மன்னர் என்ற நிலையில் கல்லாமையின் இன்னல்களை உணர்ந்தார். எனவே தன் மகன் திப்புவுக்குத் தகுதி சான்ற ஆசிரியர்களைக் கொண்டு கல்வி கற்பித்தார். திப்புவுக்குப் பாரசீகம், கன்னடம், உருது, அரபு, பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பேசவும் எழுதவும் தெரியும். குர்-ஆன், இசுலாமியச் சட்டங்கள், குதிரை ஏற்றம், மலை ஏற்றம், போர் பயிற்சிகள் ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்பட்டார். மைசூர் மன்ன ராட்சிப் பகுதியில் பாரசீகம், கன்னடம், மாராத்தி ஆட்சி மொழிகளாக இருந்தன.

திப்புசுல்தான் 5 அடி 8 அங்குலம் உயரமும் வலி மையான உடல் அமைப்பும் கொண்டவர். 1766இல், முதல் மைசூர் போரில் தன் 15ஆம் அகவையில் தன் தந்தையுடன் போரில் ஈடுபட்டார். 16ஆவது அகவை யில் கர்நாடகப் போரில் குதிரைப் படைத் தளபதியாகத் தன் போர்த்திறனைக் காட்டினார்.

1767இல் தன் 17ஆம் அகவையில் தளபதியாகத் தனியாகப் படை நடத்திச் சென்று ஜோசப் ஸ்மித் தலைமையிலான ஆங்கிலேயர் படையை வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் எதிர்த்துப் போரிட்டு வென்றார். திப்பு தனித்துப்பெற்ற வெற்றி இது. 1780 செப்டம்பரில் திப்பு 10,000 படைகளுடன் கர்னல் பெய்லியின் படைகளைத் தோற்கடித்தார். 1782இல் தஞ்சாவூர் அருகில் அன்னக்குடி என்ற இடத்தில் பிரெய்த் வெயிட் என்பவர் தலைமையிலான ஆங்கிலேயப் படைகளை வீழ்த்தினார். 1781இல் ஆங்கிலேயரிட மிருந்து சித்தூரைக் கைப்பற்றினார். மேலும் மலபார் மங்களூர் பகுதிகளைக் கைப்பற்றினார்.

இரண்டாம் மைசூர் போர் அய்தர் அலியின் தலை மையில் நடந்து கொண்டிருந்தபோது புற்றுநோய் காரணமாக அய்தர் அலி 1782இல் இறந்தார். திப்பு சுல்தான் முறைப்படி மைசூரின் மன்னரானார். இரண்டாம் மைசூர் போர் இன்றைய தமிழகத்திலும் கர்நாடகத் திலும் சில ஆண்டுகள் பல இடங்களில் நடந்தது. திப்பு குதிரையில் மிக வேகமாகப் பாய்ந்து செல்பவர். ஆங்கிலேயருடன் ஒரே சமயத்தில் பல இடங்களில் போர் நடந்ததால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு போர்

முனையில் இருப்பார். அதனால்தான் வரலாற்றாய் வாளர் துலரி குர்ஷி, திப்புசுல்தான் ஒரே சமயத்தில் பல போர் முனைகளில் போரிடுவது போல் எதிரிகள் அஞ்சும் அளவுக்கு வேகமாக இடம் மாறிக்கொண்டே இருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் மைசூர் போரில் பல கள முனைகளி லும் திப்புவின் படைகள் ஆங்கிலேயப் படைகள் மீது பெரும் சேதத்தை ஏற்படுத்தின. அய்தர் அலி காலம் முதலே படைகள் நவீனப்படுத்தப்பட்டன. பிரெஞ்சு நாட்டின் இராணுவ வல்லுநர்கள் அய்தர் அலி - திப்பு சுல்தான் படைகளுக்குப் பயிற்சி அளித்தனர். திப்பு நவீன துப்பாக்கிகளை உருவாக்கினார். 1784இல் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி போர் உடன்படிக்கை செய்துகொள்ள முன்வந்தது. திப்பு விதித்த நிபந்தனை களின் அடிப்படையில் இந்த உடன்படிக்கை ஆங்கிலே யரால் ஏற்கப்பட்டது. மங்களூரில் இந்த உடன்படிக்கை கையெழுத்தானது. ஒரு இந்திய மன்னர் தான் விதித்த நிபந்தனைகளை ஆங்கிலேயர் ஏற்குமாறு செய்தது இதுவே முதன்முறையாகும்.

ஆங்கிலேயரைத் தென்னகத்திலிருந்து விரட்டி யடிப்பதை நோக்கமாகக் கொண்டு, தன் அண்டை அரசுப் பகுதிகளாக இருந்த அய்தராபாத் நிஜாம், பூனாவைத் தலைநகரமாகக் கொண்ட மராத்தாவின் பேஷ்வா மன்னருடன் திப்புசுல்தான் சமாதான உடன் பாடு செய்து கொண்டார். 1787இல் ஆங்கிலேய ஆட்சியை ஒழித்திட ஆப்கானிஸ்தான் மன்னருக்கும் துருக்கியின் ஒத்தாமன் பேரரசுக்கும் பிரான்சு நாட்டு மன்னனுக் கும் உதவி கேட்டுத் திப்புசுல்தான் மடல் எழுதினார்.

1789இல் பிரான்சில் மாபெரும் புரட்சி ஏற்பட்ட தால் உதவி கிடைக்கவில்லை. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் தளபதியாக நெப்போலியன் ஆட்சி அதிகாரம் பெற்றிருந்தபோது திப்புசுல்தானுக்குப் படைகளை அனுப்புவதாக மடல் எழுதினார். 1798இல் நெப்போலி யன் திப்புவுக்காக 15,000 படைகளை அனுப்பினார். அப்படைகள் சூயஸ் கால்வாய் வழியாக மங்களூர் துறைமுகத்திற்கு வர இருந்தன. ஆனால் ஆங்கிலே யர்கள் சூயஸ் கால்வாயில் நெப்போலியன் அனுப்பிய படைகளைத் தோற்கடித்துத் தடுத்துவிட்டனர். ஆயினும் நெப்போலியன், திப்புசுல்தான் கிழக்கிந்திய கம்பெனி யின் படைகளுக்கு எதிராகத் தீரமுடன் போரிட்டு வரு வதைப் பாராட்டி 1798 பிப்பிரவரியில் திப்புவுக்கு ஒரு மடல் எழுதினார். ஆங்கிலேய ஒற்றர்கள் கைக்கு அம்மடல் கிடைத்தால் திப்புசுல்தானுக்கு அம்மடல் கிடைக்கவில்லை.

ஆங்கிலேயர்கள் திப்புவை எப்படியேனும் ஒழித்திட வேண்டுமென்று பெரும் படையுடன் 1792இல் தலை நகர் ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டனர். இரண்டு கிழமைகள் நடந்த இந்த முற்றுகையைத் திப்புசுல் தானால் தகர்க்க முடியவில்லை. எனவே ஆங்கிலே யருடன் உடன்படிக்கை செய்துகொண்டார். இதன்படி மலபார், மங்களூர் பகுதிகளை இழக்க நேரிட்டது. தன் ஆட்சிப் பகுதியில் பாதியை இழக்க நேரிட்டதுடன், ரூ.3.30 கோடி பணத்தை அபராதமாகத் தரவும் ஒப்புக் கொண் டார். அப்பணத்தைத்தரும் வரையில் திப்புவின் இரண்டு மகன்களை ஆங்கிலேயர் பிணைக் கைதிகளாகப் பிடித் துச் சென்றனர். பணத்தை இரண்டு தவணைகளில் தந்து திப்பு தன் பிள்ளைகளை மீட்டுவந்தார். திப்பு வின் இறப்புக்குப்பின் திப்புவின் இந்த இரண்டு பிள்ளை கள் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். 1806இல் வேலூர் புரட்சியில் கோட்டைக்குள் பங்கேற்ற இவர்கள் ஆங்கிலேயரின் யூனியன் ஜாக் கொடியை இறக்கி, புலிக்கொடியை ஏற்றினர் என்பது அறிய வேண்டிய வரலாற்றுச் செய்தியாகும்.

இறுதியாக நான்காம் மைசூர் போர் 1799இல் நடைபெற்றது. ஆங்கிலேயர்கள் அய்தராபாத் நிஜாம், மாராத்தியரின் படைகளையும் உதவிக்குப் பெற்று 50,000 படையுடன் ஸ்ரீரங்கப்பட்டிணத்தைத் தாக்கினர். திப்புசுல்தான் 30,000 படைகளுடன் போரிட்டார். கோட்டையின் சுவர்களைத் தகர்த்து ஆங்கிலேயப் படைகள் நுழையத் தொடங்கின. அச்சமயம் பிரான்சு நாட்டைச் சேர்ந்த திப்புவின் இராணுவ ஆலோசகர் திப்புவிடம் “இரகசிய வழியில் தப்பிச் செல்லுங்கள்; பிறகு ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிடலாம்” என்று ஆலோசனைக் கூறினார். அதற்கு திப்புசுல்தான், “ஆயிரம் ஆண்டுகள் ஒரு ஆட்டைப் போல் வாழ்வதை விட புலியைப் போல் ஒருநாள் வாழ்வதே மேல்” என்று கூறி தப்பிச்செல்ல மறுத்துவிட்டார். போர்க்களத் தில் 1799 மே 4ஆம் நாள் வீரச்சாவு எய்தினார்.

ஆங்கிலேயர் ஆட்சியை இந்திய மண்ணிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்று முப்பது ஆண்டுகளுக்கு மேல் சூறாவளியாய்ப் போர்க்களங்களிலேயே தன் வாழ்வையே ஒப்படைத்துக் கொண்ட ஒப்பரிய மாவீரன் திப்புசுல்தான் சுதந்தரப் போராளி என்பது இமயம் போன்ற வரலாற்று உண்மையாகும்.

இந்துத்துவ - சங் பரிவாரங்கள் திப்புசுல்தான் இசுலாமியர் என்ற ஒரே காரணத்திற்காகவே களங்கம் கற்பிக்க முயல்கின்றன. திப்புசுல்தான் சுதந்தரப் போராளி மட்டுமின்றி எண்ணற்ற ஒப்பரிய பணிகளைச் செய் துள்ளார். திப்புவைப் பற்றிக் காந்தியார், “நல்லதொரு முசுலீமான அவர் மதுவிலும் மங்கையரிலும் மூழ்கிப் போகாத நல்ல மன்னராக வாழ்ந்தார். வருமான இழப்புகளைப் பற்றிக் கவலைப்படாமல், மதுவிலக்கை முழுமையாக நடைமுறைப்படுத்திய உயர்ந்த மன்னர்” என்று குறிப்பிட்டுள்ளார்.

காந்தியார் குறிப்பிடுவது போல திப்புசுல்தான் இஸ்லாம் மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் அதேசமயம் மற்ற மதங்கள்பால் சகிப்புத்தன்மை கொண்டவராக மட்டுமின்றி, அவைகளுக்குப் பேருதவி கள் செய்தார் என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் இருக்

கின்றன. திப்புசுல்தான் காலத்தில் தலைநகர் ஸ்ரீரங்கப் பட்டிணத்தில் மசூதியும் அரங்கநாதர் கோயிலும் அருகருகில் இருந்தன. கோயில்கள், மடங்கள் முதலான சமய நிறுவனங்களுக்குத் திப்புவின் ஆட்சியில் ஓராண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 2,33,959 வராகன்கள். இதில் 2,13,959 வராகன்கள் இந்து கோயில்களுக்கும் மடங்களுக்கும் வழங்கப்பட்டன. இச்சான்று ஒன்றே போதும் இந்து மதத்தையும் திப்பு எந்த அளவுக்கு மதித்துப் புரந்தார் என்பதை அறிந்துகொள்ள!

மூன்றாம் மைசூர் போரின் போது பரசுராமபாகு தலைமையில் படையெடுத்து வந்த இந்து வீரர்களைக் கொண்ட மராட்டியப் படை ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு அருகில் அமைந்துள்ள ஆதிசங்கரர் நிறுவிய மடங்களில் ஒன்றான சிருங்கேரி மடத்தைச் சூறையாடி 17 இலட்சம் வராகன்கள் பெறுமானமுள்ள செல்வத்தைக் களவாடிச் சென்றது. கோரி முகம்மதும் கஜனி முகம்மதும் இந்தியாவில் கோயில்களில் கொள்ளையடித்தது பற்றிக் கூச்சல் போடும் சங் பரிவாரங்கள், பூனாவின் சித்பவன பார்ப்பன ஆட்சியின் படைகள் சிருங்கேரி மடத்தைக் கொள்ளையடித்ததற்கு என்ன பதில் சொல்வார்கள்?

மராத்தியரின் தாக்குதலின் போது சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரியாக இருந்த சச்சிதானந்த பாரதி தனது சீடர்களுடன் கார்கிலாவிற்குத் தப்பிச் சென்றார். மடத்தின் மூலச்சிலையான தங்கத்தால் செய்யப்பட்ட சாரதா தேவி சிலையையும் இந்து மராத்தியர் களவாடிச் சென்றனர். கார்கிலாவிலிருந்து தமக்கு உதவும்படி திப்புவுக்கு மடல் கொடுத்து அனுப்பினார் சிருங்கேரி சங்கராச்சாரி (சிருங்கேரி மட கடித எண்கள் 54,55 New History of Marathas by Sardesi G.S. Volume III. p.180).

சங்கராச்சாரியாரின் மடலுக்கு எழுதிய பதில் கடிதத்தில் திப்புசுல்தான், ''புனித இடங்களை அழிப்ப வர்கள் தங்களது தீயச் செயல்களுக்கான பலனை அனுபவிப்பார்கள். குருவுக்குத் தீமை செய்பவர்களுக்கு அழிவே உண்டாகும். சாரதா பீடம் மீண்டும் அமைய 200 ரஹாடி ரொக்கமாகவும், 200 ரஹாடி பொருள்களாகவும், 200 ரஹாடி தானியமாகவும் வழங்கியுள்ளேன். மேலும் நிதி தேவையெனில் கொடுக்கும்படி கிராம நிருவாக அலுவலருக்கு ஆணையிட்டுள்ளேன்'' என்று எழுதி உள்ளார் (திப்புவின் கடித எண்.47). இந்துக்களின் புனித இடம் தாக்கப்பட்டதை இசுலாமிய திப்பு கண்டித்ததுடன், அதைப் புதுப்பித்திட உதவி செய்தார். ஆனால் சங்பரிவாரங்களோ அயோத்தியில் பாபர் மசூதியை இடித்ததுடன், முசுலீம்கள் புனிதமாகக் கருதும் இடத்தில் இந்துக் கடவுளான இராமனுக்குக் கோயில் கட்ட வேண்டும் என்று கொக்கரித்து வருகின்றன. இத்தகைய உயர்ந்த உள்ளம் கொண்டிருந்த திப்புவை இந்துக்களின் எதிரியாகச் சித்தரிக்க முயல்வது எத்தகைய பித்தலாட்டம்!

திப்பு 1790 முதல் 1799 இல் இறக்கும்வரை சிருங்கேரி சங்கர மடத்திற்கு 21 மடல்கள் எழுதியிருந்தார். அம்மடல்கள் அனைத்தும் கன்னட மொழியில் எழுதப்பட்டிருந்தன. சங்கர மடத்திலிருந்து திப்புவுக்கு எழுதப்பட்ட மடல்கள் சமற்கிருதத்தில் இருந்தன. தன் நாட்டில் இருந்த இந்துமதத் தலைவருடன் மிகுந்த மதிப்புடனும் பணிவுடனும் உறவு கொண்டிருந்தார் திப்பு சுல்தான்,

திப்புவின் ஆட்சியில் முதன்மையான துறைகளின் அமைச்சர்களாகப் பார்ப்பனர்கள் இருந்தனர். திப்புவின் ஆட்சியில் நிர்வாகத்தில் கிட்டத்தட்ட 50,000 பார்ப்பனர்கள் வேலைகளில் இருந்தனர். திப்புவின் ஆட்சியில் பத்து நாள்கள் நடைபெறும் தசரா விழா எப்போதும் போல் சிறப்பாக நடந்தது. தசரா விழாவில் உடையார் அரச குடும்பத்தினரே தலைமை தாங்கினர்.

திப்புசுல்தானின் மிக நெருங்கிய உதவியாளராக இருந்த பூர்ணய்யா என்பவர் பார்ப்பனர். சிலர் திப்புவிடம், பூர்ணய்யா உங்களைக் காட்டிக்கொடுத்துவிடக் கூடும் என்று கூறினர். அதற்குத் திப்பு, ''யாரோ சிலரின் தவறுக்காக ஒட்டுமொத்த சமுதாயத்தையே நிந்திப்பது கூடாது'' என்று குர்-ஆனில் கூறப்பட்டுள்ளதை மேற்கோள்காட்டி அவர்களைக் கடிந்து கொண்டார். ஆனால் இன்று இசுலாமியர்களில் சிலர் தீவிரவாதிகளாக இருப்பதைக்காட்டி இந்தியாவில் உள்ள 15 கோடி இசுலாமியர்களையும் தீவிரவாதிகளாகவும், தேசத்துரோகிகளாகவும் காட்ட முயலும் சங்பரிவாரங்களின் கொடுமதியுடன் திப்புசுல்தானின் பெருந்தன்மையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது.

திப்புசுல்தான் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போர்களிலேயே தன் வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்த போதிலும் தன் ஆட்சிப் பகுதியின் வளர்ச்சிக்கும் மக்களின் நலனுக்குமான பல திட்டங்களைச் செயல்படுத்தினார். பெங்களூரில் அய்தர் அலி தொடங்கிய லால்பாக் பூங்கா பணிகள் திப்புசுல்தான் காலத்தில் நிறைவடைந்தன. நீண்ட சாலைகள், பொது கட்டடங்கள், துறைமுகங்களை திப்புசுல்தான் உருவாக்கினார். அருகமை பள்ளி முறையை இந்தியாவிலேயே முதன்முதலில் உருவாக்கியவர் திப்புசுல்தான். ஆறு மைல் தொலைவிற்கு ஒரு பள்ளி அமைக்கப்பட வேண்டும் என்றார். திப்புவின் காலத்தில் எண்ணற்ற பள்ளிகள் தொடங்கப்பட்டன. நிதி நிர்வாகத்தை நவீனப்படுத்தித் திறம்பட மேம்படுத்தினார். இந்தியாவிலேயே முதலாவது கூட்டுறவு அமைப்பை உருவாக்கினார். கூட்டுறவு பண்டகச் சாலைகள் மூலம் மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இன்று மைசூர் பட்டுச்சேலை புகழ்பெற்று விளங்குவதற்கு அன்று அதன் வளர்ச்சிக்கு வித்திட்டார் திப்புசுல்தான்.

இந்தியாவில் எந்வொரு சிற்றரசரும் மேற்கொள்ளாத வகையில் படைப் பிரிவை நவீனப்படுத்தினார். இராணுவத்தில் உலகிலேயே ஏவுகணையை முதன்முதலாக

உருவாக்கிப் பயன்படுத்தியவர் என்கிற பெருமைக்கு உரியவர் திப்புசுல்தான். இந்த ஏவுகணைகள் இரண்டு மைல்கள் தொலைவு சென்று தாக்கும் திறன் கொண் டவை. திப்புசுல்தான் பயன்படுத்திய ஏவுகணைகளில் இரண்டு இலண்டன் அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளன. திப்புதான் ஏவுகணையின் தந்தை என் பதை அறிவிக்கும் தன்மையில் அமெரிக்காவில் விண் வெளி ஆராய்ச்சி நிலையத்தின் (நாசா) முகப்பில் திப்பு சுல்தான் போரில் ஏவுகணையை எறிவது போன்ற பெரிய ஓவியம் வைக்கப்பட்டுள்ளது.

திப்புசுல்தான் சிறந்த படிப்பாளியாகவும் இருந்தார். அரண்மனையில் அவருடைய பயன்பாட்டுக்காக வைத்திருந்த நூலகத்தில் 2000 நூல்கள் இருந்தன. கணிதம், வானவியல், சட்டம், தத்துவம் முதலான பலதுறை சார்ந்த நூல்கள் இதில் இடம்பெற்றிருந்தன. திப்பு இறந்த பின் இந்த நூல்கள் இலண்டனில் ஆக்ஸ் ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்கும், கல்கத்தாவில் இருந்த வில்லியம் கோட்டை கல்லூரிக் கும், இராயல் ஆசிய கழகத்துக்கும் அனுப்பப்பட்டன.

ஆங்கிலேயருக்கு எதிரான முதல் சுதந்தரப் போராளியாகவும், மக்கள் நலன் நாடிய நல்ல மன்ன ராகவும், சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கிய திப்பு சுல்தானின் பிறந்த நாளைக் கொண்டாடக் கூடாது என்று இந்துத்துவக் கும்பல் எதிர்க்கிறது. அதேசமயம், சுதந்தரப் போராட்டத்திலோ, உழைக்கும் மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்களிலோ பங்கேற்காத தீன்தயாள் உபாத்தியாயாவுக்கு மோடி தலைமை யிலான பா.ச.க. ஆட்சி ஓராண்டு காலத்துக்கு அவரு டைய நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

தீன்தயாள் தன் வாழ்நாள் முழுவதும் செய்த ஒரே பணி இசுலாமியருக்கு எதிராக நஞ்சைக் கக்கி வந்தது தான். தீன்தயாள் என்ற பெயருடன் ஒட்டிக் கொண்டுள்ள 'உபாத்தியாயா' என்பது இந்துத்துவ நச்சுக் கருத்து களைக் கற்பித்து வந்த ஆசான் என்பதைக் குறிப்ப தாகும். இந்துத்துவ தத்துவத்தின் தத்துவத் தந்தைய ராக வி.டி. சாவர்கரும், கோல்வால்கரும் கருதப்படு கின்றனர். அவ்விருவருக்கு அடுத்த நிலையில் தீன் தயாள் போற்றப்படுகிறார். காங்கிரசுக் கட்சிக்கு காந்தி எப்படியோ, அதுபோல் பா.ச.க.வுக்கு தீன்தயாள் உபாத்தி யாயா. எனவே தீன்தயாள் நூற்றாண்டை மோடி அரசு கொண்டாடுவதில் வியப்பில்லை.

திப்புசுல்தான் மைசூரை ஆண்ட மன்னன் என்ற அளவில் மட்டுமே பெங்களூரு உயர்நீதிமன்றம் ஏற் கிறது. சங்பரிவாரங்களோ இந்துக்களைக் கொன்ற திப்பு வுக்கு அரசு விழா எடுக்கக்கூடாது என்று எதிர்க்கின் றன. தீன்தயாள் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்; தன்னு டைய அரசியல் அமைப்பாக 1951இல் ஜனசங்கம் என்கிற அரசியல் கட்சியை உருவாக்கிட ஆர்.எஸ்.எஸ். தெரிவு செய்த முதன்மையான தலைவர்களில் தீன்தயாளும் ஒருவர். இந்த இரு அமைப்புகளிலும் உறுப்பினராக இருந்தவர் என்பதற்குமேல் எந்தத் தகுதியும் இல்லாத தீன்தயாளுக்கு நடுவண் அரசு நூற்றாண்டு விழா நடத்துவதைக் கடுமையாக எதிர்க்க வேண்டும். மோடி அரசு தீன்தயாளுக்கு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதன் நோக்கம் தீன்தயாளின் இந்துத்துவ நச்சுக் கருத்துகளை பரப்புவதற்கான சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வதே ஆகும்.

25.9.2016 அன்று கேரள மாநிலத்தில் கோழிக் கோட்டில் நடந்த பா.ச.க.வின் தேசியக் குழுக் கூட்டத் தில் தீன்தயாளுக்கு நூற்றாண்டு விழா நடத்தப் போவ தாக அறிவித்தார். அப்போது பேசிய மோடி, "தீன்தயாள் உபாத்தியாயா அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பே, முசுலீம்களை நயத்தலோ அல்லது ஒதுக்கி வைத்தலோ கூடாது; அவர்களைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்றார்" என்று மோடி கூறினார். அதே கூட்டத்தில் உரையாற்றிய பா.ச.க.வின் ராக்கேஷ் சின்ஹா தீன் தயாள் கூறிய தூய்மைப்படுத்தல் என்பதற்கான பொருள் இசுலாமிய மதம் இந்தியாவில் பரவுவதற்குமுன் இந்தி யாவில் நிலவிய கலாச்சார - அறிவுநெறி மரபுகளை முசுலீம்கள் ஏற்றுப் பின்பற்ற வேண்டும் என்பதாகும் என்று விளக்கமளித்தார்.

தீன்தயாள் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட மோடி தலைமையில் 149 பேர் கொண்ட குழு அமைக் கப்பட்டுள்ளது. இந்த 149 பேர்களில் 23 பேர்களைக் கொண்ட செயற்குழு உள்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

ஷியாமா பிரசாத் முகர்ஜி தலைமையில் ஜனசங்கம் 1951இல் அமைக்கப்பட்டது. அதுமுதல் ஜனசங்கத் திற்குத் தத்துவ விளக்குநராக தீன்தயாள் விளங்கி வந்தார். இவர் முன்மொழிந்த தத்துவம் 'ஒருங்கி ணைந்த மனிதநேயம்' (Integral Humanism) என்ப தாகும். இது மனித சமத்துவத்தைப் போற்றும் கோட்பாடு என்கிற மயக்கத்தைத் தரும். ஆனால் மக்கள் பிரிவினையை நிலைக்கச் செய்வற்கான கோட்பாடு இது. தீன்தயாள் நால்வருணம் சமூகத்தின் ஒத்திசை வான இயக்கத்திற்குத் தேவை என்றார். ரிக் வேதத்தில், விராட் என்னும் புருஷாவை யாகத்தில் பலியிட்ட போது, அவனது தலையிலிருந்து பார்ப்பனரும் தோளிலிருந்து சத்திரியரும், தொடையிலிருந்து வைசியரும், பாதத்தி லிருந்து சூத்திரரும் தோன்றினர் என்று கூறப்பட் டுள்ளது. எனவே ஒரு மனிதன் செயல்பட தலைமுதல் கால்வரை ஒத்திசைவாக இயங்கிட வேண்டும். அது போன்றதுதான் நால்வருணம் என்று தீன்தயாள் கூறு கிறார். தீன்தயாள் கூறிய இத்தகைய 'ஒருங்கிணைந்த மனிதநேயம்' என்பதை ஜனசங்கம் 1965இல் தன்

கோட்பாடாக அறிவித்தது. ஜனசங்கத்திலிருந்து மறு அவதாரம் எடுத்த பா.ச.க. 1980இல் தீன்தயாளின் 'ஒருங்கிணைந்த மனிதநேயம்' என்பதைக் கட்சிக் கொள்கையாக ஏற்றது.

1965இல் பூனாவில் தீன்தயாள் பேசிய போது, ''சிவாஜி மகாராசா சுயராச்சிய அரசை நிறுவினார். சுயராச்சியத்தின் அடிப்படையில் பாரதத்தை விடுதலை (முசுலீம்களிடமிருந்து) செய்யவேண்டும் என்பதே சிவாஜியின் குறிக்கோள். சிவாஜியின் வழிமுறையைப் பின்பற்றி நாம் நிஜாமிடமிருந்து அய்தராபாத்தையும், கோவாவையும் விடுதலை செய்தோம். இதே தன்மையில் நம் நிலத்தின்மீது நிறுவப்பட்டுள்ள பாக்கிஸ்தானிடமிருந்து நம் நிலத்தை மீட்போம். இது நமது உரிமையும் கடமையுமாகும். எந்தவொரு அயல் நாட்டுச் சக்தியும் நம் நிலத்தின்மீது இருப்பதைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம். பாக்கிஸ்தானிடம் உள்ள நிலத்தை மீட்டு பாரதத்துடன் இணைப்பது ஆக்கிரமிப்பு அல்ல; பண்டைக்காலம் முதல் நமது நிலமாக இருந்ததை மீட்பது நமது உரிமையாகும்'' என்று பேசினார். சங் பரிவாரங்களின் கனவான அகண்ட பாரதத்திற்கு அடிகோலியவர்களுள் தீன்தயாள் முதன்மையானவர். இவர் வழிவந்ததால், அண்மையில் பிரதமர் நரேந்திர மோடி பாக்கிஸ்தான் வசம் உள்ள காஷ்மீரை மீட்போம் என்று சூளுரைத்தார்.

கோல்வால்கர் வலியுறுத்திய தேசிய கலாச்சாரம் என்பதே நமது தேசத்தின் அடையாளம் என்கிற கோட்பாட்டை அடியொற்றி தீன்தயாளும், பாரதமாதா என்கிற பெயரால் இந்தியாவில் பன்னெடுங்காலமாக இருந்துவரும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வங்காளி, பஞ்சாபி முதலான மொழிகளும் அம்மொழிகளின் அடிப்படையிலான இன உணர்வும் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். தீன்தயாளின் கூற்றைப் படியுங்கள்: ''நம்முடைய புண்ணிய பூமிதான் பாரத மாதா. ஆனால் அரசமைப்புச் சட்டத்தில் பாரதம் எனப்படும் இந்தியா மாநிலங்களின் கூட்டமைப்பு (Federation) என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது பீகார் மாதா, வங்க மாதா, பஞ்சாப் மாதா, கன்னட மாதா, தமிழ் மாதா ஆகிய எல்லோரும் சேர்ந்ததுதான் பாரத மாதா என்று கூறுவது முட்டாள்தனமானது. மாநிலங்களைப் பாரதமாதாவின் உறுப்புகளாகத்தான் பார்க்க வேண்டுமே தவிர, தனித்தனி மாதாவாகப் பார்க்கக்கூடாது. இந்தியா ஒற்றையாட்சியாக இருக்க வேண்டும். பாரத நாடு எப்படி பிரிக்க முடியாத ஒன்றாக இருக்கிறதோ, அதுபோல் ஒரே பாரத கலாச்சாரம்தான் இருக்க வேண்டும் என்று ஜனசங்கம் கருதுகிறது.''

இந்தியாவில் வாழும் இசுலாமியர்கள் இந்துக் கலாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டும்; நால்வருணம் நல்லதோர் அமைப்பு; பாக்கிஸ்தான் மீது படையெடுத்துப் பாரதத்துடன் இணைக்க வேண்டும்; இந்தியாவில் உள்ள தேசிய இனங்களை-மொழிகளை-அவற்றின் தனித்த பண்பாடுகளை ஒழித்து, இந்து மதத்தின் - சமஸ்கிருதத்தின் அடிப்படையிலான ஒரே கலாச்சாரமே நிலைநாட்டப்பட வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய தீன்தயாள் உபாத்தியாயவின் நூற்றாண்டை இந்துத்துவ மோடி அரசு கொண்டாடுவதை இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இன மக்களும், மதச்சார்பற்ற-சனநாயக-முற்போக்கு அமைப்புகளும் சிந்தனையாளர்களும் கடுமையாக எதிர்க்க வேண்டும்.

ஆங்கிலேயரை இம்மண்ணிலிருந்து விரட்டிட வாழ்நாள் முழுவதும் தீரமுடன் போராடிய - மதச்சார்பற்ற உயர்ந்த சிந்தனையும் செயல்பாடும் கொண்டிருந்த திப்புசுல்தானுக்கு அரசு விழா நடத்தக்கூடாது என்று கூறும் இந்துத்துவா கும்பல் வாழ்நாள் முழுவதும் இந்துப் பாசிசத்தைப் பரப்பிய தீன்தயாளுக்கு விழா நடத்துவது இந்துத்துவத்தின் இரட்டை நாக்கை அம்பலப்படுத்துகிறது.

(குறிப்பு : தீன்தயாள் உபாத்தியாயாவின் கூற்றுகள் ஃபிரண்ட்லைன் 2016 நவம்பர் 11 இதழில் ஏ.ஜி. நூரனி எழுதிய கட்டுரையிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. நன்றி : ஃபிரண்ட்லைன்)

## வேலூரில் பெரியார் அண்ணா பிறந்த நாள் விழா மற்றும் விருது பெற்றவர்களுக்குப் பாராட்டு விழா

வேலூர் உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பில் பெரியார், அண்ணா பிறந்த நாள் விழா, மற்றும் விருது பெற்றவர்களுக்குப் பாராட்டு விழா 6.11.16 ஞாயிறு மாலை 6 மணிக்கு வேலூர் நகர அரங்கில் நடைபெற்றது. த.வ.சிவ சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். சி.பி.தேசி வரவேற்புரையாற்றினார். மாதி சி.குப்பன், கவிஞர் அறிவுச்சுடர், படைக்கள பாவலர் துரைமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன் வாழ்த்துரை வழங்கினார். வி.ஐ.டி. வேந்தர் கோ.விசுவநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பெரியார் அண்ணா கருத்தரங்கிற்குப் புலவர் வே.பதுமனார் தலைமை தாங்கினார். பெரியாரைப் பற்றி வெ.சோலைநாதன், நா.சதாசிவன், கி.வெங்கடேசன், சு.மோகன்குமார் ஆகியோரும் அறிஞர் அண்ணாவைப்பற்றி இரா.சந்திரசேகரன் ம.சோதி பெருமாங்குப்பம் ச.சம்பத்து கோமகன் இருசன் ஆகியோரும் உரையாற்றினர். சி.பி.தேசி, சொக்கர் மணாளன், ம.சோதி, ந.அரிமர்த்தன பாண்டியன் அறிவுச்சுடர் வசுந்தநாயகன், கு.வெங்கடேசன் ஆகியோர் விருது பெற்றாமைக்காகப் பாராட்டப்பட்டனர். மு.சுகுமார் நிகழ்ச்சியை நெறிப்படுத்தினர். சொக்கன் மணாளன் நன்றியுரையுடன் விழா நிறைவடைந்தது.

# மதம், அந்தந்த மதமக்களை ஒன்றாக இணைத்தது!
# ‘ஒருகடவுள் நம்பிக்கை’ - மக்களை ஒன்றாக இணைத்தது!
# உயர்வு, தாழ்வு பாராட்டாத மதம் ஓங்கி வளர்ந்தது
# பிறவியால் உயர்வு தாழ்வு கற்பித்த இந்து மதம்
# ஓங்கவும் இல்லை; ஒன்றுசேர்க்கவும் இல்லை!

இந்தியாவில் உள்ள மதங்களுள் மிகவும் மூத்தது இந்து மதம் என்கிற ‘பிராமண மதம்’ - வேத மதம்.

அதற்குக் காலத்தால் இளையவை சமணமும், பௌத்தமும். இவைகளைவிட இளையவை கிறித்துவமும், இஸ்லாமும்.

இந்து மதத்துக்கு அடுத்த மூத்த மதமான பௌத்தம் - கி.மு.185இல் புஷ்யமித்ர சுங்கன் காலம் தொடங்கி, ஆதிசங்கரர் காலமான கி.பி.832க்குள் வடஇந்திய மண்ணில் அழிக்கப்பட்டுவிட்டது. சமணமும் பௌத்தமும் சைவ சமயத்தாரால் - தென்னிந்தியாவில், கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்குள் அழிக்கப்பட்டுவிட்டன.

சீனா, ஜப்பான், இலங்கை, இன்றைய மியான்மார் என்கிற எல்லாம் உலகம் அறிந்த பௌத்த நாடுகள். இங்குள்ள பௌத்தர்கள் 150 கோடி பேர் அவர்கள் பின்பற்றுகிற ‘பௌத்தம்’ பிராமணிய வழிப்பட்ட ‘பௌத்தம்’. அதாவது - ஒரு மனிதன் இன்னொரு மனிதனை அடிமைப்படுத்துவது - தாழ்த்தி வைப்பது - கொல்லுவது என்பதை ஓராயிரம் ஆண்டுகளாகச் செய்து வருகிற பௌத்த மத நாடுகள், அவை.

கிறித்துவம் பழைய ஏற்பாடு - புதிய ஏற்பாடு அடிப்படையில் இரண்டு பெரும் பிரிவுகளாகவும், நூற்றுக் கணக்கான உள்பிரிவுகளாகவும் மக்களைப் பிரித்து வைத்திருக்கிற மதம். ஆனால் எந்தப் பிரிவு கிறித்துவரும், பிறப்பால் உயர்ந்தோராக - தாழ்ந்தோராகக் கருதப்படுவதும், நடத்தப்படுவதும் இல்லை. **ஆனால், இந்தியாவில் மட்டும்-கிறித்துவம் அப்படி இல்லை.**

இன்றைய உலகிலுள்ள 720 கோடி மக்களுள் “கிறித்துவர்” என்போர் 250 கோடிக்கு மேற்பட்டோர்.

அதற்கு அடுத்த பெரிய எண்ணிக்கையினர் இஸ்லாமியர்கள் என்கிற 150 கோடி பேர். மிக இளைய மதத்தினர்.

இன்று, மேலே சொல்லப்பட்ட எல்லா மதக்காரர்களும் இந்தியாவில் உள்ளனர். எல்லா மதங்களையும் நம்புகிற - பின்பற்றுகிற இன்றைய இந்திய மக்கள் தொகை 127 கோடி பேர்.

| | | |
|---|---|---|
| 1. | மிக மூத்த மதமான 108 கோடி “பிராமண மதம்” என்கிற இந்து மதக்காரர்கள் (இதில் அயல்நாடுகளில் உள்ள 2 கோடி பேரும் அடக்கம்) | |
| 2. | இந்தியாவில் 600 ஆண்டுகள் ஆட்சிசெய்த முகம்மதியர்களின் - இஸ்லாம் மதக்காரர்கள் | 13 கோடி |
| 3. | 200 ஆண்டுகள் (1757-1947) இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்களின் கிறித்துவ மதம் | 2.50 கோடி |
| 4. | இஸ்லாமியரை எதிர்த்து எழுந்த இந்துக்களின் சீக்கிய மதக்காரர்கள் | 2.50 கோடி |
| 5. | ஆதியில், பிராமண - வேத மதத்தை எதிர்த்து எழுந்த சமணமும், பௌத்தமும் | 1.00 கோடி |

**இந்தியாவில் உள்ள-அயல்நாடுகளில் உள்ள இந்துக்கள், மத உரிமையின்படி ஒருவருக்கொருவர் சமமானவர்கள் அல்ல. இவர்கள் பிறவி காரணமாக மட்டும் அய்ந்து பெரும் பிரிவுகளாகவும், 6700** சிறுசிறு உள் பிரிவுகளாகவும் 2016லும் இருப்பவர்கள்; வாழ்பவர்கள். இந்தியக் கிறித்துவரும், சீக்கியரும், பௌத்தரும், சமணரும், அப்படியே. இவர்கள் 300க்கு மேற்பட்ட மொழிகளைப் பேசுகிறார்கள்.

**ஒரே மொழியைப் பேசுகிறவர்கள் - ஒரே வருணமாக - ஒரே உள்சாதியாக - ஒரே உள்பிரிவாக, பிறவி காரணமாக மட்டுமே இல்லை.**

இந்தியாவில், இஸ்லாமியர் தவிர்த்த மற்றெல்லா மதக்காரர்களின் சமய வாழ்விலும் - சமுதாய வாழ்விலும் - வீட்டு வாழ்விலும் - எத்தனைப் புற மாற்றங்கள் வந்திருந்தாலும் - அவற்றையும் தாண்டி, நீக்கமற நிறைந்திருப்பதும், நிலைத்திருப்பதும் பிராமணியமே - பார்ப்பனியமே!

இதைத் தகர்க்க விரும்புவோர் எத்தனை பேர்?

**- வே. ஆனைமுத்து**

# போபால் என்கவுன்டர்
# விடை கிடைக்காத வினாக்கள்

செங்கதிர்

மத்தியப்பிரதேசத்தின் தலைநகரான போபால் என்ற பெயரைக் கேட்டதும் எல்லோருக்கும் நினைவிற்கு வருவது - 1986 திசம்பர் 2 அன்று இரவு அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான யூனியன் கார்பைடு பூச்சி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையிலிருந்து வெறியேறிய நச்சுவளியால் மக்கள் ஆயிரக்கணக்கில் மாண்டதும், பல இலட்சம் பேர் இன்று வரை அதன் கொடிய பக்கவிளைவுகளால் துன்புற்று வருவதும் ஆகும்.

சப்பான் நாட்டில் 1945 ஆகத்து மாதம் 6,9 ஆகிய நாள்களில் ஹிரோஷிமா நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் அணுகுண்டு வீசி, பல இலட்சம் பேரைக் கொன்ற நாளை அம்மக்கள் ஆண்டுதோறும் கண்டன நாளாகக் கடைப்பிடிப்பதுபோல், போபால் நகர மக்களும் ஆண்டுதோறும் நச்சுவளியால் மக்கள் மாண்ட நாளைக் கண்டன நாளாகக் கடைப்பிடிக்கின்றனர். அக்கொடுமை நேர்ந்து முப்பது ஆண்டுகளான பின்னும் மாநில அரசும் நடுவண் அரசும் யூனியன் கார்பைடு நிறுவனத்தின் நச்சுவளியால் பலவகையிலும் கொடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையோ, போதுமான மருத்துவ ஏந்துகளோ செய்து தரவில்லை. ஏனெனில் அடிப்படையில் இந்த அரசுகள் சாதாரண மக்களின் நலனில் அக்கறை அற்றவை - தேவையான போதெல்லாம் வெகுமக்களுக்கு எதிராகச் செயல்படுபவை.

இப்போது போபால் நகரம் பற்றி இந்தியா முழுவதும் பேசப்படுகிறது. 31.10.2016 அன்று அதிகாலை 3.30 மணியளவில் போபால் நகரின் மத்தியச் சிறையிலிருந்து விசாரணைக் கைதிகளாக இருந்த எட்டு முசுலீம்கள் தப்பிச் சென்றனர். காவல் துறையின் தேடுதல் வேட்டையில் அவர்கள் ஒரே இடத்தில் சுற்றி வளைக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நிகழ்ச்சி இந்திய அளவில் பெரும் விவாதப் பொருளானது.

போபால் நகர காவல் துறையின் சார்பில், “இந்த எட்டுப் பேரும் தடைசெய்யப்பட்ட இந்திய இசுலாமிய மாணவர் இயக்கத்தைச் (Students Islamic Movement of India - SIMI - சிமி) சேர்ந்தவர்கள். இவர்கள் மீது கொலை, கொள்ளை உள்ளிட்ட கொடிய குற்றச்சாட்டுகள் உள்ளன. நள்ளிரவுக்குப்பின் இவர்களில் இரண்டு அல்லது மூன்று பேர் பல்துலக்கும் பிரஷ்ஷைத் திறவுகோலாக மாற்றித் தங்கள் அறைகளின் பூட்டுகளைத் திறந்து வெளியே வந்தபின் மற்றவர்களின் சிறைப் பூட்டுகளைத் திறவுகோலால் திறந்துவிட்டனர். இவர்கள் தப்பிச்செல்வதைத் தடுக்க முயன்ற தலைமைக் காவலர் ராம்சங்கர் யாதவ் என்பவரைக் கொன்றனர். மற்றொரு



*போபால் மத்திய சிறை*

காவலரைக் கட்டிப் போட்டனர். சிறையின் 10 அடி உயரமுள்ள முதல் சுற்றுச்சுவரையும் அடுத்துள்ள 32 அடி உயரமுள்ள சுவரையும் தங்களிடமிருந்த போர்வையை ஏணியாகப் பயன்படுத்தி ஏறிக்குதித்துத் தப்பி ஓடினார்கள். தப்பிச் சென்றவர்களைத் தேடும் பணியில் 300 காவல் துறையினர் ஈடுபடுத்தப்பட்டனர். போபால் நகரத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள இந்த் கேதி எனும் சிற்றூரின் வயல்களுக்கு நடுவில் இருந்த சிறிய குன்றின்மீது அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டனர். எட்டுப் பேரும் காவல் துறையினரைத் தாக்கத் தொடங்கியதால் சுட்டுக் கொல்லப்பட்டனர்” என்று எட்டு இசுலாமியர் கொல்லப்பட்டது குறித்து விளக்கம் தரப்பட்டது.

அரசின் சார்பில் சொல்லப்பட்ட இந்த விளக்கம் குறித்து மனித உரிமை அமைப்பினரும், ஊடகவியலாளர்களும், எதிர்க்கட்சிகளும் பல அய்யங்களையும் வினாக்களையும் எழுப்பினர்.

போபால் மத்திய சிறை, 2015ஆம் ஆண்டு ஐ.எஸ்.ஓ. (ISO) 9001 தரச்சான்று பெற்ற உயர் பாதுகாப்புக் கட்டமைப்புகளைக் கொண்டதாகும். இச்சிறையில் இந்திய இசுலாமிய மாணவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட 21 முசுலீம்கள் மேலும் கூடுதலான பாதுகாப்புக் கட்டமைப்புகள் கொண்ட பிரிவில் (High riskward) தனித்தனி அறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இவ்வளவு பாதுகாப்புமிக்க பிரிவிலிருந்து எட்டுப்பேர் எளிதாகத் தப்பிக்க முடிந்ததென்றால், மற்ற சாதாரண பிரிவுகளில் நிலைமை எவ்வாறு இருக்கும் என்கிற கேள்வி எழுகிறது.

போபால் மத்திய சிறையின் நுழைவாயில் சுவரில் மஞ்சள் வண்ணப் பின்னணியில் கருப்பு எழுத்துகளில், “குற்றச்செயலை வெறுத்திடு; குற்றவாளிகளை அல்ல”

என்கிற காந்தியின் கூற்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் தப்பிச்சென்ற எட்டுப்பேர் மீது வெறுப்பும் சினமும் கொண்டு காவல் துறையினர் சுட்டுக்கொன்றதின் மூலம் அவர்கள் குற்றச்செயலை ஆரத்தழுவினர் - காந்தியின் பொன்மொழிக்கு நேர் எதிராக!

இந்த எட்டுப்பேரும் தப்பிச்செல்ல 45 மணித்துளிகள் ஆகியிருக்கிறது என்று சிறை நிருவாகம் கூறுகிறது. எட்டுப்பேரும் முதலில் பத்து அடி உயரம் கொண்ட சுவரையும், அடுத்த 32 அடி உயரம் கொண்ட சுவரையும் தாண்டிக்குதித்தபோது சிறையின் கண்காணிப்புக் கோபுரத்தில் பணியில் இருந்த காவலர்களின் கண்ணில் படாமல் தப்பியது எப்படி? சிறையில் மூலைக்கு மூலை பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புப் படக்கருவிகளில் இவர்கள் தப்பிச் செல்லும் காட்சி பதிவாகாதது ஏன்? சுழல் விளக்குகள் பாய்ச்சும் ஒளிவெள்ளம் இவர்கள் மீது படாமல் போனது எப்படி? என்கிற வினாக்களுக்குச் சிறை நிருவாகத்தாலோ, மாநில அரசாலோ சரியான விடை கூறமுடியவில்லை. இவர்கள் தப்பிச் செல்வதற்குச் சிறை அலுவலர்களில் சிலர் உதவி இருக்க வேண்டும் என்று கருதிட இடமிருக்கிறது.

பாதுகாப்புக் காரணத்திற்காக இசுலாமிய மாணவர் இயக்கத்தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 21 பேரையும் நீதிமன்றத்துக்கு நேரில் அழைத்துச் செல்லாமல், சிறையிலிருந்தவாறே காணொளி காட்சி மூலம் நீதிபதி இவர்களிடம் விசாரணை நடத்தினார். இவர்கள் 2001இல் தடை செய்யப்பட்ட இசுலாமிய மாணவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று மெய்ப்பிக்க எந்தவொரு ஆதாரத்தையும் காவல்துறையால் காட்டமுடியவில்லை. அதேபோன்று இவர்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களையும் காட்ட முடியவில்லை. எனவே இவர்கள் தப்பிச்சென்றதை வாய்ப்பாகப் பயன்படுத்தி காவல்துறையினரே இவர்களைத் தண்டிக்கும் அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

“அவர்கள் பயங்கரவாதிகள்; அதனால் கொல்லப்பட்டனர்;” இதற்கு மேல் இதில் கேள்வி கேட்பதற்கு என்ன இருக்கிறது? என்பதுபோல் மத்தியப்பிரதேச மாநில பா.ச.க. அரசு கூறுகிறது. உத்தரப்பிரதேசத்தில் தாத்திரியில் அக்லெக் என்கிற முசுலீம் தன்வீட்டில் மாட்டுக்கறி வைத்திருந்தார்; அதனால் அவரைக் கொன்றோம் என்று இந்துத்துவக் கும்பல் கூறுவது போன்று இது இருக்கிறது.

போபாலில் எட்டு இசுலாமிய விசாரணைக் கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டது குறித்து பலரும் கேள்விகள் எழுப்புவது தொடர்பாகக் கருத்துக் கூறியபோது நடுவண் அரசின் உள்துறை துணை அமைச்சர் கிரண் ரிஜிஜு, “அதிகாரிகளையும் காவல்துறையையும் குறித்து அய்யங்கள் எழுப்புவது, கேள்விகள் கேட்பது



*போலி மோதலில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள்*

என்கிற பழக்கத்தை முதலில் கைவிட வேண்டும்” என்று சொன்னார். மத்தியப்பிரதேச மாநில முதலமைச்சர் சிவராஜ்சிங் சவுகானும் பா.ச.க. தலைவர்களும் சிமி இயக்கத்தவர் கொல்லப்பட்டது குறித்து அரசு வெளியிட்டுள்ள தகவல் மீது கேள்விகளை எழுப்புவது தேசபக்தி இல்லாதது, தேசவிரோதமானது என்று கூறினர்.

முதலமைச்சர் சவுகான் எட்டுப்பேரின் கொலை குறித்துக் கேள்வி எழுப்புகிறவர்கள் சிறையில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட ராம்சங்கர் யாதவின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துவதாகும் என்று பிரச்சனையைத் திசைதிருப்பும் வகையில் சொன்னார். நவம்பர் முதல் நாள் மத்தியப்பிரதேச மாநிலம் அமைந்த நாள் விழாவில் சவுகான் பேசிய போது, கூட்டத்தில் இருந்தவர்களை நோக்கி, “எட்டு பயங்கரவாதிகளைக் காவல் துறையினர் கொன்றது சரிதானே?” என்று கேட்டார். “சரியான செயல்தான்” என்று கூட்டத்தினர் ஆர்ப்பரித்தனர். எவ்வளவு இழிதகைமை இது!

அரசையும் காவல்துறையையும் எதிர்த்து எவரும் பேசக்கூடாது என்பது சனநாயகத்தின் கருத்துரிமை - பேச்சுரிமை என்கிற ஆணிவேரையே அரிவாளால் அறுப்பது போன்றதாகும். மாறுபட்ட கருத்தைத் தெரிவிப்பது-விவாதங்கள் சுதந்தரமாக நடைபெற அனுமதிப்பது ஆகியவற்றின் மூலமே சனநாயகம் உயிர் வாழும். பேச்சுரிமையும் கருத்துச் சுதந்தரமும் சனநாயகத்தின் உயிர்நாடி என்று உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் தெளிவுபடுத்தி உள்ளது.

விசாரணைக் கைதிகளான எட்டு முசுலீம்கள் கொல்லப்பட்டது குறித்து முதலமைச்சர் சவுகான் நிருவாக விசாரணைக்கு ஆணையிட்டார். நீதிமன்ற விசாரணை தேவையில்லை என்று உறுதிபடக் கூறினார். ஆனால் இந்தப் போலி மோதல் கொலை நடந்த இரண்டு நாளில் அப்படுகொலையைப் படம்பிடித்துக் காட்டும் காணொளி காட்சிகள் வெளியாயின. அதில்

கையில் ஆயுதம் ஏதும் இல்லாமல் நிற்கும் விசாரணைக் கைதிகளை அருகில் நின்று காவல்துறையினர் துப்பாக்கியால் சுடும் காட்சி காட்டப்பட்டது. கொல்லப்பட்ட எவரிடமிருந்தும் கைத்துப்பாக்கியோ, வேறு ஆயுதங்களோ கைப்பற்றியதாகக் காவல்துறையும் காட்டவில்லை. எனவே தீவிரவாதிகள் சுட்டதால் காவல்துறையினர் திருப்பிச் சுட்டனர் என்று மத்தியப்பிரதேச அரசு கூறியது வடிகட்டிய பொய் என்பது அம்பலமானது. மேலும் இது ஒரு அப்பட்டமான போலி மோதல் கொலை என்பதும் உறுதியாகிறது.

மேலும் இதை உறுதிப்படுத்தும் தன்மையில், போபாலில் காவல்துறையின் கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கும் களத்தில் எட்டுப்பேரைச் சுட்டுக்கொன்ற காவல் துறையினருக்கும் இடையில் நடந்த உரையாடல் ஒலிப்பதிவும் வெளியானது. அதில் ஒரு குரல் ‘‘எட்டுப் பேரையும் சுட்டுத்தள்ளுங்கள்; அவர்களைக் கைது செய்ய முயற்சிக்க வேண்டாம்’’ என்று ஒலிக்கிறது. சிறிது நேரம் கழித்து ‘‘கைதிகள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டனர்; துப்பாக்கிச் சூடு நிறுத்தப்பட்டு விட்டது’’ என சில குரல்கள் ஒலிக்கின்றன.

அந்த எட்டுப்பேரும் குன்றின்மேல் நிற்க, சுற்றிலும் பொது மக்களும் காவல்துறையும் சூழ்ந்து நின்று கொண்டிருந்தனர். கையில் ஆயுதம் ஏதும் இல்லாத அவர்களை இடுப்புக்குக் கீழே சுட்டு அவர்களை உயிருடன் பிடித்திருக்க முடியும். ஆனால் காவல் துறையினர் எட்டுப்பேரையும் சுட்டுக் கொன்றனர். அவர்களில் ஒருவர் உயிருடன் இருந்தாலும், சிறையிலிருந்து தப்பிக்க உதவிய சிறை அதிகாரிகள் யார் என்பது அம்பலமாகிவிடும் என்பதற்காகவே அனைவரையும் கொன்றனர். சந்தனக்கடத்தல் வீரப்பனையும் இதே காரணத்திற்காகத்தான் உயிருடன் பிடிக்க முயலாமல், சுட்டுக்கொன்றனர்.

இந்தியா சனநாயக நாடு என்றும், இங்கு சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது. சட்டம் என்ன சொல்கிறது? குற்றவாளி என்று மெய்ப்பிக்கப்பட்டதன்பேரில் தண்டனை வழங்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு மட்டுமே உண்டு. ஆனால் போபாலில் என்ன நடந்திருக்கிறது? விசாரணைக் கைதிகளான எட்டு இசுலாமியருக்குக் காவல்துறையே துப்பாக்கி மூலம் தண்டனை வழங்கியிருக்கிறது. காவல்துறையினருக்கு இந்தத் துணிவு எங்கிருந்து வந்தது. தாங்கள் தண்டிக்கப்படமாட்டோம்; ஏனெனில் அரசும் இதைத்தான் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது என்கிற நம்பிக்கையின் அடிப்படையில் போலி மோதல் கொலைகளைச் செய்கின்றனர்.

தேசிய மனித உரிமை ஆணையத்தின் அறிக்கையின்படி, 2002 முதல் 2008 வரையிலான காலத்தில் இந்திய அளவில் 440 போலி மோதல் கொலைகளும்



*கொல்லப்பட்ட எட்டு பேரின் புகைப்படங்கள்*

2009 முதல் 2013 வரையிலான காலத்தில் 553 போலி மோதல் கொலைகளும் நடந்துள்ளன.

2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆர்.எம். லோதா, நீதிபதி ரோகின்டன் ஃபாலிநாரிமன் ஆகியோரைக் கொண்ட அமர்வு காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்படும் நிகழ்வுகள் குறித்து சுதந்தரமான, வெளிப்படையான, முழுமையான விசாரணை நடத்துவதற்காக என 16 வழிகாட்டு விதிகளைத் தீர்ப்பாக அறிவித்தது. இந்தத் தீர்ப்பு மும்பை காவல்துறையினரால் 1995 முதல் 1997 வரையிலான காலத்தில் 99 என்கவுன்டர்களில் 135 பேர் கொல்லப்பட்டது குறித்து மனித உரிமைக் கூட்டமைப்பு தொடுத்த வழக்கில் தரப்பட்டதாகும்.

இந்த 16 விதிகளின்படி, மோதல் கொலையில் துப்பாக்கியால் ஒருவரோ அதற்கு மேற்பட்டவரோ சுட்டுக்கொல்லப்படும் போது, அச்செயலில் ஈடுபட்ட காவல்துறையினர்மீது முதல் தகவல் அறிக்கை (FIR) உடனடியாகப் பதிவு செய்யப்பட வேண்டும். முதல் தகவல் அறிக்கை, காவல்துறையின் நாட்குறிப்பு, வரைபடம், பதிவு செய்யப்பட்ட மற்ற ஆவணங்கள் ஆகியவற்றை நீதிமன்றத்துக்கு அனுப்ப வேண்டும். மோதல் கொலை குறித்துப் புலனாய்வுத் துறையோ, காவல் துறையின் உயர் அதிகாரியின் நேரடிக் கண்காணிப்பில் நிகழ்ச்சி நடந்த இடத்துடன் தொடர்பில்லாத வேறு காவல்துறை அதிகாரியோ சுதந்தரமான விசாரணை நடத்த வேண்டும்.

இந்த விதிகளில் மற்றொரு முதன்மையான விதி, ‘‘மோதல் கொலை நடவடிக்கையில் ஈடுபட்ட காவல் துறையினருக்கு உடனடியாகப் பதவி உயர்வோ, பரிசுத் தொகையோ, பாராட்டுச் சான்றிதழோ வழங்கக் கூடாது. மோதல் கொலை அய்யத்திற்கிடமின்றி தவிர்க்க இயலாதது என்று எண்பிக்கப்பட்ட பிறகே காவல்துறையினருக்குப் பதவி உயர்வோ, ஊக்கப் பரிசோ வழங்கலாம்’’ என்று கூறுகிறது. ஆனால் மத்தியப்பிரதேச மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் எட்டுப்



*உச்சநீதிமன்ற நெறிமுறையை மீறி காவல் துறையினருக்கு 1.11.2016 அன்று முதலமைச்சர் சவுகான் பாராட்டுவிழா நடத்தினார்.*

பேரைச் சுட்டுக்கொன்றவர்களுக்கு உடனடியாகப் பாராட்டு விழா நடத்தினார். இந்த மோதல் கொலையில் நேரடியாக ஈடுபட்ட ஒவ்வொருவருக்கும் இரண்டு இலட்சம் உருபாயும், தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் உருபாயும் பரிசுத் தொகையாக அறிவித்தார். சிறையில் கொல்லப்பட்ட ராம் சங்கர் குடும்பத்துக்கு ரூ.40 இலட்சம் வழங்குவதாக அறிவித்தார். 2014இல் உச்சநீதிமன்றம் அறிவித்த விதிகளை மற்றவர்கள் சுட்டிக்காட்டிக் கண்டித்த பிறகு, முதலமைச்சர் பரிசுத் தொகை வழங்குவதை நிறுத்தி வைப்பதாக அறிவித்தார்.

மணிப்பூர் மாநிலத்தில் 1528 பேர் போலி மோதல் கொலை மூலம் கொல்லப்பட்டது குறித்து இறந்தவர்களின் குடும்பத்தினர் தொடுத்த வழக்கில் 2016 சூலை 8 அன்று தீர்ப்பு வழங்கிய நீதிபதி மதன் பி. லோக்கூர், நீதிபதி யு.யு. லிலித் ஆகியோர் 1528 மோதல் கொலைகளில் ஒரு கொலை குறித்தும் விசாரணையோ, குற்றப்பதிவோ நடக்கவில்லை என்பது கண்டிக்கத் தக்கது என்று கூறினர். கலவரப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதி உள்ளிட்ட எந்த இடத்தில் நடக்கும் மோதல் கொலை குறித்து, அச்செயலில் ஈடுபட்ட காவல் துறையினர்மீது முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். அப்போது தான் காவல் துறையினரோ, துணை இராணுவப் படையினரோ தாம் தண்டிக்கப்படுவோம் என்கிற எண்ணத்தில் கொடிய வன்முறைச் செயலில் ஈடுபட சிறிதேனும் தயங்குவார்கள் என்று நீதிபதிகள் கருத்துரைத்தனர்.

இது நீதிபதிகளின் நல்லெண்ணத்தின் அடிப்படையிலான விருப்பமாக மட்டும் இருக்க முடியுமே தவிர, நடப்பில் இதுபோன்ற விதிகள் காவல்துறையினரை மோதல் கொலைகளைச் செய்வதிலிருந்து தடுத்து விடாது. ஏனெனில் நடுவண் அரசும், மாநில அரசுகளும் எந்தக் கட்சியின் ஆட்சியின்கீழ் இருந்தாலும் அரசுக்கு எதிராகப் பேசுவோரை, செயல்படுவோரை அரச பயங்கர வாதத்தின்மூலம் ஒழித்துக் கட்டுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. எனவே இந்த அரசுகள் காவல்துறையின் கொடுஞ்செயல்களை ஆதரிக்கின்றன; அவர்கள் தண்டிக்கப்படாமல் காப்பாற்றுகின்றன.

குற்றம் செய்தனர் என்பதற்குப் போதிய ஆதாரம் இருக்கிறது என்பதன் அடிப்படையில்தான் காவல்துறையினர்மீது விசாரணை நடத்தப்படுகிறது. ஆனால் அரசு நிருவாகத்தின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால் மிகக்குறைந்த எண்ணிக்கையினர் மட்டுமே தண்டிக்கப்படுகின்றனர் என்பதை மேலேயுள்ள புள்ளி விவரம் உணர்த்துகிறது. நடுவண் அரசின் கீழ் உள்ள தேசிய குற்றப்பதிவு ஆணையம் (NCRB) வெளியிட்டுள்ள ஒரு புள்ளிவிவரமே இதற்குச் சான்று பகர்கிறது.

இந்த அரசுகளும், நிருவாக அமைப்பும், நீதித்துறையும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு எதிராகவே இருக்கின்றன என்பதை தேசிய குற்றப்பதிவு ஆணையத்தின் 2015ஆம் ஆண்டிற்கான அறிக்கை அம்பலப் படுத்துகிறது. இந்த அறிக்கையின்படி சிறையில் இருப்பவர்களில் வேறு எந்தப் பிரிவினரையும்விட முசுலீம்களே அதிகமாக இருக்கின்றனர்.

2011ஆம் ஆண்டின் மக்கள் தொகைக்கணக்கின்படி, இந்தியாவில் முசுலீம்கள் 14.2 விழுக்காட்டினர் உள்ளனர். இதன்படி இன்று இந்தியாவில் உள்ள 130 கோடி மக்களில் 18 கோடிப் பேர் முசுலீம்கள். 14.2 விழுக்காடாக உள்ள முசுலீம்களில், சிறைகளில் உள்ள விசாரணைக் கைதிகளில் முசுலீம்கள் 20.9 விழுக்காடாக உள்ளனர்.

மக்கள் தொகையில் 16.6 விழுக்காடாக உள்ள தாழ்த்தப்பட்டவர்கள், விசாரணைக் கைதிகளில் 21.6 விழுக்காடாக இருக்கின்றனர். மக்கள் தொகையில் 8.6 விழுக்காட்டினராக உள்ள பழங்குடியினர் விசாரணைக் கைதிகளில் 12.4 விழுக்காட்டினராக இருக்கின்றனர். ஒடுக்கப்பட்ட பிரிவினராக உள்ள இம்மூன்று பிரிவினரும் சேர்ந்து விசாரணைக் கைதிகளில் 55 விழுக்காட்டினராக இருக்கின்றனர்.


மாநிலங்களில் என்ன நிலை என்று பார்ப்போம். தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் இசுலாமியர் 6 விழுக்காடு உள்ளனர். ஆனால் விசாரணைக் கைதிகளில் 16 விழுக்காடாக இருக்கின்றனர். மகாராட்டிரத்தில் 11.5 விழுக்காடாக உள்ள இசுலாமியர் விசாரணைக் கைதிகளில் 20 விழுக்காடாக உள்ளனர். மேற்கு வங்கத்தில் 27 விழுக்காடாக உள்ள இசுலாமியர், விசாரணைக் கைதிகளில் 47 விழுக்காடாக இருக்கின்றனர். விசாரணைக் கைதிகளைப் போலவே தண்டிக்கப்பட்டவர்களிலும் இசுலாமியர், தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர் விழுக்காடு அதிகமாக இருக்கிறது.

எனவே, ஆளும் வர்க்கமும், அரசின் நிர்வாகத் துறையும் நீதித்துறையும் ஒடுக்கப்பட்ட பிரிவினரான இசுலாமியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோருக்கு எல்லா வகையிலும் எதிராகச் செயல்படுகின்றன. இம்மூன்று பிரிவினரையும் குற்றவாளிகளாக, பயங்கரவாதிகளாகவே பார்க்கின்றன.

**குசராத் என்கவுன்டர்கள்**

குசராத்தில் நரேந்திர மோடி முதலமைச்சராக இருந்தபோது 2002-2006 காலத்தில் 22 போலி என்கவுன்டர்கள் நடைபெற்றதாகத் தேசிய குற்றப்பதிவு ஆணையம் பதிவு செய்துள்ளது. அவற்றுள் சமீர்கான் பதான், சாதிக் கமால், இஷ்ரத் ஜகான், சோராபுதின் ஷேக், துளசிராம் பிரஜாபதி ஆகியோரின் கொலைகள் போலி மோதல் கொலைகள் என்று விரிவான ஆதாரங்களுடன் மனித உரிமை அமைப்புகளால் கண்டறியப்பட்டன.

இப்போது பிரதமர் மோடியின் வலது கையாகவும், பா.ச.க.வின் தலைவராகவும் உள்ள அமித்ஷா தொடர்புடைய சோராபுதின் போலி மோதல் கொலைப் பற்றி மட்டும் பார்ப்போம். சோராபுதின் சிறிய அளவில் கள்ளக்கடத்தல் செய்து வந்தவர். அமித்ஷாவுக்கு நன்கு பழக்கமான வணிகர்களாகவும் உடன்பிறந்தோராகவும் இருந்த தஷ்ரத், ராம்பட்டேல் இருவரையும் சோராபுதின் மிரட்டிப் பணம் பறித்து வந்தார். இது



*அகமதாபாத் சிறையிலிருந்து பிணையில் 30.10.2010 அன்று வெளிவந்த அமித்ஷா*


குறித்து அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்த அமித்ஷாவிடம் முறையிட்டனர். காவல்துறை மூலம் சோராபுதின் போலி மோதலில் கொல்லப்பட்டார்.

இது 2005இல் நடைபெற்றது. சோராபுதின் போலி மோதல் மூலம்தான் கொல்லப்பட்டார் என்பது 2007 இல் மனித உரிமை இயக்கத்தின் மூலம் அம்பலத்திற்கு வந்தது. சோராபுதினின் உடன்பிறந்தவரான ராபுதின் ஷேக் என்பவர் உரிய ஆதாரங்களுடன் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். சோராபுதின் கடத்திச் செல்லப்பட்டுக் காவல் துறையால் கொல்லப்படுவதற்கு அமித்ஷா துணையாக இருந்தார் என்று கைது செய்யப்பட்டார். மூன்று மாதங்கள் சிறையில் இருந்தார்.

2010 செப்டம்பர் பிணையில் வெளிவந்தார் - தில்லியில் தங்கியிருக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன்! 2012இல் உச்சநீதிமன்றம் அமித்ஷா குசராத் மாநிலத்துக்குத் திரும்பலாம் என்று அனுமதி அளித்தது. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே,

**காவல்துறையினர் மீது நடத்தப்பட்ட விசாரணைகள், வழக்குத் தள்ளுபடிகள், தண்டனை விதிக்கப்பட்டவர்கள் விவரம்**

| ஆண்டு | விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட காவல்துறையினர் | திரும்பப் பெறப்பட்டவை (அ) தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள் | விசாரணை முழுமையாக நடத்தி முடிக்கப்பட்ட வழக்குகள் | தண்டனை விதிக்கப் பட்டவர்கள் | குற்றவாளி அல்லர் என்று விடுவிக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|
| 2011 | 1,229 | 475 | 439 | 47 | 392 |
| 2012 | 1,147 | 633 | 158 | 42 | 116 |
| 2013 | 1,250 | 412 | 154 | 53 | 101 |
| 2014 | 1,166 | 146 | 126 | 44 | 82 |
| 2015 | 1,122 | 115 | 92 | 25 | 67 |



*சிறையில் கொல்லப்பட்ட தலைமைக் காவலர் ராம் சங்கர்*

தான் பலிகடா ஆக்கப்படுவதாக அமித்ஷா விடாப்பிடியாகக் கூறிவந்தார்.

2012இல் குசராத் சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று தன் மீதான களங்கத்தைப் போக்கிக் கொண்டதாகக் காட்டிக் கொண்டார். மோடி 2014இல் பிரதமரான போது, உள்துறை அமைச்சராக இருந்த அவர் முதலமைச்சராக விரும்பினார். ஆனால் கட்சித் தலைமைக்குத் தன்னைப் போன்ற அதிரடியான ஆள் தேவை என்று கருதிய மோடி அமித்ஷாவை தில்லிக்கு அழைத்துச் சென்று, பா.ச.க.வின் தேசியத் தலைவராக்கினார். இதற்கிடையில் உச்சநீதிமன்றம் அரசியல் பெரும் புள்ளிகளுக்கும் பெருமுதலாளிகளுக்கும் வழங்கும் சிறப்புச் சலுகையாக, போதிய ஆதாரம் இல்லை என்ற காரணத்தைக் கூறி சோராபுதின் வழக்கிலிருந்து அமித்ஷாவை விடுவித்தது. இப்போது அமித்ஷா பிரதமர் நரேந்திர மோடியுடன் சேர்ந்து இந்தியாவை அதிரடியாகக் கலக்கிக் கொண்டிருக்கின்றார்.

**மாவோயிஸ்டு என்கவுன்டர்**

போபாலில் எட்டு முசுலீம் விசாரணைக் கைதிகள் சுட்டுக்கொல்லப்படுவதற்கு ஆறு நாள்களுக்குமுன் - 24.10.2016 அன்று ஆந்திர - ஒடிசா மாநில எல்லையில் ஒடிசா பகுதியில் உள்ள மல்கான்கிரி மாவட்டத்தில் பாலிமெலா அணைப் பகுதியில், ஆந்திர-ஒடிசா மாநிலங்களின் அதிரடிப் படையினர் மாவோயிஸ்டுகள், ஆதரவாளர்கள், பழங்குடியினர் உள்ளிட்ட 39 பேரைச் சுட்டுக் கொன்றனர். மல்கான்கிரியில் மாவோயிஸ்டுகள் மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தபோது. எதிர்பாராத வகையில் தாக்குதலுக்குள்ளாயினர். இந்த மோதலில் காவல் துறையினர் ஒருவரும் காயம் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தாக்குதல் நடந்த ஒடிசாவின் தென்பகுதி மாவட்டங்களான ராய்காட், காளஹந்தி, கேரபம் ஆகிய பகுதிகளிலும் ஆந்திரத்தின் விசாகப்பட்டின மாவட்டத்திற்கு வடக்கேயும் தரம் மிகுந்த பாக்ஸைட் கனிமவளம் நிறைந்து கிடக்கிறது. இப்பகுதி முழுவதும் பழங்குடியினர் வாழுகின்றனர். மாவோயிஸ்டுகளின் ஆதரவுடன் பழங்குடியினர் எதிர்த்து வந்ததால், இப்பரப்பில் சிறு பகுதியை மட்டுமே முதலாளிகளால் கைப்பற்ற முடிந்தது. 24.10.2016 அன்று 39 மாவோயிஸ்டுகளும் அவர்களின் ஆதரவாளர்களும் கொல்லப்பட்டதன் நோக்கம் 2012க்குப் பிறகு வலிமைகுன்றி வந்த மாவோயிஸ்டு இயக்கத்தை இப்பகுதியில் அடியோடு ஒழித்துவிட்டு, பெருமுதலாளிகளுக்கு பாக்சைட் கனிமவளம் மிகுந்த பெரும் பரப்பை அளிப்பதேயாகும்.

ஒன்றுபட்டிருந்த ஆந்திராவில் 1995 முதல் இதுவரை 32,693 மாவோயிஸ்டுகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 7,195 பேர் சரணடைந்துள்ளனர். 1750 மாவோயிஸ்டுகள் என்கவுன்டரில் கொல்லப்பட்டுள்ளனர். காவல்துறையினருள் 163 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அமைதியின் வடிவாய்க் காட்சியளித்த பிரதமர் மன்மோகன் சிங், மாவோயிஸ்டுகள் உள்நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறார்கள் என்று அறிவித்தது முதல், மாவோயிஸ்டு இயக்கத்தை அரசுகள் தீவிரமாக ஒடுக்கி வருகின்றன.

என்கவுன்டர் குறித்து கேள்விகள் கேட்பதாலேயே கொல்லப்பட்டவர்களை ஆதரிப்பதாகவோ, அவர்களுடைய சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்வதாகவோ ஆகிவிடாது. சட்டத்தைக் காலின்கீழ் மிதித்துவிட்டு, மனித உரிமைகள் மீறப்படும்போது அவற்றைக் கேள்விக்குட்படுத்துவதில்தான் சனநாயகத்தின் உயிர்மூச்சு அடங்கி இருக்கிறது.

எனவேதான் 9.7.2016 அன்று உச்சநீதிமன்றம் மணிப்பூர் மாநில என்கவுன்டர்கள் குறித்த வழக்கில், ‘‘ஆயுதப்படையாலோ, காவல்துறையாலோ கொல்லப்பட்ட ஒருவர் பயங்கரமான செயல்கள் புரிபவராகவோ, ஒரு தீவிரவாதியாகவோ, அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போரிடுபவராகவோ இருந்தாலும் அந்த இறப்பு குறித்துத் தீவிரமாக விசாரிக்க வேண்டும்’’ என்று தீர்ப்பு கூறியது.

ஆகவே போபாலில் 31.10.2016 அன்று எட்டு இசுலாமிய விசாரணைக் கைதிகள் கொல்லப்பட்டது குறித்து உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி எஸ்.கே. பாண்டே தலைமையில் விசாரிக்க மத்தியப் பிரதேச மாநில அரசு ஆணையிட்டுள்ளது. இந்த விசாரணையும் உச்சநீதிமன்றத்தின் நேரடியான கண்காணிப்பின்கீழ் நடைபெற வேண்டும்.

இதேபோன்று 24.10.16 அன்று மல்கான்கிரியில் 39 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டது குறித்து உச்சநீதிமன்றம் 9.7.2016 அன்று அறிவுறுத்தியுள்ளபடி நீதிவிசாரணை நடத்தப்பட வேண்டும். இதற்காக சனநாயக நெறிமுறைகளில் நம்பிக்கை கொண்டோரும் மனித உரிமை அமைப்புகளும், பொது மக்களும் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.

கட்டுரைத் தொடர்-46

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

பெரியார் 13.11.1938இல் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்துகொண்டு பெண்களைப் போராட்டத்தில் ஈடுபடுமாறு பேசியதற்காக ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனையும் 1000 ரூபாய் அபராதமும், மறுநாள் 14.11.1938 அன்று பெத்துநாய்க்கன் பேட்டையில் பள்ளியின் முன் பெண்கள் மறியல் செய்வதற்குத் தயாராயிருந்தபோது நடைபெற்றக் கூட்டத்தில் பேசியதற்காக ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனையும், 1000 ரூபாய் அபராதமும் கட்ட வேண்டும் என்றும் அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி மாதவராவ் 6.12.1938 பிற்பகல் 3.15 மணிக்குத் தீர்ப்பளித்தார். பெரியார் எதிர் வழக்காடாமலும், அபராதம் கட்ட மறுத்தும் நீதிமன்றத்தில் தான் செய்ததில் சட்டமீறல் எதுவும் இல்லை என்ற அறிக்கையை மட்டும் படித்துக் கொடுத்துவிட்டு, மூன்றாண்டு கடுங்காவல் தண்டனையை ஏற்றுக்கொண்டு சிறைக்குச் சென்றுவிட்டார்.

பெரியார் அநியாயமாகச் சிறைக்கு அனுப்பப்பட்டதைக் கண்டித்து மறுநாள் மாலை 6.30 மணிக்கு சென்னைக் கடற்கரையில் மாபெரும் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. சுமார் 30,000 பேர் கலந்துகொண்டனர்.

கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமை வகித்தார். சர்.ஏ.டி. பன்னீர்செல்வம், நீதிக்கட்சியின் துணைத் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான கலிபுல்லா சாகிப், என்.வி. நடராசன், டி.ஏ.வி. நாதன் உட்பட பலர் முதலமைச்சர் இராசாசியின் சர்வாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டித்துப் பேசினர். கி.ஆ.பெ.விசுவநாதம் இட்லரைவிட மோசமான கொடுங்கோலர் ஆச்சாரியார் என்று பேசினார்.

முன்னாள் ஹோம் மெம்பரும், முன்னாள் அமைச்சருமான சர். பன்னீர்செல்வம் ஆச்சாரியார் அடக்குமுறையினால் தென்னாட்டுக்கு ஏற்படப்போகும் ஆபத்தைச் சுட்டிக்காட்டினார். அடக்குமுறையினால் ஆள்வோர் எதிர்பார்த்த பலன் கிடைக்காது. ஆள்வோருக்கு எதிராகவே அது திரும்பும் என்று எச்சரித்தார்.

சென்னை மாநிலம் முழுவதும் பெரியார் கைது செய்யப்பட்டதற்குக் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன.

8.12.1938 அன்று திருச்சியில் நடைபெற்ற மிகப்பெரிய கூட்டத்தில் பேசிய கி.ஆ.பெ. விசுவநாதம் ‘‘ஈ.வெ.ரா. கிரிமினல் குற்றங்கள் எதையும் செய்யவில்லை. ஆச்சாரியார் ஆட்சியில் ‘தமிழ் வாழ்க’ என்று சொன்னாலே போதும், நீங்கள் சிறை விருந்தினராக ஏற்றுக்கொள்ளப்படுவீர்கள்’’ என்று பேசினார்.



பெரியாருடைய பிறந்த நாள் விழா 18.12.1938 அன்று தமிழ்நாடு முழுவதும் கொண்டாடும்படி 10.12.1938 விடுதலையில் கி.ஆ.பெ. அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

**திருச்சி விசுவநாதம் அறிக்கை**

சுயமரியாதை இயக்கத் தலைவரும், தமிழர் இயக்கத் தந்தையும், ஜஸ்டிஸ் கட்சியின் லீடரும், தமிழ்நாட்டுப் பெரியாருமாகிய பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்களின் 60ஆம் ஆண்டு பிறந்த நாள், டிசம்பர் 18ஆம் தேதி அன்று காங்கிரஸ் ஆட்சியின் சிறைச்சாலையில் தொடங்குகிறது.

இவ்விழாவைப் பெருஞ் சிறப்பாகக் கொண்டாடி, ‘‘பெரியார் வாழ்க!’’ என்று பேரொலி முழக்க வேண்டியது தமிழ்நாட்டு மக்கள் அனைவருடையவும் கடமையாகும்.

சென்னை ராஜதானி தலைநகரத்திலிருந்து திருநெல்வேலி ஜில்லாவின் கடைசிக் கிராமம் வரை உள்ள எல்லா ஊர்களும் இவ்விழாவை நடத்துவதில் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

பெரியார் பிறந்த நாள் கொண்டாட்ட விழாவைக் கீழ்க்கண்டவாறு நடத்தலாம்.

1. பொது ஜனங்களுக்கு 18ஆம் தேதிக்கு முன்பே தகுந்த முறையில் முன் அறிவிப்புச் செய்தல்.
2. 18ஆம் தேதி காலையில் தமிழ்க் கொடி, ஜஸ்டிஸ் கொடிகளை ஆங்காங்கு உயர்த்துதல்.
3. முற்பகல் முழுதும், பொய்ப் பிரச்சாரப் பத்திரிகைகளை வாங்கிப் படித்துவரும் நண்பர்களிடம் ‘‘விடுதலை’’யைப் படிக்க வேண்டிய அவசியத்தை, உண்மையை எடுத்துக் கூறுவதின் மூலம் நன்கு விளக்கிக் காட்டுகிற அரும்பணியைச் செய்து ‘‘விடுதலை’’யை வளர்த்தல்.
4. பிற்பகலில் பெரியார் அவர்களின் உருவப் படத்துடன் ஊர்வலம் வருதல்.

5. மாலையில் பொதுக்கூட்டம் கூட்டி சொற்பொழிவு நிகழ்த்துதல்.


6. பெரியாரைப் பாராட்டுதல், கட்டாய இந்தியை வெறுத்தல், காங்கிரஸ் கட்சியின் அடக்குமுறை ஆட்சியைக் கண்டித்தல், வேலூர், சென்னை மகாநாடுகளில் கலந்துகொள்ளுதல் ஆகிய தீர்மா னங்களை நிறைவேற்றுதல்.

7. இரவு உணவுக்குப் பின்னும், உறங்குவதற்கு முன்னும் காங்கிரஸ் ஆட்சியின் வகுப்புவாதச் செயலை, வரிக்கொடுமையின் விளைவை, வாக்குறுதிக்கு மாறான செயலை, மகாத்மாவின் அஹிம்சா தர்ம ராம ராஜ்ய தடியடி துப்பாக்கிப் பிரயோக கட்டாய இந்தித் திட்ட சிறைச்சாலை தர்பாரைச் சிறிது நேரம் சிந்தித்து உணர்தல்.

இப்பெரு நாளைக் கொண்டாடுவதில் ஜஸ்டிஸ் சங்கங்கள், தமிழர் சங்கங்கள், சுயமரியாதைச் சங் கங்கள், முஸ்லீம் லீக், கிறிஸ்தவ சங்கங்கள், ஆதி திராவிட மகாசபைகள், இளைஞர் சங்கங்கள் ஆகிய அனைத்தும் பெரும் பங்கு பெற்று சிறப்பிக்க வேண்டிக் கொள்ளுகிறேன்.

இவ்வாறு கி.ஆ.பெ.விசுவநாதம் அறிக்கை வெளியிட்டார்.

(விடுதலை 10-12-1938)



# பெரியார் தண்டனை

## கடுங்காவல் வெறுங்காவலாயிற்று.

## காங்கிரஸ் சர்க்கார் போக்கு.

சென்னை, டிச 9— பெரியார் இ. வெ. ரா. வுக்கு அளிக்கப்பட்டிருக்கும் கடுங்காவல் தண்டனையை காங்கிரஸ் சர்க்கார் வெறுங்காவல் தண்டனையாகக் குறைத்திருக்கிறார்கள். (ஹிந்து)

**பெரியார் தண்டனை - சட்டசபையில் சரமாரி கேள்விகள்**

**பன்னீர்செல்வம், பக்தவத்சலம், குமாரராஜா முயற்சி**

**"பெரியாருக்கு ஏ வகுப்பு"**

**"மகாநாட்டுத் தலைமை வகிக்க விடுதலை செய்வது பற்றி யோசிக்கப்படும்"**

**சர்க்கார் பதில்**

நேற்று சென்னை சட்டசபையில் பெரியார் ஈ.வெ.ரா. தண்டனை விஷயமாக தோழர் பக்தவத்சலம் நாயுடு (1) ஜார்ஜ்டவுன் மாகாண மாஜிஸ்திரேட்டினால் பெரியார் ஈ.வெ.ரா. தண்டிக்கப்பட்டது. உண்மை தானா? (2) உண்மையானால் என்ன குற்றத்துக்காக தண்டிக்கப்பட்டது. (3) அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்ன? (4) அவருக்கு எந்த வகுப்பு அளிக்கப்பட்டிருக் கிறது என சிறை மந்தியை ஒரு அவசரக் கேள்வி கேட்டார்.

அக்கேள்விக்கு கனம் ராமநாதன் பதிலளித்த தாவது: மாகாண மாஜிஸ்திரேட்டினால் தண்டனையளிக் கப்பட்டது வாஸ்தவமே. இந்து தியாலாஜிக்கல் பள்ளி முன் கட்டுப்பாடாகவும் தொடர்ச்சியாகவும் தொல்லை விளைவிக்கத் தூண்டியதற்காக ஒவ்வொரு குற்றத்துக் கும் ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை யும் 1000 ரூபாய் அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் 6 மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. அவருக்கு ஏ வகுப்பு அளிக்கப்பட்டது.

அப்பால் சரமாரியான உப கேள்விகள் கேட்கப்பட்டன.

ஸர் பன்னீர்செல்வம் : குற்றப் பத்திரிகை வாசகத் தைப் படித்துத்தானா இரண்டாவது கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டது?

மந்திரி : அவர் தூண்டியதாக குற்றப் பத்திரிகை கூறுகிறது.

குமாரராஜா : அவரே பள்ளிக்கூடம் முன் மறியல் செய்தாரா?

மந்திரி : அவர் தூண்டியதாகக் குற்றப்பத்திரிகை கூறுகிறது.

ஸர். பன்னீர்செல்வம் : விடுதலை விஷயமாக அவர்அரசியல் கைதியாக மதிக்கப்படுவாரா, சாதாரண கைதியாக மதிக்கப்படுவாரா?

மந்திரி : விடுதலை விஷயம் வேறு; வகுப்பு நிர்ணயம் செய்யும் விஷயம் வேறு. வழக்கின் தராதம்மியங் களைப் பார்த்தே அரசியல் கைதிகளை சர்க்கார் விடுதலை செய்வார்கள். கேட்ட கேள்வி வகுப்பு நிர்ணயத்தைப் பற்றியதே.

ஸர். பன்னீர்செல்வம் : அவருக்கு ஏ-வகுப்பு அளிக்கப்பட்டது எப்போது?

மந்திரி : சமீபத்தில்.

ஸர். பன்னீர்செல்வம் : அது சம்பந்தமாக உத்தர வுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டனவா?

மந்திரி : ஆம்.

ஸர். பன்னீர்செல்வம் : பெரியார் ஈ.வெ.ரா. ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா?

மந்திரி : அதுபற்றிப்பேச என்னைவிட கனம் மெம்பரே அதிக லாயக்குடையவர்.

தலைவர் : அதனாலேயே அவருக்கு ஏ-வகுப்பு அளிக்கப்பட்டிருக்கலாம்.

ஸர். பன்னீர்செல்வம் : பொது ஜனத் தொண்டாற்ற அவருக்கு வசதியளிப்பது பற்றி சர்க்கார் யோசிப்பார்களா?

மந்திரி : அவ்விஷயத்தைப் பற்றி சர்க்கார் யோசிப் பார்களா?

குமாரராஜா : சர்க்காரை எதிர்த்துக் கிளர்ச்சி செய் வதையடக்கும் சர்க்கார் கொள்கைப்படிதான் பெரியார் ஈ.வெ.ரா. தண்டிக்கப்பட்டாரா?

முதன் மந்திரி : அம்மாதிரி கொள்கை எதுவும் சர்க்காருக்கு இல்லை.

குமாரராஜா : கட்டாய இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ததற்காகத் தானே பெரியார் ஈ.வெ.ரா.வும் ஏனை யோரும் தண்டிக்கப்பட்டார்கள்?

மந்திரி : பெரியார் ஈ.வெ.ரா. சட்டத்தை மீறினார்.

குமாரராஜா : நான் கேட்ட கேள்வி அரசியல் கிளர்ச் சியைப் பற்றியது?

மந்திரி : இந்தியை எதிர்த்து கிளர்ச்சி செய்வது அனு மதிக்கக் கூடியதே. ஆனால் ஈ.வெ.ரா. சட்டத்தை மீறி னார்; அதனாலேயே அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது.

தலைவர் : சட்டசபை மெம்பர்கள் அறியும் பொருட்டு தாங்கள் குற்றப்பத்திரிகையைப் படித்துக் காட்டலாமே.

முதன் மந்திரி : அவர் செய்த குற்றம் என்ன என்பது தான் கேள்வி. குற்றப்பத்திரிகை இரண்டு பக்கம் கொண்டது.

பக்தவத்சலம் நாயுடு : போலீசார் குற்றப் பத்திரிகை தயார் செய்யும் முன் ஈ.வெ.ரா. மீது வழக்குத் தொடரப் படுவது பற்றி சர்க்காருக்குத் தெரியுமா?

முதன் மந்திரி : இம்மாதிரிக் கேள்விகளுக்கு சர்க் கார் பதிலளிக்கமாட்டார்கள். சர்க்கார் உத்தியோகஸ் தர்கள் செய்யும் காரியங்கள் எல்லாம் சர்க்காருக்குத் தெரியத்தான் செய்யும்.

கலா வெங்கடராவ் : பெரியார் என்றால் பொருள் என்ன? ஒருவரும் இக்கேள்விக்குப் பதிலளிக்கவில்லை.

பெரியார் என்றால் மகாத்மா பட்டம் மாதிரி என ஸர். பன்னீர்செல்வம் அவர் போக்கில் கூறினார்.

அப்பாதுரைப் பிள்ளை : கடுங்காவல் தண்டனை வெறுங்காவல் தண்டனையாக மாற்றப்பட்டிருப்ப தினால் அபராதத் தொகையையும் சர்க்கார் குறைப் பார்களா?

முதன் மந்திரி : இந்த விஷயங்கள் எல்லாம் உரிய காலத்து கவனிக்கப்படும். ஆனால் அபராதத் தொகை சர்க்காருக்குக் கிடைக்குமென நான் எண்ணவில்லை.

**(- விடுதலை 14-12-1938)**

**தொடரும்**

## அ.இ.அ.தி.மு.க. அமைப்புச் செயலாளர் விசாலாட்சி நெடுஞ்செழியன் மறைந்தார்!



இளந்தாடி நாவலர் இரா. நெடுஞ்செழியன் சிறந்த தமிழறிஞ ராகவும், சுயமரியாதைக் கொள் கையின் கொள்கலனாகவும் விளங்கியவர். தந்தை பெரியார், அறிஞர் சி.என். அண்ணாதுரை, கலைஞர் மு.கருணாநிதி, எம்.ஜி. இராமச்சந்திரன், ஜெய லலிதா ஆகியோரின் நன்மதிப் புக்கு உரியவர்.

அன்னாரின் வாழ்க்கைத் துணைவியாராக சேலத்தில் பிறந்த விசாலாட்சி அம்மையார் அமைந்திடத் துணைசெய்தவர்கள் தந்தை பெரியாரும், சேலம் அ. சித்தையன் அவர்களும் ஆவர்.

விசாலாட்சி அம்மையார் இந்தியாவிலும், இலண்டனிலும் மருத்துவக் கல்வி பயின்றவர். தமிழக அரசின் பொது உடல் நலத்துறையின் இணை இயக்குநராக இருந்து ஒய்வு பெற்றவர். இன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் நம்பிக்கையைப் பெற்றவர்; கடந்த 14 ஆண்டுகளாக அ.இ.அ.தி.மு.க.வின் அமைப்புச் செயலாளராக விளங்கிய அப்பெருமாட்டியார், தம் 93ஆம் அகவையில் 14.11.2016 திங்கட்கிழமை மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரை இழந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்கு கிறோம்.

**- வே. ஆனைமுத்து**

## புதுச்சேரி திருவமை சுடர் - கண்ணன் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு

புதுச்சேரி சுடர்-கண்ணன் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு 17-11-2016 வியாழக்கிழமை காலை 10 மணிமுதல் 1 மணி வரை புதுச்சேரி மொழியல் பண் பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் தொல்காப்பியர் அரங்கில் நடைபெற்றது. பாவாணர் கண்ட சொல்லாக்கமும் சொல் வழி வரலாறும் என்ற தலைப்பில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு த.கணேசன் தலைமை வகித்தார். பக்தவசலபாரதி வரவேற்புரையாற்றினார். ம.பெ.தங்கப்பா, சீனு. அரிமா பாண்டியன், சி.மா.பாலதண்டாயுதம், தமிழநம்பி க.குணத்தொகையன், எழில் இளங்கோ ஆகியோர் முன்னிலை வகித்து சொற்பொழிவாற்றினர். செந்தலை கவுதமன் அவர்கள் சிறப்புரையாற்றினார். ச.பிலவேந்திரன் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவேறியது.

# இந்தி எதிர்ப்பு! தமிழர்கள் உணர வேண்டியது என்ன?

"எப்பக்கம் வந்து புகுந்துவிடும் - இந்தி
எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்?"

எனப் போர்ப் பரணி பாடி, இந்தியை 1938இல் எதிர்த்தனர் தமிழர்.

1922இல் தம் சொந்தக் கட்டடத்தில் இந்திப் பள்ளியைத் துவக்கியவர் தேசிய காங்கிரஸ் தலைவர் பெரியார். அவரே 1926 முதல் வன்மையாக இந்தியை எதிர்த்தார்.

இந்தி கட்டாயப் பாடமாக 1937இல் தமிழகத்தில் புகுத்தப்பட்டது. தேசியத் தமிழர், சமயம் போற்றும் தமிழர், பார்ப்பனத் தமிழர், வணிகர், நீதிக்கட்சித் தமிழர், மாணவர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் என்கிற பல்வேறு நிலையிலிருந்த தமிழர்களும் "கட்டாயப் பாடமாக இந்தி" திணிக்கப்பட்டதை எதிர்த்து தந்தை பெரியார் தலைமையில் கடும்போர் தொடுத்தனர்.

இந்தியாவில் அப்போது காங்கிரஸ் ஆண்ட எந்த மாகாணத்திலும் இந்தி கட்டாயப் பாடமாக்கப்படவில்லை; சென்னை மாகாணத்தில் மட்டுமே - ஆச்சாரியார் ஆளுகை இருந்ததால் இந்தி நுழைந்தது.

அதனை விரட்டிடப் புறப்பட்ட படை சென்னைக் கடற்கரையை அடைந்தபோதுதான் அந்தப் படையை வரவேற்று முழங்கிய பெரியார், "தமிழ்நாடு தமிழருக்கே" எனத் தனி நாடு கோரும் முழக்கத்தினை அளித்தார், 1938இல்!

அது வெள்ளையர் ஆட்சிக்காலம். அந்த வெள்ளையர் ஆட்சிதான் 1940இல் கட்டாய இந்தியை ரத்து செய்தது.

வெள்ளையன் போல் காங்கிரஸ் கொள்ளையர் ஆட்சி - பார்ப்பன, பனியா ஆட்சி 1947இல் வந்தவுடன், மீண்டும், எந்தச் சட்ட ஆதரவும் இல்லாமலே இந்தி புகுத்தப்பட்டது. அப்போதும், அண்ணாதுரையை முதல் சர்வாதிகாரி என ஆக்கி, குடந்தையில் மாபெரும் போராட்டம் துவக்கினார் பெரியார்.

1938இல் இருந்து நிலை மாறி - இந்தி எதிர்ப்பு திராவிடர் இயக்கத்துக்குச் சொந்தம் என்கிற நிலை அப்போது 1948இல் தான் உருவாயிற்று. அரசு விளைத்த கொடுமையை எதிர்த்து நின்று, பின்னர் அப்போராட்டம் நிறுத்தப்பட்டது.

இந்தி இந்தியாவின் அலுவல் மொழி அல்லது ஆட்சி மொழி என்கிற அரசியல் சட்ட ஏற்பாடு 1950இல் வந்தது. அதனை அன்று முதல் எதிர்த்து 1952, 1953, 1954 ஆண்டுகளில் தமிழகம் முழுவதிலும் இரயில்வேயெயர்ப் பலகைகளில் இருந்த இந்தியைத் தி.க.வினர் அழித்தனர். தி.மு.க.வினரும் இதில் ஆர்வம் பூண்டு செய்தனர்.

காங்கிரஸ் ம.பொ.சி. முதல் காமராசர் ஈறாக அனைவரும் அந்த எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டினர்.

எதிர்ப்புக்கு எதிர்ப்பு வலுப்பெற்ற நிலையில் "இந்தியை ஒழிக்க, இந்திய தேசியக் கொடியை எரிப்பேன்!" எனப் புறப்பட்டார் பெரியார்.

காங்கிரஸ் கூடாரம் கலகலத்தது; தமிழ்நாடு ஆட்சி பதைபதைத்தது; தில்லி ஆட்சி துடிதுடித்தது.

"தேசியக் கொடியையே கொளுத்துவதா?" எனத் தேசியத் தலைவர்கள் உரத்துக் கூவினர். தி.மு.க. தலைவர் அண்ணாதுரைகூட அந்தப் போர் முறையைக் கண்டனம் செய்தார்.

1.8.1955இல் கொடி கொளுத்தும் போராட்டம் - அதற்கு முதல் நாள் பிரதமர் நேரு தூங்கவில்லை; முதலமைச்சர் காமராசர் தூங்கவில்லை.

நேருவின் ஆலோசனைப்படி காமராசர் பெரியாரிடம் தூதுவிடுத்து "இந்தி கட்டாயப் பாடம்" என்பதை எடுத்துவிட உறுதி தந்தார். எனவே, கொடி கொளுத்தும் போர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

தமிழகத்தில், "இந்தி, விருப்பப் பாடம்" எனக் கூறி எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் அப்பொழுது முதல் கற்பிக்கப்பட்டது.

ஆயினும், 1) மத்திய அரசு அலுவலகங்களில் இந்தி கற்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2) சில சமயங்களில் மத்திய அரசு இந்தியில் ஆணைகளை அனுப்பத் தொடங்கியது. 3) அரசியல் சட்ட விதிகள் 343, 344-அய் முன்வைத்து அதில் கண்டபடி பதினைந்து ஆண்டுகளுக்குள் (1965க்குள்) இந்தியே அலுவல் அல்லது ஆட்சி மொழியாக ஆகித் தீர ஏற்றவை செய்ய வேண்டும் என இந்தி மொழி வெறியர்களும், தேசியத் திலகங்களும் வரிந்து கட்டிக்கொண்டு செயல்பட்டனர்.

இந்த நிலையைப் பெரியார் எதிர்த்தார்; அண்ணாதுரை எதிர்த்தார்; பல்வேறு அரசியல் கட்சியினரும் எதிர்த்தனர்.

மாணவர்கள் ஒருமுகமாகப் பங்குகொண்ட இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினைத் தமிழகமே அமளிப்படும் வகையில் தி.மு.க. நடத்தியது, 1965இல்.

இந்தி எதிர்ப்புக் குரல் நாடாளுமன்றத்திலேயே கடுமையாக ஒலித்தது.

இந்த நிலையில் பண்டித நேரு முன்வந்து, அவர் பிரதமர் என்கிற முறையில் நாடாளுமன்றத்தில் 1963இல் தந்த வாக்குறுதி ஒன்றுதான், இந்தி நேரடியாக - பள்ளிகள் மூலம் வராமல், மத்திய அரசு அலுவலகங்கள் மூலமாக வரத் தொடங்கியதில் முடிந்தது.

"இந்தி பள்ளிகளில் இல்லை" என்கிற நிலை தமிழகத்திலும் வங்காளத்திலும் மட்டுமே உண்டு.

வெள்ளையர் காலத்தில் ஆங்கிலத்தில் படிக்கவும், பதவி பெறவும் முதல் வாய்ப்புக் கிடைத்தது வங்காளிகளுக்கு; இரண்டாவது வாய்ப்புக் கிடைத்தது தென்னிந்தியருக்கு - சென்னை மாகாணத்துக்கு.

1955க்குப் பிறகு சென்னை மாகாணம் என்பதாக ஒன்று இல்லை.

இந்த நிலையில் ஆந்திராவில் இந்தி அப்போதே கட்டாயப் பாடமாகிவிட்டது; கேரளாவில் இந்தி கட்டாயப் பாடமாகிவிட்டது; கர்நாடகத்தில் இன்றும் விருப்பப் பாடமாக இருக்கிறது.

1967இல் அண்ணாதுரை ஆட்சியில் வந்த "பள்ளியில் இந்தி ஒழிப்பு" என்கிற ஏற்பாடு தமிழகத்தில் மட்டுமே இன்றும் இருக்கிறது. விருப்பப் பாடம் என்பதும் ஒழிந்தது.

மேற்குவங்கத்திலும், அஸ்ஸாமிலும் இதே நிலை.

பள்ளிகளில் விருப்பப் பாடமாக இருந்த இந்தியை ஒழித்துவிட்டு, இருமொழிக் கொள்கையை தி.மு.க. ஆட்சி 1967இல் அறிவித்தது.

"நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்ட தி.மு.க. இப்படி இந்தியை எடுத்துவிட்டதால் இந்தி ஒழிந்ததாக ஆகாது" என்பதை விளக்கி ஓர் கட்டுரையை எழுதி அப்போது "விடுதலை" அலுவலகத்தில் இருந்த தந்தை பெரியாருக்கு நான் அனுப்பி வைத்தேன். அது அச்சமயம் "விடுதலை" ஏட்டிலும் வெளியிடப்பட்டது. நிற்க.

இவற்றைத் தோற்கடிக்க மத்திய அரசு செய்யும் முயற்சிகள் என்னென்ன?

1. இந்தியை வளப்படுத்த தனித்திட்டங்கள்.
2. இந்தியைப் பாட மொழியாக ஆக்க இந்தி மாநிலங்கள் முன்வர ஆதரவு.
3. இந்தியா முழுவதிலுமுள்ள மத்திய அரசு அலுவலகங்களில் எல்லா ஊழியர்களுக்கும் இந்தியை இலவசமாகக் கற்றுத்தர ஏற்பாடு.
4. இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள "தட்சண பாரத் இந்திப் பிரசார சபா" போன்றவற்றுக்குத் தாராளமான நிதி உதவி.
5. அயல்நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களின் மூலம் உலக நாடுகளில் இந்தி பரப்பப்பட ஏற்பாடு.
6. வானொலி, தொலைக்காட்சி மூலம் இந்தித் திணிப்பு.
7. அண்மையில் திட்டப்பொருளாகவே இந்தி மொழி பரப்பும் பணி மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டமை.
8. மத்திய அரசு அலுவலகங்களில் உத்தியோக நியமனம் என்கிற போதும், உத்தியோக உயர்வு என்கிற போதும் போட்டிக்கு உரியவர்களில் இந்தியில் தகுதி பெற்றவர்கட்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று சமீபத்திய ஆணை.
9. இரண்டு மாதங்களுக்கு முன் தமிழ் ஒலிபரப்பில், "வானொலி" அகற்றப்பட்டு, "ஆகாஷ்வாணி" திணிப்பு. தமிழிரின் ஒருமுக எதிர்ப்புக்குப்பின் "ஆகாஷ்வாணி" மறைவு.
10. 15.8.82 முதல் தமிழகத்திலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் தொலைக்காட்சியில் நாடோறும் 1½ மணிநேரம் இந்தியில் நிகழ்ச்சிகள்.

அரசியல் சட்ட ஆதரவு, நாடாளுமன்றப் பெரும்பான்மை ஆதரவு, இந்தி பேசும் நாட்டவரின் ஒருமுக ஆதரவு ஆகிய இத்துணை வலிவான ஏற்பாடுகளையும் வைத்துக் கொண்டு -

1) மத்திய அரசு துறைகள் மூலமும்,
2) பள்ளிகள் மூலமும் இந்தி திணிக்கப்படுவது மிக மிக விரைந்து நிறைவேறி வருகிறது.

இத்தனை மூர்க்கமான திணிப்பை இனி தமிழகமோ, மேற்குவங்கமோ தனித்தோ, ஒன்றுபட்டோ எதிர்த்து நிற்க வழி ஏது?

**"கல்வி என்பது மாநில அதிகாரத்துக்கு உட்பட்டது" என்கிற உரிமை பறிக்கப்பட்டுவிட்டது. இனி மய்ய-மாநில அரசுகளின் அதிகாரத்துக்கு உட்பட்டது கல்வி.**

**கல்வியின் எல்லா நிலைகளிலும் இந்தி வருவதற்கு மிக மிக வலிவான ஆயுதமாக தில்லி ஆட்சிக்கு இந்த வாய்ப்பும் தரப்பட்டுவிட்டது.**

இவ்வளவு வலிவாக - ஆதிக்க வலிவுடன், சட்டப் பாதுகாப்புடன் வரும் இந்தியை ஆட்சி மொழி - அலுவல் மொழி - தொடர்பு மொழி என்கிற ஏதோ ஒரு பெயரால் எல்லா அனைத்திந்திய அரசியல் கட்சிகளும், கட்சி ரீதியில் ஆதரிக்கவே செய்கின்றன.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) என்பவை அனைத்திந்திய அளவில் மேற்கண்ட நிலையையே ஆதரிக்கின்றன. ஆனால் அவற்றின் மாநிலக் கிளைகள் - 1963ஆம் ஆண்டைய ஆட்சிமொழிகள் சட்டம் என்பதைக் காட்டி இந்தியை எதிர்க்க முன்வருகின்றன. அதிலும் தமிழகத்தில் திராவிட இயக்கங்கள் இதே எதிர்ப்பைக் காட்டுகிற போது தாங்கள் பின்தங்க முடியாமல் முன்வருகின்றனர்.

**1938 முதல் இந்தியை ஒழிப்பதில் நாட்டங் கொண்டு - அதற்கு ஒரு வழி நாட்டுப் பிரிவினை என முழங்கிய திராவிட இயக்கம் இப்போது நாட்டுப் பிரிவினை இயக்கமாக, அதிகாரப்பூர்வமாக இல்லை. இவ் இயக்கத்தின் பல பிரிவுகளிலும் உள்ள தனிப்பட்ட பலருக்கு நாட்டுப் பிரிவினையில் நாட்டம் இருக்கலாம்.**

**தேசிய காங்கிரஸ்கள், லோக் தளங்கள் போன்ற எந்தக் கட்சியும் இந்தியை எதிர்க்கின்றவை அல்ல.**

**இந்த நிலையில் இந்தி சடசடவென்று காட்டாற்று வெள்ளமாக வந்து சேருவதை, 1963 ஆம் ஆண்டைய ஆட்சி மொழிச் சட்டம் என்கிற மணற்கரையைக் கொண்டு தடுக்க வேண்டும் - தடுக்க முடியும் என்று கூறி, வெகுமக்கள் கண்களில் "இந்தி எதிர்ப்பாளர்" என எவர் காட்டிக் கொண்டாலும், இது, இந்த வெகுமக்களை ஏமாற்றுவதே ஆகும்.**

வாக்காளர்களாக இருப்பவர்கள் வெகுமக்கள் தானே. அவர்களைக் கவர நான் முந்தி - நீ முந்தி என்று போட்டிப் போட்டுக் கொண்டு கூரை மேல் ஏறி நின்று இந்தி எதிர்ப்புக் கூக்குரல் எழுப்புவது இனி பலன் தராது.

‘‘இந்தி எதிர்ப்பு’’ என்கிற கெட்டிக் கட்டடம் இடிந்து சரிகிறபோது, அதைத் தாங்கிட ஆமணக்குக் கொட்டைத் தடி எப்படிப் பயன்படும்? முருங்கைக்கிளை எப்படி முட்டுக்கு நிற்கும்?

பார்ப்பனரும், பனியாக்களும், பிற இந்திக்காரர்களும், அரசியல் சட்டம், ஏக இந்தியா, ‘‘இந்தியாவுக்கு ஆட்சி மொழியாக ஓர் இந்திய மொழிதான்’’ என்கிற மூடத் தனங்களுக்கு ஆட்பட்டு காங்கிரிட்டுக் கட்டடம் கட்டி, அதை நிலைக்க வைக்க புளியங்கால்களை தேக்கம் விட்டங்களைத் தேடிக்கொண்ட நிலையில் - இரும்புத் தடிகொண்டு இவற்றை அடித்து - டைனமைட் வைத்து உடைத்து நொறுக்கி, ‘‘ஏக இந்தியா’’ என்கிற கட்டடத் தைத் தூளாக்க முன்வராமல் ‘‘நேரு தந்த உறுதி மொழியை அன்னாரின் செல்வ மகளான இந்திரா காந்தி கடைபிடிக்க வேண்டும் என்று வாயிலும் எழுத்திலும் சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கதைப்பதால் - வேண்டுகோள் விடுப்பதால் இனி ஆவப்போவது என்ன?’’

‘‘அந்த 1963ஆம் ஆண்டு உறுதிமொழி’’ கூறுவது தான் என்ன?

‘‘இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் இந்தியுடன் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக நீடிக்கும்’’ என்கிற வடிகட்டிய அயோக்கியத்தனமான உறுதிமொழி தானே நேரு தந்தது?

ஆட்சிமொழி இந்திதான்.

ஆங்கிலம் இணை ஆட்சிமொழியாக இருக்கும்.

இந்தி பேசாத மக்கள் விரும்பிகிற வரையில் இந்த நிலைமை நீடிக்கும்.

**இந்த வாசகங்களின் அமைப்பில் எது உண்மை? எப்படி உண்மை? எப்படிச் சரி?**

**இந்திதான் ஆட்சி மொழி என்பதற்குச் சட்டப் பாதுகாப்பு கெட்டியாக இருக்கிறது.**

**ஆங்கிலம் இணை ஆட்சி மொழி என்பது இந்தியா முழுவதற்கும் பொருந்த வேண்டும். ஆனால் இன்று பீகாரில், உ.பி.யில், ம.பி.யில் ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக இல்லை.**

இந்தி பேசாத தென்மாநிலங்களில் காங்கிரஸ் ஆண்டு வருகிற மூன்று மாநிலங்கள் இந்தியை ஏற்றுக் கொண்டுவிட்டன.

திராவிடக் கட்சி (திராவிடர் கட்சி அன்று!) ஆளுகை யில் இருந்த-இருக்கிற தமிழகப் பள்ளிகளில், கல்லூரி களில் இந்தியை ஏற்கவில்லை.

ஆனால் இனி மேற்கொண்டு முதலில் கல்லூரி களிலும், அடுத்து பள்ளிகளிலும் இந்தியைப் புகுத்தத் தேவையான கல்வித் துறை அதிகாரத்தை மத்திய ஆட்சி 1982இல் வலிந்து பெற்றுக்கொண்டது.

இந்தக் கண்கூடான நிலைமைகளைக் கொண்டு தமிழர்கள் உணர வேண்டியது என்ன?

1. **1963ஆம் ஆண்டைய நேருவின் உறுதி மொழியை - ஆட்சிமொழிச் சட்டத்தைக் காட்டி நம் மக்களிடம் இந்தி எதிர்ப்பு நாடகம் ஆடுவது ஏமாளித்தனம்; ஏமாற்றுத்தனம்; கோமாளித்தனம் என்பதை உணர வேண்டும்.**
2. **‘‘ஏக இந்தியா’’ என இருக்கும் வரையில், இந்தி - வானொலியில், தொலைக்காட்சியில், பள்ளியில், கல்லூரியில், உத்தியோக நியமனத் தில், உத்தியோக உயர்வில் புகுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த எந்தக் கொம்பராலும் இன் றைக்கும், நாளைக்கும், என்றைக்கும் முடி யாது - முடியாது என்பதை வெகுமக்களுக்கு உணர்த்த வேண்டும்.**
3. **‘‘ஏக இந்தியா இருக்கலாம் - தமிழகமும் அதில் ஓர் அடிமை மாநிலமாக இருக்கலாம்’’ என்றால், வெள்ளையன் காலத்தில் ஆங்கிலம் பெற்றிருந்த எல்லா நிலையிலும் இந்தி வந்தே தீரும் என்பதைத் துலாம்பரமாக வெகுமக்களுக்கு நாம் உணர்த்த வேண்டும்.**

**தமிழர் ஒவ்வொருவரும் இந்தி எதிர்ப்பு பற்றிய இவற்றை ஆய்ந்து தேர்ந்து உண்மையை உணர வேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.**

**- வே. ஆனைமுத்து**

**(சிந்தனையாளன் 21-8-1982)**

## ஓவியர் சாமி கங்காதரன் ஏழாம் ஆண்டு நினைவு நாள்



ஒரு நிகழ்ச்சிக்குப் பங்குகொள்ள வந்த பெரியாரை அவர் மேடையை விட்டு இறங்குவதற்குள், நேரி டையாகப் பார்த்துக் கொண்டே பெரியாரை தத்ரூபமாக ஓவிய மாக வரைந்து அவரிடம் காண் பித்து கையெழுத்து வாங்கியவர் ஓவியர் சாமி கங்காதரன் அவர் கள் (பெரியார் படம் வரைவது அவ்வளவு சுலபம் அல்ல).

06.01.1974-இல் தந்தை பெரியாரின் முதல் நினைவு நாள் திருச்சி இரங்கல் கூட்டத்திற்கு ஒரே இரவில் பெரியார் படம் வரைந்தவர்.

1979-இல் டெல்லியில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழாவிற்குப் பெரியாரின் உருவப் படங்களை உயிரோட்டமாக வரைந்தவரும் இவரே.

சாமி கங்காதரன் - சரோசா இணையர்களின் திருமணத்தைத் தி.பொ. வேதாச்சலனார் முன்னின்று நடத்தி வைத்தார்.

மறைந்த சாமி கங்காதரன் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது வாழ்விணையர் சரோசா-சாமி கங்காதரன் மற்றும் அவரது குடும்பத்தினர் ‘சிந்தனையாளன்’ வளர்ச்சி நிதியாக உருபா 1000/- அளித்தனர்.

செய்தி : இரா. கலியபெருமாள், திருச்சி

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

### இரா. பிரகாஷ் - த. தவமணி

கடலூர் நகரம் பி. கலியமூர்த்தி - மாயாவதி மகள் வழிப் பெயரனும், கோ. இராசேந்திரன் - சாந்தி இணையரின் மகனுமான பிரகாஷ்; பெரம்பலூர் மாவட்டம், முருக்கன்குடி க.வீரமுத்து-வள்ளியம்மை மகன்வழிப் பெயர்த்தியும், தனராசு-அன்பரசி இணையரின் மகளுமான தவமணி ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா கடலூர், திருப்பாதிரிப்புலியூர், வன்னியர் திருமண மண்டபத்தில், 11.11.2016 வெள்ளி காலை 9 மணிக்குச் சிறப்புற நடைபெற்றது.

அதனை ஒட்டி, 10.11.2016 வியாழன் இரவு நடைபெற்ற பெண் அழைப்பு நிகழ்ச்சியில் வே. ஆனைமுத்து, புதுவை சீனு. அரிமாப் பாண்டியன், அரி. தமிழ்ச்செல்வி, ஆனை. பன்னீர்செல்வம், ஆ. வீரமணி, வீ. மலர்க்கொடி ஆகியோரும், 11 - காலை திருமண நிகழ்ச்சியில் ஆ.வெற்றி, விசயலட்சுமி இணையரும் மற்றும் முருக்கன்குடி இரா.சின்னசாமியும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### ப.த. காயத்ரி - டியூட் சைமன் அந்தோணி

தமிழ்நாடு, வேலூர், ஆர்க்காடு, புதேரியில் பிறந்து, தில்லிவாழ் தானப்பன்-கோ.பத்மா இணையரின் மகள் காயத்ரி; புதுதில்லி, வசந்த் குஞ்ச் வாழ் ஜேம்ஸ் அந்தோணி -சிந்தியா இணையரின் மகன் டியூட் சைமன் அந்தோணி ஆகிய, மதமறுப்பு-சாதி மறுப்பு மணமக்களின் திருமண விழா, புதுதில்லியில், இராசேந்தர் நகர், சிந்து சமாஜ் மண்டபத்தில், 11.11.2016 அன்று காலை 8 மணிக்குச் சிறப்புற நடைபெற்றது.

புதுமண மக்களுக்கான வரவேற்பு விழா, 19-11-2016 சனி இரவு 7 மணிக்கு, புதுதில்லி, இலட்சுமிபாய் நகர், NDMC Shad Ground என்னும் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

1979 முதல் புதுதில்லியில் வே. ஆனைமுத்துவுடன் இணைந்து செயல்பட்டுவரும் தோழர் புதேரி தானப்பன் -தோழியர் பத்மா ஆகியோரின் மகள் திருமணத்துக்கு வாழ்த்துத் தெரிவித்து, 17.11.2016 அன்று, வே.ஆனைமுத்து வாழ்த்து மடல் விடுத்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### த.மு. நாவரசன் - வி. வேகவதி (எ) கவிதா

கிருட்டிணகிரி மாவட்டம், ஒசூர் நகரம், முனுசாமி-தமிழ்ச்செல்வி இணையரின் மகன் த.மு. நாவரசனுக்கும், வேலூர் மாவட்டம், ஆர்க்காடு வட்டம், புதுமாங்காடு கிராமம் கோ. விநாயகம்-மல்லிகா இணையரின் மகள் வி. வேகவதி (எ) கவிதாவுக்கும் 7.11.2016 திங்கள் காலை 9 மணிக்கு ஒசூர் மீரா மகால் திருமண மண்டபத்தில் வாழ்க்கை ஒப்பந்த விழா கவிஞர் கலி. பூங்குன்றன் (திராவிடர் கழகத் துணைத் தலைவர்) தலைமையில் நடைபெற்றது. திராவிடமணி, க. வளவேந்தன், வி. சடகோபன், பி.வி. சிவக்குமார் ஆகிய தி.க. மாவட்டப் பொறுப்பாளர்கள் முன்னிலை வகித்தனர். ஒய். பிரகாசு, சட்டமன்ற உறுப்பினர் உட்பட ஏராளமான தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

### பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் மா. நாராயணசாமி மூத்தமகன் நா. பாண்டியன் மறைவுற்றார்!



1950 முதல் தந்தை பெரியாரின் பெருந்தொண்டராகவும், 15 ஆண்டுக் காலம் வரகூர் ஊராட்சித் தலைவராக விளங்கிய வரும், 1976 முதல் மா.பெ.பொ.க.வில் இணைந்து, 1988 முதல் பெரம்பலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளராகப் பணிபுரிந்து வருபவருமான வரகூர் மா. நாராயணசாமி அவர்களின் மூத்த மகன் - ஓய்வுபெற்ற மின் பொறியாளர் நா. பாண்டியன் அவர்கள், 16.11.2016 புதன் காலை 5.30 மணிக்கு, நேர்ச்சிக்கு ஆளாகி மறைவுற்றார் என்பதை அறிவிக்க மிகவும் வருந்துகிறோம். அன்னாருக்கு அகவை 65.

தம் மூத்த மகனை இழந்து துயருறும் மா. நாராயணசாமி, பாண்டியனின் துணைவியார் மற்றும் மக்கள், பாண்டியனின் உடன்பிறந்தோர் மற்றும் அரியலூர், இலந்தங்குழி உறவினர்கள் ஆகிய அனைவர்க்கும் மா.பெ.பொ.க. சார்பில் மனங்கசிந்த இரங்கலை உரித்தாக்குகிறேன்.

**வாழ்க நா. பாண்டியன் புகழ்!**

**22.11.2016** **- வே. ஆனைமுத்து**

### கவிஞர் தி.ர. விசயன் அவர்களின் 7ஆம் நினைவு நாள்

கவிஞர் தி.ர. விசயன் அவர்கள் காஞ்சியை அடுத்த திருமுக்கூடலில் பெரிய நெசவாளர் குடும்பத்தில் தோன்றியவர்.

இளமைக்காலம் முதல் அவருடைய தமையனார், தம்பி உள்ளிட்ட அனைவரும் தன்மானச் செயல்வீரர்களாகத் திகழ்ந்தவர்கள். அறிஞர் சி.என். அண்ணாதுரையுடனும், ஈ.வெ.கி. சம்பத்துடனும் இணைந்து செயல்பட்டவர்கள். தி.ர. விசயன் மா.பெ.பொ.க.வின் கைவாளாகச் செயல்பட்டவர்; சிறந்த பாவலர்; நல்ல நடிகர்.

அன்னார் 21-11-2009 இல் மறைந்தார். அவருடைய 7ஆம் நினைவு நாளை நினைவு கூர்ந்து, அவர்தம் துணைவியர் வள்ளி விசயன், கஸ்தூரி விசயன் குடும்பத்தினர் "சிந்தனையாளன்" வளர்ச்சி நிதியாக உருவா ஓராயிரம் வழங்கியுள்ளனர்.

அன்னாரின் அன்பு மருமகன் சி. ஆனந்தன், மகள் இராவணலீலா இணையரும், பெயரர்கள் ஷியாம், டால்ஸ்டாய் குடும்பத்தினர் உருவா 3,000/-வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளனர். நன்றி.

- ஆசிரியர் குழு

# வறட்சி நிவாரணம் வேண்டும்

2016 டிசம்பர் 1 வரை பருவ மழை பெய்யாமலும் நிலத்தடி நீர் இல்லாமலும் பாதித்து கொண்டு இருக்கும் பகுதி திருவண்ணாமலை மாவட்டமாகும். தொலை காட்சி ஊடகம், செய்தித்தாள் ஊடகம் இதுபோன்ற பாதிப்புகளை வெளிப்படுத்துவதில்லை. இவர்கள் ஊடகங் களின் வளர்ச்சிக்காக பெருமுதலாளிகளின் செய்தி களையும் கூத்தாடிகளின் செய்திகளையும் வெளியிடு கின்றனர். செய்திகளை மறைத்து திரித்து வெளியிடு வதே இவர்களின் வாடிக்கை.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து உழவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் உயிர் நாடியான உழவர்களை உடனே காப்பாற்ற ஒரு ஏக்கர் நிலத்துக்கு ரூ.30,000/-க்கு குறையாமல் அரசு வங்கிகள் மூலம் நிவாரணம் கொடுத்து உதவ வேண்டும். உழவர்களுடன் சேர்ந்து வாழும் ஆடு, மாடு, நாய், கோழி போன்றவைகளும் அழிந்துவிடும் நிலையில் உள்ளது. இதுபோன்ற இயற்கை அழிவிற்கு காரணம் நம்மை ஆட்சி செய்த அரசும் துணைபோன அதிகாரி களுமே காரணமாவார்கள். அனைத்து நீர்நிலைகளும் நம்மை ஆட்சிச் செய்த கட்சிகாரர்களே ஆக்கிரமித்து உள்ளனர். இதற்கு அதிகாரிகளும் துணையாக உள்ளனர். அதிகாரிகள் மனசாட்சியுடன் எந்த அரசியல்வாதிக்கும் அடிபணியாமல் பணி செய்தாலும் கட்சிகாரர்கள் செய்யும் அனைத்து குற்றங்களையும் அதிகாரிகள் துணிச்சலுடன் வெளிப்படுத்தினாலும் நாடு நலம் பெரும். நீர் நிலைகளை எந்த அரசியல்வாதிக்கும் துணை போகாமல் ஆக்கிரமிப்புகளை அதிகாரிகள் முன்னின்று அகற்றினால் உழவர்கள் காப்பாற்றப் படுவார்கள்.

இந்த ஆண்டு திருவண்ணாமலை மாவட்டத்தில் பொங்கல் விழா புது தானியங்களை வைத்து கொண்டாட முடியாது. கடவுளை காப்பாற்றும் கயவன் இயற்கையை அழிக்கும் அயோக்கியன், மக்களை சுரண்டும் மானம் கெட்டவன் நீர் நிலைகளை ஆக்கிரமித்த நீசன், நம்மை மீண்டும் ஏறிமிதிக்க ஓட்டு கேட்டு வரும் கேடு கெட்டவனை உங்களை கையாலேயே ஒழிக்க இப்பொழுதே நல்லவரைத் தேடுங்கள், தேர்ந்தெடுங்கள்.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி திசம்பர்-2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார் கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்ப்பென்னத்தூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இளவரசன்** தமிழ்க்களம் | அரியலூர் | 100/- |
| **பெரியசாமி** | அரியலூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - திசம்பர் - 2016

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்ப்பென்னாத்தூர் | .... | 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... | 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119